பக்கங்கள்: இருபத்து எட்டு + 6

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 14 புதன்கிழமை (30.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 004



14 அழுதும் பிள்ளையை அவன்தான் பெற்றாக வேண்டும்



21 ஈழத்தமிழர் விடயத்தில் ஜெ. இரட்டை வேடம்



25 வென்றது இந்தியா

## அரசுக்கு எதிராக ஐ.தே.க. ஆர்ப்பாட்டம் கூட்டமைப்பு, ஜே.வி.பி. பங்குபற்றவில்லை

கொழும்பு, நவ.30

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்குமாறு கோரியும், ஏனைய பல பிரச்சினைகளை முன்வைத்தும் அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்றுப் பிற்பகல் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று பிற்பகல் 2.45 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். விஹாரமகாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பமான பேரணி, நகர மண்டபம் ஊடாக ஹைட்பார்க் மைதானத்தை வந்தடைந்தது.

பெருந்திரளான ஆதரவாளர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து மாகாண, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

எனினும், ஏற்கனவே கூறியதைப்போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்பன இதில் கலந்துகொள்ளவில்லை. பக் 27

# படையினருக்கு தண்டனையா? அமைச்சர்கள் போர்க் கொடி

### மக்களைத் திரட்டி வீதியில் இறங்குவதற்கு முயற்சி

கொழும்பு, நவம்பர் 30

போர்க்குற்றம் புரிந்தனர் என இனங்காணப்படும் இராணுவத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் அரசின் உத்தேச யோசனைக்கு கடும்போக்குக் கொள்கையுடைய அமைச்சர்கள் சிலர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர் என நம்பகரமாகத் தெரியவருகிறது. அரச தலைமையுடன் இந்த விவகாரம் தொடர்பில் நேரடியாகப் பேச்சு நடத்தவுள்ள இந்த அமைச்சர்கள் இதன்போது, தமது உறுதியான நிலைப்பாட்டை ஆணித்தரமாக எடுத்துரைப்பர் எனக் கூறப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி அதன் உள்ளடக்கங்கள் கசிய ஆரம்பித்துள்ள நிலையில், கொழும்பு அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அதேவேளை, அரச தரப்புக்குள் கருத்து முரண்பாடுகளும் உருவாக ஆரம்பித்துள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு அமைய இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் பேரினவாதச் சக்திகள் வீதியில் இறங்கி மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளன. இந்த விடயங்கள் குறித்து இரகசியப் பேச்சுகளும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

படைத்தரப்பினர் எதிர்நோக்கவுள்ள ஆபத்துக் குறித்து உள்ளூர அறிந்துவைத்துள்ள அந்த அமைச்சர்கள், தங்களது மதத் தலைவர்கள், கடும்போக்குடைய சிங்கள அமைப்புகள் உட்பட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுக்கு இதுவிடயம் தொடர்பில் விரிவான விளக்கமொன்றை அளிக்கவும் முடிவு செய்துள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

தாய் நாட்டை மீட்டெடுத்த இராணுவத்தினருக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கையும் வேண்டாம் என்ற உறுதியான தகவலை தேரர்கள், நாட்டுப்பற்றுள்ள அமைப்புகள் ஊடாகவும் அரச தலைமைக்கு உறுதிபட அறிவிப்பதற்கு மிகவும் சூட்சுமமான முறையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது. பக் 27

## அனைத்துச் சிறைகளிலும் தமிழ்க் கைதிகள் இன்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், நவ.30

நாட்டிலுள்ள அனைத்துச் சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று புதன்கிழமை ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீது சிறை அதிகாரிகள் கடந்த 27 ஆம் திகதி மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்தே இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

சோதனை நடவடிக்கை என்ற போர்வையில் அனுராதபுரம் சிறையில் 65தமிழ்க் கைதிகள் ஆடைகள் களையப்பட்டு சிறை அதிகாரிகளினால் மோசமாகத் தாக்கப்பட்டனர்.

இதனைக் கண்டித்தும் சிறைக் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் அனைத்துச் சிறைகளிலும் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். பக் 27

## மாயமான மாணவன் நேற்றுத் திரும்பினார்

யாழ்ப்பரணம், நவ. 30

காணாமற்போனார் என்று தெரிவிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவன் வேதாரணியம் லதீஸ் (வயது 25) நேற்று அதிகாலை வீடு திரும்பினார். அவர் கடத்தப்பட்டாரா என்பது தொடர்பில் தகவல்கள் எதுவும் இல்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் இவர் காணாமற்போயிருந்தார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. இவர் செவ்வாய் அதிகாலை, கைதடியில் தங்கியிருக்கும் விடுதிக்கு பஸ்ஸில் திரும்பினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பக் 27

## போர் முடிந்ததன் பின்னர் தான் தமிழரின் பிரச்சினை அதிகரிப்பு

### அகாஷியிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

கொழும்பு, நவ.30

போர் முடிந்த பின்னர்தான் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் அதிகரித்திருக்கின்றன என்று தெரிவித்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியுடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்துப் பேசினர். அப்போது "போர் முடிந்துவிட்டபோதும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு உரிய நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை'' என்று சுட்டிக்காட்டினர்.

இரா. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பக் 27

## வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டோருக்கு இன்றுவரை சமுர்த்தி நிவாரணம் வழங்காதது ஏன்?

### சபையில் கேட்டார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, நவ.30

யுத்தம் முடிவடைந்து இரு வருடங்களுக்கு மேலாகியும் வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு ஏன் இன்னமும் சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்கப்படவில்லை - என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ் நாடாளுமன்றில் நேற்றுக் கேள்வியெழுப்பினார்.

நாட்டில் வறுமைநிலை அதிகரித்துள்ளது என்பதை ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. ஜனாதிபதியே வறுமையை ஒழிக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொண் பக் 27

## உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகளை அனுமதியோம்

### சபையில் பீரிஸ்

கொழும்பு, நவ.30

உள்நாட்டு விடயங்களில் தீர்மானம் எடுக்க வெளிநாடுகளை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். எமது விடயங்களை நாமே தீர்த்துக்கொள்வோம்.

- இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வகட்சிப் பிரதிநிதிகள் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளனர் என்றும் அவர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட விவா பக் 27

## அக்கிரமத்துக்கு அளவேயில்லையா?

யாழ்ப்பாணம், நவ.30

மாவீரர் வாரம் முடிவுற்ற நிலையில் நேற்றும் யாழ்.நகரில் சில கோயில்களில் மணி அடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

யாழ்.நகரில்-வண்ணார் பண்ணைப் பகுதியில் உள்ள அம்மன் கோயிலில் நேற்று மதியம் பெண் அடியார்கள் கூடி இருந்தனர். நேற்று பக் 27

## வளலாய் மீள்குடியமர்வு; சென்ற மக்கள் கண்ணீர்



யாழ்ப்பாணம், நவ. 30

சுமார் 20 வருடங்களின் பின்னர் வளலாய் மக்களில் ஒரு பகுதியினர் தமது சொந்த வீடுகளையும் காணிகளையும் நேரில் பார்ப்பதற்கு இராணுவத்தினர் நேற்று அனுமதியளித்தனர். அவற்றைப் பார்த்த மக்கள் தமது சொத்துக்களின் நிலை கண்டு கண்ணீர்விட்டனர். தமது வீடுகளைக் காணிகளைப் பார்ப்பதற்காக வெளிநாட்டில் இருந்துகூடச் சிலர் வந்திருந்தனர். அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

வளலாய் சித்தி விநாயகர் கோயிலில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹந்த ஹத்துருசிங்க மற்றும் அரச அதிபர் ஆகியோர் உரையாற்றினர். அத்துடன் பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழைக்கான சாத்தியமும் உள்ளது.

# கரைச்சி பிரதேச சபை களஞ்சியம் உடைப்பு; பொருள்கள் அபகரிப்பு

**சுதந்திரக் கட்சி நீலப்படையணி அடாவடி**

கிளிநொச்சி, நவ.30

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருள்கள் சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நீலப் படையணியினால் அபகரிக்கப் பட்டுள்ளதாகப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் களஞ்சிய அறை தனியார் காணி ஒன்றில் அமைந்துள்ளது. "நேற்று மதியம் களஞ்சிய அறைக்கு வந்த சிலர் பூட்டுக்களை உடைத்து அங்கிருந்த பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். விசாரித்ததில் அவர்கள் கிளிநொச்சி சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இருந்து வந்தவர்கள் என்று தெரிந்தது. அதனால் தான் அவர்களுக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம்" என்று கூறினார் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராஜா.

48-7928 இலக்கமுடைய 'எல்வ்' ரக வாகனத்தில் வந்தவர்களாலேயே பொருள்கள் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தமது முறைப்பாட்டைப் பதிவதற்கு முதலில் மறுத்தார்கள் என்றும் சுதந்திரக் கட்சியினருடன் பேசி சமாதானமாகச் செல்லுமாறு கூறினார்கள் என்றும் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

சுதந்திரக் கட்சி அலுவலகத்துக்குச் சென்று பிரதேச சபை ஊழியர்கள் கேட்டதற்கு "தனியார் காணியில் இருந்ததால் தாங்கள் பொருள்களை எடுத்து வந்தனர்" என்று கூறப்பட்டதாகவும் தெரிகிறது.

சம்பவம் குறித்து சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலியுடன் தொடர்புகொண்டு கேட்டபோது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவரும் இந்தச் சம்பவத்தில் தொடர்புபடவில்லை என்று கூறினார். நீலப்படையணியினர் ஏதாவது செய்தார்களா என்பது பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றார். (உ-15,426)

# தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

கொழும்பு, நவ. 30

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது ரோந்து சென்ற இலங்கைக் கடற்படையினர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் ஒரு படகில் சென்ற மீனவர்கள், படகு சேதமானதால் இலங்கையில் உள்ள நெடுந்தீவில் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்க இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங-சி)

# ஆசிரியை கொலை தொடர்பாக சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, நவ. 30

திருமலை, மூதூர் கிழக்கு - பாட்டாளிபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய குருகுலசிங்கம் சிறிவதனி வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பூர் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் இருவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் தமிழர்கள் என்று பொலிஸ் வட்டாரங் கள் தெரிவித்தன. தற்போது இருவரும் பொலிஸாரால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். ஆசிரியை அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையிடவே அவர் கொல்லப்பட்டார் எனப் பொலி ஸாரின் பூர்வாங்க விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

இவர்கள் இருவரும் பல குற்றச்செயல்களில் முன்னரும் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (ங-சி)

# கிளாலியில் மீள்குடியேறிய மக்களுக்கு விரைவில்நிரந்தர வீடுகள் அமைப்பு

சண்டிலிப்பாய்,நவ.30

கிளாலியில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் முகுந்தன் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் போர் முடிவுக்கு வந்த பின்னர் வெடி பொருள்கள் அகற்றப்பட்ட இடங்களில் படிப்படியாக மீள்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

கிளாலிப்பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் கடந்த வாரம் மீள்குடியமர்த்தப்பட்டு தற்காலிக குடிசைகளில் வசித்து வருகிறார்கள்.அந்த மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ள சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம், 2012 ஆம் ஆண்டிலிருந்து இதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது. ஒவ்வொரு வீடும் தலா 5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வசதிகருதி போர் காலத்தின் போது பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்ட 10 கிலோ மீற்றர் நீளமான மண் அணை "என்றிப்" திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகிறது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு யுத்தத்தினால் சேதமடைந்த நிலையிலுள்ள ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் 50 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவிருக்கிறது இதற்கான நடவடிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மேற்கொண்டுள்ளார். இதேவேளை காசுக்கான வேலைத் திட்டத்திலும் இந்தப் பகுதியில் 150 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். (ங-115)

# சிறைச்சாலைகளில் தொடரும் தாக்குதல்கள் குறித்து சர்வதேசத்திடம் முறையிட கைதிகள் தீர்மானம்

கொழும்பு, நவ.30

தங்களுக்கு எதிராகச் சிறைச்சாலைக்குள் கட்டவிழ்த்துவிடப்படும் தொடர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சர்வதேசத்திடம் முறையிடுவதற்கு தமிழ் அரசியல் கைதிகள் தீர்மானித்துள்ளனர் என அறியமுடிகின்றது.

அநுராதபுரத்தில் தமிழ்க் கைதிகள்மீது மேற்கொள்ளப் பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து இலங்கையில் உள்ள அரசியல் கைதிகள் அனைவரும் இன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கின்றனர்.

இலங்கையிலுள்ள சிறைச் சாலைகளில் தடுத்துவைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கைதிகளின் விடுதலை ஆகியவை உட்பட சில முக்கிய அம்சங்களை கடிதம் ஊடாக சர்வதேசத்திடம் சுட்டிக்காட்ட தமிழ்க் கைதிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 880 தமிழ் அரசியல் கைதிகளின் இணக்கப்பாட்டுடன் எழுதப் படும் இந்தக் கடிதம் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, ஆசிய மனித உரிமைகள் அமைப்பு, ஐ.நாவின் சித்திரவதைகளுக்கு எதிரான அமைப்பு உட்பட சர்வதேச அமைப்புகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது எனத் தெரியவருகிறது.

தங்களுக்கு சிறைச்சாலைகளுக்குள் நேரும் அவலங்களை எழுத்துருவில் வடிவமைக்கும் தமிழ்க் கைதிகள் அந்தக் கடிதத்தில்,

* நீண்டகாலமாக விசாரணையின்றி தடுத்துவைப்பு.
* கைதிகளுக்கு நேரும் அவலங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதுவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமை.
* அரசியல் கைதிகள் தொடர்ச்சியாகத் தாக்கப்படுதல்.
* தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்காமை.
* பல்வேறு தாக்குதல் சம்பவங்கள் சிறைச்சாலைகளுக்குள் இடம்பெற்றும், அந்தச் சம்பவங்கள் தொடர்பாக முறையான விசாரணையின்மை உட்பட சில முக்கிய விடயங்களை உள்ளடக்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி, தமிழ்க் கைதிகளுக்கு தொடர் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணங்களையும் கடிதத்தில் அவர்கள் சுட்டிக்காட்டவுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் சிங்களக் கைதிகளையும், தமிழ் அரசியல் கைதிகளுடன் சிறை வைத்தல், உணவுப் பற்றாக் குறை, குடிதண்ணீர் பற்றாக் குறை ஆகிய அடிப்படைப் பிரச்சினைகள் முதன்மை வகிக்கின்றன.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு துரித நடவடிக்கை எடுக்காமை, தொடர் தாக்குதல் சம்பவங்கள், அடக்குமுறை ஆகியவை சர்வதேச சமூகத்தை நாடவேண்டிய நிலைக்கு எம்மைத் தள்ளியுள்ளது என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து அனைத்திலங்கை தமிழ் அரசியல் கைதிகள் இன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சில முக்கிய கோரிக்கைகளையும் அவர்கள் முன்வைக்கவுள்ளனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-சி)

# உண்ணாவிரதத்தை நிறுத்துங்கள்! கைதிகளுக்கு சிறை அதிகாரி எச்சரிக்கை

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்தை உடன் நிறுத்துமாறு சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று கடுந்தொனியில் எச்சரித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

தங்களது உறவுகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை சிறைச்சாலை அதிகாரிகள் கொச்சைப்படுத்தியுள்ளனர் என்று கவலை வெளியிட்டுள்ள தமிழ்க் கைதிகளின் உறவினர்கள், அரசு அவர்களின் கோரிக்கையை ஏற்கவேண்டும் என்றும் உருக்கமான முறையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தாம் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், இரண்டு அம்சக் கோரிக்கையை முன்வைத்தும் தமிழ் அரசியல் கைதிகள் கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று அநுராதபுரம் சிறைச்சாலைக்கு விரைந்த நீதி அமைச்சின் ஆலோசகர் ஒருவர் கைதிகளிடம் வாக்குமூலம் திரட்டியுள்ளார்.

எனினும், கைதிகளின் கோரிக்கைகளுக்கு அவர் எதுவிதப் பதிலையும் வழங்கவில்லை என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

* தமது பாதுகாப்பை அதிகாரிகள் உறுதிப்படுத்தவேண்டும்.
* எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறாது என எங்களை நேரில் சந்தித்து சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உறுதியளிக்க வேண்டும்.

- ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். சுமார் 65 கைதிகள் இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ங-சி)

# நிகழ்வுகள்

**வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தின் வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மிருசுவில் பொதுநூலகத்தில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் சி.துரைராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ். தேசியகல்வியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.


**பரிசளிப்பு விழா**

அச்சுவேலி, [illegible] வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அதிபர் த.உதயநாதன் தலைமையில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறவுள்ளது. (ங-11)

**சேவை நலன் பாராட்டு**

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகராகக் கடமையாற்றும் நாகேசர் இராசலிங்கத்தின் சேவை நலன் பாராட்டு நிகழ்வு பிற்பகல் 2மணிக்கு இல்லத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20 வருடங்களுக்கு மேலாக படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த இடைக்காடு, வளலாய் பகுதிகளில் மக்கள் மீள்குடியேற அனுமதி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர். இரு தசாப்தங்களுக்கு பின்னர் தமது வீடுகள், நிலங்கள் என்பவற்றை பார்வையிட்டு அவற்றின் தற்போதைய நிலையைக் கண்டு மக்கள் கண்ணீர் மல்கினர்.

# இழப்புகளையும் துயர்களையும் மீட்டுப்பார்க்காமல் எதிர்காலம் சிறப்படைய ஒன்றுபட்டு வாழ்வோம்

## வளலாய் மீள்குடியமர்வு நிகழ்வில் யாழ். தளபதி ஹத்துருசிங்க

அச்சுவேலி,நவ.30

கடந்தகால இழப்புக்களையும் துயரங்களையும் மீள மீள நினைத்துக்கொண்டிராமல் எதிர்காலம் சிறக்கும் வகையில் நல்ல சிந்தனையுடன் ஒன்றுபட்டு வாழ்வோம். மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் - இருப்பிடங்களில் - மீண்டும் வாழ, அந்த இடங்களை அவர்களிடம் ஒப்படைக்கும் செயற்பாடுகளை தொடர்ந் மேற்கொள்வேன். அவர்களுக்கு மகிழ்வான வாழ்வு கிடைப்பதற்கு என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளேன்.

இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

வளலாய் - இடைக்காடு கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்தும் ஆரம்ப நிகழ்வுகள் வளலாய் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு தளபதி ஹத்துருசிங்க தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:

நான் 2வது லெப்டினன்ட் ஆக பலாலியில் கடைமையாற்றிய 1983 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் இந்தப்பிரதேசம் எது விதமான பாதிப்புக்களும் இன்றி இயல்பு நிலையில் மக்கள் குடியிருந்தனர். அதற்குப்பிந்திய காலப்பகுதியில் ஏற்பட்ட நிகழ்வுகள் பல்வேறு பாதிப்புக்களை மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தியது. கடந்த கால இழப்புக்களை, பாதிப்புக்களை மீட்டுப்பார்ப்பதில் எந்தவிதமான நன்மையும் இல்லை. எதிர்காலத்தில் சுபீட்சமாக நலமுடனும் வாழ அமைதி நிலவ உழைப்போம்.

மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்கள் மீள் குடியமர்த்தப்படுவர். அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான பாடசாலை மற்றும் பொது அமைப்புக்கள் குறுகிய கால இடைவெளியில் உருவாக்கப்படும். மீளக்குடியமரவுள்ள மக்களின் கணிசமான அளவு தேவைகள் நிறைவு செய்யப்படும்-என்றார்.

அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றும் போது:-

கடந்த இரண்டு வருட காலத்தில் பாதுகாப்பு வலயங்கள் அமைந்திருந்த ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் 35 ஆயிரம் குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு தரப்பினர் 1776 வீடுகளை இதுவரை அமைத்து பொதுமக்களுக்கு வழங்கியுள்ளனர். விமர்சிப்பவர்கள் குறை கூறுபவர்கள் இது வரை ஒரு வீட்டைத்தானும் அமைத்துக் கொடுத்துள்ளனரா?

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைக் குடும்பங்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் 5 பேர் சேர்ந்தாலும் ஒரு வீட்டை அமைத்துக் கொடுங்கள் என்று நான் பல தடவை கோரிக்கை விட்டுள்ளேன். இது வரை ஒரு வீடுதானும் அந்த வகையில் நிர்மாணிக்கப்படவில்லை.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க எனது சகோதரன் போன்று எனது கோரிக்கைகளை நியாயமானமுறையில் நிறைவேற்றி வருகின்றார். மீள்குடியமர்வு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி போன்ற விடயங்களில் மனித நேயத்துடன் நடந்து கொள்கின்றார்-என்றார்.

வளலாய் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளில் பாதுகாப்பு தரப்பினரும் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-11)

# படையினரால் கட்டாயப்படுத்தப்பட்டு விற்கப்பட்டு வரும் அதிஷ்டலாபச்சீட்டு

யாழ்ப்பாணம்,நவ.30

விஜயபாகு காலாட் படைப் பிரிவினரின் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கைக்காக குருநாகலில் மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயம் நடத்தப்படவுள்ளது.

இதற்கான 50 ரூபா நுழைவுச்சீட்டுக்கள் யாழ்ப்பாணத்தில் படையினரால் கட்டாயப் படுத்தி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குருநாகலில் உள்ள போயகன மோட்டார் ஓட்டப் பந்தயத் திடலில் இந்தப் போட்டி மார்ச் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த பந்தயத்திற்கான 50 ரூபா பெறுமதியான டிக்கெட் படையினரால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த டிக்கெட் அதிஷ்டலாபச் சீட்டாகவும் குலுக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் மீசாலை, புத்தூர் சந்திப் பகுதியில் வாகனத்தில் சென்றவர்களை மறித்த படையினர் மேற்படி அதிஷ்டலாபச் சீட்டை வாங்குமாறு கோரியுள்ளனர். அதற்கு, இதில் சிங்களத்தில் எழுதியிருப்பதால் ஒன்றும் விளங்கவில்லை, இது எங்களது பிரதேசத்தில் நடக்கவில்லையே என்று வாகனச் சாரதி பதிலளித்துள்ளார்.

அதற்கு படையினர் மேற்படி சாரதியின் வாகன அனுமதிப்பத்திரத்தை பறித்துள்ளனர். அதிஷ்டலாபச் சீட்டை வாங்கிய பின்னரே அதனை வழங்கியுள்ளனர். அத்துடன்படையினர் வீதியால் போவோர் வருவோரிடம் மேற்படி அதிஷ்டலாபச் சீட்டைகட்டாயப்படுத்தி விற்பனை செய்து வருகின்றனர். (ஒ-15)

# பொலிகண்டியில் நேற்று அதிகாலை வீடொன்றில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,நவ.30

வல்வெட்டித்துறை, பொலிகண்டிப்பகுதியில் நேற்று அதிகாலை வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது, ஓட்டினை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் நகை, பணம் உட்பட பெறுமதியான பொருள்களை களவாடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வல்வெட்டித்துறை, பொலிகண்டிப்பகுதியில் சின்னாவளை என்ற இடத்தில் நேற்று அதிகாலை வீட்டிலுள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். அந்த வேளை வீட்டின் ஓட்டினைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலுள்ள பெறுமதியான பொருள்களை களவாடியுள்ளனர்.

சுமார் 4 லட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், இரண்டு கைத்தொலைபேசிகள் மற்றும் 5000 ரூபா பணம் என்பனவே களவாடப்பட்டுள்ளன. இந்த திருட்டுச் சம்பவம் அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் தகவல் தருகையில் இச்சம்பவம் குறித்து நேற்றுக் காலை எமக்கு தகவல் கிடைத்தது குறித்த களவு நடந்த இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினோம். தொடர்ந்தும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது. இது தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்தனர். ( ந-319)

# முன்னாள் போராளிகளை சமூகமயப்படுத்தும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.30

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பின் முன்னாள் போராளிகளை புனர்வாழ்வளிப்பட்டபின் சமூகமயப்படுத்தும் நிகழ்வு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது முன்னாள் போராளிகள் நூறுபேருக்கும் அதிகமானோர் விடுதலை செய்யப்படவுள்ளனர். நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர ஸ்ரீ கஜதீர கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் எ.திஸநாயக்க, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், வடமாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோரும் கலந்துகொள்வர். (ந-14)

# டெங்கு ஒழிப்பு புகையூட்டலில் ஈடுபட்ட பணியாளர் மீது கட்டுவனில் தாக்குதல்

## கண்டிக்கின்றனர் சுகாதார சேவையினர்

யாழ்ப்பாணம்,நவ.30

நேற்று முன்தினம் மாலை கட்டுவன் மேற்கில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக புகையூட்டல் பணியில் ஈடுபட்டிருந்த சுகாதாரப் பணியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து யாழ். சுகாதார சேவைகள் பணிமனை மிக வேதனையுடன் கண்டித்துள்ளது.

எமது பணியாளர்கள் மது போதையில் வந்தவர்களால் தாக்கப்பட்டதை அந்தப்பகுதி மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. ஏமாற்றம் அளிக்கிறது. அந்தக்கிராம மக்களின் நலனுக்காக பணியாற்றியவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதனைத் தடுக்க ஊர் மக்கள் முன்வரவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

இவ்வாறு சுகாதார சேவைகள் யாழ். பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தெல்லிப்பழை சகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கட்டுவன் மேற்கு கிராமத்தில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. அதை அடுத்து இப்பிரதேசத்தில் டெங்குநோய் பரவாமல் தடுக்கும் முகமாக எமது பணியாளர்களால் புகையூட்டல் நடவடிக்கை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலையும் மாலையும் மேற்கொள்ளப்பட்டது. நேற்று மாலையில் புகையூட்டல் நடைபெற்றுக்கொண்டிருந்த போது மது போதையில் வந்த சிலர் எமது பணியாளர்களுடன் முரண்பட்டு, அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் அவர்கள் புகையூட்டல் நடவடிக்கைகளை இடைநிறுத்திவிட்டு தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக பணிமனை திரும்ப நேரிட்டது. சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த வெளிக்கள பணியாளர்கள் டெங்கு நோயிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க இரவு பகலாக வெயிலிலும் மழையிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணிபுரிகின்றனர். இந்த நிலையில் இத்தகையதோர் சம்பவம் நடைபெற்றது எமக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

டெங்குத்தடுப்பு நடவடிக்கையானது பொதுமக்களின் நன்மை கருதியே மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு அந்தந்தப் பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எதிர் பார்க்கின்றோம். மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்ட பிரதான நபர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம் இவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.

சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு. எனவே எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று எதிர் பார்க்கின்றோம்-என்றுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச் சந்தைக்கு மின்சாரம் இல்லை இருட்டியதும் இடர்களுடன் வியாபாரம்



மல்லாவி,நவ.30

மல்லாவியில் இயங்கும் பொதுச் சந்தை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருவதால் சந்தையில் வியாபாரத்தை மேற்கொள்ளும் வர்த்தகர்களும், நுகர்வோர்களும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்தச் சந்தைக்கு இன்னமும் மின்சார இணைப்பு பெறப்படாததால் இரவு வேளைகளில் இங்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய வருவோரும், சந்தை வியாபாரிகளும் இடர்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

குறிப்பாக அரச உத்தியோகத்தர்களும் ஏனைய நிறுவனங்களில் பணிபுரிவோரும் தமது கடமை முடிந்து இரவு வேளையில் பொருள்களை வாங்குவதற்கென இங்கு வருவது வழக்கமாகும்.ஆனால் போதிய வெளிச்சம் இல்லாததால் இவர்கள் பொருள்களைப் பார்த்துக் கொள்வனவு செய்வதில் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதனை விட மீன், கோழி ஆகியன விற்பனை செய்யுமிடம் சீராகப் பராமரிக்கப்படாமையால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அருகிலுள்ள வீதியில் செல்வோர் முகம் சுளித்தவாறு மூக்கைப் பொத்தியடி செல்கின்றனர்

சந்தையின் பிரதான வாயிலுக்கு கதவே இல்லை. இதனால் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகள் சந்தைப் பகுதியை அசுத்தம் செய்து வருகின்றன.

எனவே உரியவர்கள் இனியும் காலதாமதம் செய்யாது இந்தச் சந்தையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதே இப்பகுதி மக்களின் வேண்டுகோளாக உள்ளது. (க-425)

# குளங்களிலிருந்து வெளியேறும் நீரால் அம்பலப்பெருமாள் குளத்தில் பயிர் அழிவு

அக்கராயன்,நவ.30

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முக்கிய குளங்களான கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய இரண்டு குளங்களும் வான் பாய்ந்து கொண்டிருப்பதன் காரணமாக அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் 200 ஏக்கர்களுக்கு மேலான வயல்களில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாக இந்தப் பகுதிக்கான கமக்கார அமைப்பின் தலைவர் மு. சின்னத்தம்பி தெரிவித்துள்ளார்.

இரு குளங்களிலிருந்தும் வெளியேறிக் கொண்டிருக்கும் நீர் அம்பலப்பெருமாள் குள வயல் நிலங்களினூடாகப் பாய்ந்து கொண்டிருப்பதன் காரணமாக முளைத்த பயிர்களை எல்லாம் வெள்ளம் அள்ளிச் சென்றுவிட்டதாகவும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெருமளவு பணம் செலவு செய்து விவசாய முயற்சிகளில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் நட்டமடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு குளங்களின் நீரும் வெளியேறிச் செல்லும் ஆறுகள் புனரமைப்பு மற்றும் துப்புரவு செய்யப்படாமையினால் நீர் அம்பலப்பெருமாள்குள வயல் நிலங்களின் ஊடாகப் பாய்ந்து சென்று பெரும் பயிர் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. (க-410)

## வள்ளத்தைத் தேடும் வெள்ளம்...




*உட்புகும் நிலையில்:* தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட பெரு வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் தேங்கிக் காணப்படுகின்றது. (415)

# மல்லாவியில் மீன் விலை உச்சம் நுகர்வோர் பெரும் திண்டாட்டம்

துணுக்காய், நவ.30

மல்லாவிப் பொதுச் சந்தையில் மீனின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளமையால் நுகர்வோர் மிகவும் பாதிப்படைந்து வருகின்றனர்.



மன்னார் குடாவின் அண்டிய கடற்கரைப் பகுதிகளான தேவன் பிட்டி, மூன்றாம் பிட்டி, நாச்சிக்குடா போன்ற பகுதிகளிலிருந்து மீன்களை மல்லாவி மீன் வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர்.

நீண்ட தூரத்தில் இருந்து கொள்வனவு செய்யப்படும் நல்ல இன மீன்களின் விலையே அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒரு கிலோ விளைமீன் ரூபா 300 தொடக்கம் 350 வரையும் விற்கப்படுகின்றது. ஏனைய மீன்கள் 200 ரூபா தொடக்கம் 250 ரூபா,150 ரூபா வெனப் பல்வேறு விலைகளில் விற்கப்படுகின்றன.

இதேவேளை வெள்ளாங்குளத்துக்கும் மல்லாவிக்கும் இடைப்பட்ட தூரம் 22 கிலோ மீற்றர் ஆகும். இருப்பினும் நுகர்வோரைப் பாதிக்காத வண்ணம் மீனின் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென வியாபாரிகளை மக்கள் கேட்டுள்ளனர்.

(க-415)

## மகிழ்ச்சிகரமான கற்றல் செயலமர்வு

கிளிநொச்சி,நவ.30

கிளிநொச்சி முரசுமோட்டை அ.த.க.பாடசாலையில் மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடு தொடர்பான செயலமர்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி செயலமர்வு முரசுமோட்டை அ.த.க.பாடசாலையில் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் நடைபெற்றுள்ளது.

இதில் விசேட கல்விக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ரேணுகா ஜீவரட்ணம், அழகியல் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் த.மயூரன், கண்டாவளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு எதிர்காலக் கல்வி தொடர்பாகவும் சிறார்களின் மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடுகள் பற்றியும், விளக்கவுரைகளை வழங்கியதுடன் பல்வேறு கருத்துக்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. (க-6)

# பாம்பு தீண்டிச் சிறுமி மரணம்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கன்னார் கிராமத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாம்பு தீண்டி மரணமானார்.

மரணமானவர் கன்னார் கிராமத்தைச் சேர்ந்த 14 வயதான தவச்செல்வன் விதர்சினி எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமி கன்னார் கிராமத்தில் உள்ள தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த போது கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாம்பு தீண்டியுள்ளது.

இந்தச் சிறுமி மூச்சு விடுவதற்குச் சிரமப்பட்டபோது உடனடியாக மன்னார் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். உடல் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த கிராமத்தில் மக்கள் யுத்தத்தின் பின்னர் மீள்குடியமர்வு செய்யப்பட்ட போதும் எவ்வித அடிப்படை வசதிகளும் இதுவரை அரசினால் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-601)

## மோசமான வீதிகள்

வவுனியா,நவ.30

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வவுனியா நகரத்திலுள்ள உள்ளக வீதிகளில் நீர் நிரம்பிக் காணப்படுவதன் காரணமாக அவற்றில் பயணத்தை மேற்கொள்பவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக வவுனியா முதலாம் குறுக்குத் தெரு, இரண்டாம் குறுக்குத் தெரு ஆகிய வீதிகள் வெள்ள நீரால் நிரம்பி மோசமான நிலையில் காணப்படுகின்றன.

கந்தசாமி கோயில் வீதியில் புனரமைப்பின் பொருட்டு ஆங்காங்கு மண் கொட்டப்பட்டுள்ளது. இந்த மண் மழை நீரில் கரைந்து சேறாக மாறியுள்ளது. வாகனங்கள் இந்த வீதியால் செல்லும்போது சேற்றுடன் கூடிய வெள்ளநீரை வீசுவதால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். (க-421)

# கண்டாவளையில் மானிய உரம் வழங்குவது தாமதமாவதாக விவசாயிகள் முறைப்பாடு

கிளிநொச்சி,நவ.30

கிளிநொச்சி, கண்டாவளைப் பகுதியில் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கப்படவில்லையென விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கண்டாவளைப் பகுதியில் இவ்வாண்டு காலபோகச் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் இரண்டு மாதங்களாகியும் தமக்கான மானிய உரம் வழங்கப்படவில்லையெனவும் இதனால் தமது பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் மானிய உரம் இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாண்டு காலபோகச் செய்கைக்கான உரவிநியோகம் இம்மாதத்துடன் நிறைவடைகின்றது. ஆனால் கண்டாவளைப் பிரதேச விவசாயிகளுக்கு ஒரு கட்ட உர மானியம் கூட இதுவரை சீராக வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக கண்டாவளைப் பகுதி விவசாயிகளுக்கு உர மானியத்தை வழங்கும் [illegible] கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

கண்டாவளையில் தற்போது 5 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது ஆயிரம் ஏக்கருக்கு மட்டுமே உரவிநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீர்வரி இடாப்பும் புனரமைக்கப்படவில்லை. இதனால் உரவிநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

எனினும் இந்தப் பகுதி விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (க-6)

## வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா,நவ.30

கடந்த 22 ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடமாடும் சேவை ஒன்று நடைபெற்றுள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் கடவுச் சீட்டு, தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் போன்ற விடயங்கள் இடம் பெற்றிருந்தன.

பெருமளவில் மக்கள் இந்தச் சேவையில் கலந்து கொண்டதுடன் தமது தேவைகளையும் பூர்த்தி செய்தனர்.

(க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்கள் புரட்சியை உருவாக்கும் பலம் ஐ.தே.கவிடம் உண்டா?

எதிர்க்கட்சிக்குப் பலமான ஒரு தலைவர் கிடைக்கும்வரை தாம் பதவியில் இருக்கப்போவதாக ஜனாதிபதி முன்பு ஒரு சமயம் தெரிவித்தார். எனினும், அதற்கான நேரம் இன்னும் வரவில்லை. அறிகுறியும் இல்லை. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி பலம் இழந்த நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறது. அக்கட்சி பல துண்டுகளாக உடைந்து பலவீனமான ஒரு தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. தேர்தல்களில் அக்கட்சிக்கு ஏற்பட்டுவரும் தோல்விகள் இதற்குச் சான்றாகும்.

தனது அரசுக்கு மக்களின் ஆதரவை அதுவும் சிங்கள மக்களின் ஆதரவை தக்கவைப்பதில் ஜனாதிபதி நன்கு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறார். தமிழ் மக்களின் ஆதரவை அவர் எதிர்பார்ப்பதில்லை. ஏற்கனவே தென்னிலங்கை மக்களின் நல்லாதரவைப் பெற்ற அரசு இது.

இத்தகைய நிலைமையிலேயே அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. டுனிஷியாவிலும், எகிப்திலும், லிபியாவிலும் இடம்பெற்றது போன்று அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டி ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்று அது நம்புகிறது.

நாட்டில் சட்டம் சீர்குலைந்து சர்வாதிகாரம் தலைதூக்கி உள்ளதால் வெளிநாடுகளைப் போன்று இலங்கையிலும் விரைவில் மக்கள் புரட்சி வெடிக்கும் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்ததன் அர்த்தம் அதுவாகவே இருக்கும்.

சுதந்திரத்தின் பின்பு இலங்கை இரண்டு இராணுவ சதி முயற்சிகளையும், ஜே.வி.பியின் இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளையும் கண்டுவிட்டது. இந்த நான்கு முயற்சிகளுமே வெற்றி பெறவில்லை. ஜே.வி.பி. கிளர்ச்சிகள் பெரும் உயிரிழப்புகளுடன் முடிவுக்கு வந்தன.

எப்போதும் இல்லாத அளவுக்கு இராணுவச் செல்வாக்கு நாட்டின் உச்சத்தில் இருக்கும் போது தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி ஆட்சியைக் கவிழ்க்க முடியுமா?

அதுவும் நேற்றைய ஆர்ப்பாட்டம் ஒழுங்கான முறையில் ஏற்பாடு செய்யப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ ஜே.வி.பிக்கோ சரியான முறையில் அழைப்பு அனுப்பப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கை உள்ளடக்கப்பட்டபோது, பல்லாண்டு காலமாக சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளை ஐ.தே.க. மறந்துவிட்டது. தமிழ் அரசியல் கைதிகள் விவகாரமும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்று மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்தது. தனது கோரிக்கை ஏற்கப்பட்டால் மட்டுமே நேற்றைய போராட்டத்தில் இணைந்துகொள்ளமுடியும் என்று நிபந்தனை விதித்தது. இதன்பின்பே, ஜனநாயக மக்கள் முன்னணியையும் ஆர்ப்பாட்டத்தில் பங்குபெற வைப்பதற்காக சரத் பொன்சேகா உட்படத் தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை சேர்க்கப்பட்டது.

ஜே.வி.பி. 1971இலும் 1988 - 89இலும் ஆயுதக் கிளர்ச்சியை நடத்தி அரசைக் கைப்பற்ற முயன்றது. இந்த இரண்டு முயற்சிகளும் தோல்வியடைந்த பின்பு தேர்தலில் பங்குபற்றி ஜனநாயக வழியில் ஆட்சியைக் கைப்பற்றத் திட்டம் வகுத்தது. அதிலும் ஜே.வி.பி. தோல்வி கண்டுவிட்டது. ஐ.தே.க. தேர்தல்களில் அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்த நிலையில், தற்பொழுது தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வெளிநாடுகளில் இடம்பெற்றது போன்று ஒரு மக்கள் எழுச்சிக்கு முயன்று வருகிறது. ஆனால், இதிலும் ஐ.தே.க. வெற்றி பெற்றுவிடமுடியாது என்றே நம்பலாம்.

டுனிசியாவிலோ, எகிப்திலோ, லிபியாவிலோ இராணுவத்தின் ஒரு பகுதியினரின் உதவியுடனேயே மக்கள் கிளர்ச்சி வெற்றி பெற்றது. மக்கள் கிளர்ச்சி ஆரம்பமாகி ஒரு கட்டத்தில் இராணுவமும் இணைந்துகொண்டது. தமக்கு விசுவாசமான மிகக் குறைந்த எண்ணிக்கையான படையினரின் உதவியுடனேயே இறுதிப் போரைச் சந்திக்கும் நிலைமை அந்த நாடுகளின் தலைவர்களுக்கு ஏற்பட்டது. 1979ஆம் ஆண்டில் ஈரானில் மன்னர் ஷாவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் போதும் இதுதான் நடந்தது.

ஆனால், இப்படியான ஒரு நிலைமையை இங்கும் ஏற்படுத்த முடியுமா? கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களை மனதில்கொண்டு இந்த அரசு மிகவும் நுட்பமாகக் காய் நகர்த்தி வருவது தெரிகிறது. நாட்டின் ஆயுதப்படை நாட்டு நிர்வாகத்தில் பலம் வாய்ந்த பிரதான சக்தியாக மாற்றப்பட்டு வருகிறது.

நாட்டு நிர்வாகப் பணிகளில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டு வருவதும், வரவு - செலவுத் திட்டத்தில் பொலிஸ் மற்றும் ஆயுதப் படையினருக்குப் பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு லட்சம் ரூபா நன்கொடை வழங்கும் அறிவிப்பு வெளிவந்திருப்பதும் அத்தகைய தூரநோக்குடன்தான்.

ஆகவே, தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் எல்லாம் வெறும் அரசியல் நோக்கத்துக்காகவே. இன்று நாடு இராணுவத்தின் உதவியுடன் சர்வாதிகாரப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. வேண்டுமானால் அதனைத் தடுக்கவே முதலிடம் வழங்கப்பட வேண்டும்.

# உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆலோசகர்கள் நியமனத்தில் பாடத்துறையின் கவனிப்பு அவசியம்

## கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ.30

கல்வி வலயங்களுக்கு உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படும்பொழுது குறிப்பிட்ட பாடத்தில் பயிற்சி பெற்றவர்கள் மாத்திரமே நியமனம் செய்யப்படவேண்டும். இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டால் போதும் என்ற நிலை இருத்தல் கூடாது. இந்த வருட இறுதிக்குள் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமனம் செய்யப்படவில்லை. இவற்றுக்கான நியமனங்கள் காலம் தாழ்த்தப்படுவதனால் பாடசாலைகளில் நிர்வாகச் செயற்பாடுகளில் நிர்வாகச் சிக்கல் ஏற்பட்டு பாடசலைகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. எனவே இந்தப் பாடசாலைகளுக்கு அதிபர்கள் உடனடியாக நியமனம் செய்யப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றித் தேசியப் பாடசாலைகள் உட்பட வட மாகாணப் பாடசாலைகளில் உள்ள அதிபர்களாகக் கடமையாற்றாத, அதிபர் தரம் பெற்றவர்கள் வெற்றிடமாக உள்ள பாடசாலைகளுக்கு உடனடியாக நியமிக்கப்படவேண்டும்.

இதுதவிர வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் பலர் பதில் கடமை அதிபர்களாகவே இன்றும் பணியாற்றி வருகின்றனர்.

அவர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அத்து டன் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சைகள் வருடந்தோறும் ஒழுங்குமுறையில் நடத்தப்படுவது உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-4)

# தேசியப்பட்டியலில் மனோ கணேசன்; குழு அமைத்து ஆராய்கிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 30

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்படவேண்டியோர் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்களின் யோசனைகளுக்கு அமைய செயற்குழு இறுதித் தீர்மானம் எடுக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் பெயர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் உள்ளடக்கப்படும் எனக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்பட்டுள்ளதா என ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் முஸ்லிம், தமிழ், சிங்களம் ஆகிய மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் உள்ளனர். இதைவிட, தேசியப்பட்டியலில் புதிதாகச் சேர்த்துக்கொள்பவர்கள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு விசேடகுழு ஒன்றை நியமித்துள்ளோம். அவர்களின் ஆலோசனை செயற்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும். இதையடுத்து இறுதித் தீர்மானத்தை செயற்குழு எடுக்கும். மனோகணேசனுடன் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சு நடத்தினார்- என்றார் அவர்

(ஒ-சி)

# போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை ஒன்று அவசியம்

## ஜே.வி.பி. தலைவர் கூறுகிறார்

இலங்கை அரசுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர் குற்றங்கள் குறித்து விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால், அரசு தனது பொறுப்புக் கூறும் பொறுப்பை மேற்கொள்ளும் என பாதுகாப்புச் செயாலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தமைக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகவும் அவர் கூறியுள்ளார். அனைத்து யுத்தங்களும், ஒரே நிலைமையான அருவருக்கதக்கவை எனவும் அவர் கூறியுள்ளார்.

1980 ஆம் ஆண்டுகளில் கொல்லப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்களை நினைவு கூரும் வைபவத்தில் கலந்துக்கொள்வதற்காக பிரிட்டன் சென்றுள்ள அமர சிங்க சர்வதேச ஊடகம் ஒன்றிடம் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட யுத்தத்துக்கு ஜே.வி.பி ஆதரவு வழங்கியிருந்தமை என்பது குறிப்பிட தக்கது. (த-சி)

# நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது

## அனுரகுமார திஸநாயக்கா சாடல்

கொழும்பு, நவ.30

நாட்டில் 42,000 பட்டதாரிகள் வேலையற்று நிர்க்கதி நிலையில் இருக்கின்றனர் என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அதேவேளை, இலங்கையில் 4 லட்சம் இளைஞர், யுவதிகளும் வேலையற்று இருக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் மக்கள் எதிர்பார்த்த நிவாரணம் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிபிட்டுள்ளார்.

அம்பலாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்பாட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார்.

2012 வரவு - செலவுத் திட்டத்தில் எவ்வித நிவாரணமும் மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதைக் கண்டித்தே குறித்த ஆர்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (த-சி)

**நாளை**

கார்த்திகை 15, வியாழக்கிழமை 01.12.2011
திதி: ஷஷ்டி காலை 6.16 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 2.01 வரை
சுபநேரம்: 7.44-9.14 வரை, ராகு காலம்: 1. 44.- 3.14 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக் கழிவுப் பொருள்களை பசளையாக்கும் செயல் திட்டம்

## பருத்தித்துறை நகரசபை ஆரம்பிக்கிறது

வடமராட்சி, நவ.30

பருத்தித்துறை நகர சபை, திண்மக்கழிவுப் பொருள்களைப் பசளையாக்கும் திட்டம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

சபைக்குச் சொந்தமான மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள காணியில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகரில் சேரும் குப்பை கூளங்களை ஒன்றுதிரட்டிக் குப்பைகள், பிளாஸ்ரிக், இரும்புப் பொருள்கள் என்பநறைத் தரம் பிரித்துக் குப்பைகளைப் பசளையாக்குவதுடன், பழுதடைந்த, சேதமடைந்த பிளாஸ்ரிக், இரும்புப் பொருள்களை விற்பனை செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் திண்மக் கழிவுகளைப் பசளையாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் ஒரு சிலருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுவதுடன் பசளை விற்பனை மூலம் கணிசமான அளவு வருமானத்தை ஈட்ட முடியும் என சபைத் தலைவர் சபா.ரவீந்திரன் தெரிவித்தார்.

தற்போது பருத்தித்துறை நகர சபையில் சேரும் குப்பை கூளங்களை கரவெட்டிப் பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுகளைப் பசளையாக்கும் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. மண்டான் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுகளைப் பசளையாக்கும் இடத்துக்கும் தினமும் மூன்று தடவைகள் குப்பை கூளங்களை அனுப்பி வைப்பதால் சபைக்குப் பெரும் செலவுகள் ஏற்படுவதைத் தடுக்கவே, பருத்தித்துறை நகரசபைக்கெனச் சொந்தமாகத் திண்மக் கழிவுகளைப் பசளையாக்கும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம் என சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-236)

# வலி.மேற்கில் இருவர் டெங்கு நோயால் பாதிப்பு

சண்டிலிப்பாய், நவ.30

அடை மழை காரணமாக வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் இரு இடங்களில் இருவர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக இனங் காணப்பட்டதைத் தொடர்ந்து சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் கிராம உத்தியோகத்தர்களும் இணைந்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

வீடுவீடாகச் செல்லும் இவர்கள் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய சுற்றாடலைக் கண்டறிவதிலும் புகையூட்டல், மருந்து விசிறல் போன்ற நடவடிக்கைளையும் மேற்கொண்டுள்ளனர்.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள சண்டிலிப்பாய் மேற்கு, நவாலி வடக்கு ஆகிய இடங்களில் இருவர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுகாதாரப்பகுதியினரால் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து மானிப்பாய்ப் பொலிஸாரும் சுகாதார உத்தியோகத்தர்களும் மேற்படி இடங்களுக்கு விரைந்து சென்று கிராம உத்தியோகத்தர்களின் உதவியுடன் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை ஒலிபெருக்கி மூலம் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் அயல்கிராமங்களிலும் தங்கள் நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளார்கள். (த-115)

# சிறுதானியப் பயிர்களை வழங்குமாறு கோரிக்கை

தென்மராட்சி, நவ.30

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு தென்னம்பிள்ளை மற்றும் சிறுதானியப் பயிர் வகைகள் கடந்த வருடம் வழங்கப்பட்டபோது சிலருக்கு அவை கிடைக்கவில்லை. கிடைக்காத குடும்பங்களுக்கு வழங்கப்படுமா என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கென தென்னம் பயிர்ச்செய்கை சபையினால் தென்னம்பிள்ளைகளும் விவசாயத் திணைக்களத்தால் சிறுதானியப் பயிர்களும் அந்தப் பகுதி கமக்கார அமைப்பின் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

கையளிக்கப்பட்ட பொருள்கள் போதாததால் இவை கிடைக்காத குடும்பங்களுக்கு பின்னர் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்னம்பிள்ளை மற்றும் சிறுதானியப் பயிர்வகைகள் கடந்த வருடம் கிடைக்காதவர்கள் மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இந்த வருடம் தமக்கு அந்தப் பொருள்கள் விநியோகிக்கப்படுமா எனக் கேட்டுள்ளனர். (த-207)

## மீண்டும் இடப்பெயர்வு....



கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினால் வலி.வடக்கில் இளவாலை வ. மேற்கு ஜே/222 கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததை அடுத்து இடம்பெயர்ந்து பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

# நுளம்பு பெருகக்கூடிய சுற்றாடலை வைத்திருந்த 10 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.30

பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்களில் தண்ணீர் தேங்கி நின்று நுளம்பு பெருகும் வகையில் சுற்றாடலை வைத்திருந்த குற்றத்துக்காக யாழ். மாநகரப் பகுதியைச் சேர்ந்த 10 பேர் யாழ். நீதிமன்றில் பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். பொலிஸார் இவர்களுக்கெதிராக வழக்குப் பதிவு செய்து நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

சந்தேக நபர்கள் பத்துப் பேரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, ஆசனப்பட்டி யணியாது வாகனம் செலுத்திய குற்றத்துக்காக 9 பேர் யாழ். நீதிமன்றில் 13 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்திச் சென்றவர்களுக்கெதிராகவே யாழ். போக்குவரத்துப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து அவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (த-4)

# நவம்பர் மாத கொடுப்பனவு இதுவரை இல்லை

தென்மராட்சி, நவ.30

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு நேற்றுவரை வழங்கப்படவில்லை என்று உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்தனர்.

இதுகுறித்து மேற்படி நிர்வாகத்தினர் கூறுகையில், திறைசேரியில் இருந்து கட்டு நிதி வந்துசேராத காரணத்தாலேயே மேற்படி கொடுப்பனவு வழங்கவில்லை என்று குறிப்பிட்டனர். (த-207)

# வைத்தியசாலை வீதியில் வெள்ளம் கோண்டாவில் கிழக்கு மக்கள் சிரமம்

வலி.வடக்கு, நவ.30

கோண்டாவில் கிழக்கு வைத்தியசாலை வீதியில் வெள்ளம் தேங்கியுள்ளதால் பொதுமக்கள் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வீதியில் உள்ள வெள்ள வாய்க்கால் துப்புரவு செய்யப்படாத நிலையில் வெள்ளம் வழிந்தோட முடியாதுள்ளது.

கோண்டாவில் கிழக்கு வைத்தியசாலை வீதி பல கிராமங்களுக்குச் செல்லும் முக்கியமான வீதியாகக் காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட வீதியில் உள்ள வெள்ள வாய்க்காலைத் துப்புரவு செய்து உரிய பிரதான வெள்ள வாய்க்காலுடன் இணைக்காமல் விட்டுள்ள நிலையில் மழை பெய்ததும் வெள்ளம் வீதி முழுவதும் தேங்கிக் காணப்படுவதுடன் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் கூட சிரமங்களுடன் வைத்தியசாலை வளாகத்தில் பிரவேசிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து நல்லூர் பிரதேச சபையோ, வீதி அபிவிருத்தி அதிகார சபையோ கவனம் செலுத்துவதில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (த-86)

# தொடர் மழையை அடுத்து மந்த நிலையில் மீன் விற்பனை

யாழ்ப்பாணம், நவ.30

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையை அடுத்து மீன் வரத்தும் மீன் விற்பனையும் மந்த நிலையில் உள்ளதாகவும் மீனின் விலை தொடர்ந்து உயர்வாகவே காணப்படுவதாகவும் கொட்டடி மீன் வியாபாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்:

கடந்த சில நாள்களாக மீன் வரத்தும், விற்பனையும் மந்தமாகவே காணப்படுகின்றது. ஒரு கிலோ 200 ரூபாவாக விற்கப்பட்ட முரல் மீனின் விலை தற்போது 350 ரூபாவாக அதிகரித்துள்ளது.

கொட்டடி மீன்சந்தையில் வியாபாரம் சீராக இடம்பெற்று வருகின்றது. மழை காரணமாகவே மீனின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தச் சந்தைக்கு வேலணை, நெடுந்தீவு, அல்லைப்பிட்டி, கொழும் புத்துறை, பாஷையூர், வடமராட்சி போன்ற உள்ளூர் பகுதிகளில் இருந்தும் முல்லைத்தீவு, மன்னார் கரையோரப் பகுதிகளில் இருந்தும் மீன்கள் விற்பனைக்காக வருகின்றன - என்றனர்.

நேற்றைய சந்தை நிலவரப்படி விளை மீன் கிலோ 400 ரூபாவாகவும், இறால் கிலோ 600 ரூபாவாகவும் கணவாய் கிலோ 450 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (த-319)

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

வடமராட்சி, நவ.30

நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரை இடும்பணி பருத்தித்துறைப் பிரதேச சபையில் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமையும், 6ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் நடைபெறவுள்ளது.

இந்தப் பிரதேசத்துக்குட்பட்ட சந்தை வியாபாரிகள், வர்த்தகர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஆகியோர் தமது நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிட்டுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-236)

# மேட்டுநிலப் பயிர்கள் பாதிப்பு

அளவெட்டி, நவ.30

கந்தரோடை, மல்லாகம், அளவெட்டி, சண்டிலிப்பாய் கண்ணகை அம்மன் கோயிலடி நெல்வயல்களில் தொடர்ந்து பெய்த வரும் மழை காரணமாக நீர்மட்டம் உயர்ந்து வருகிறது எனவும், இப்பகுதியில் உள்ள குளங்கள், கிணறுகளிலும் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேட்டு நிலப்பயிர்களும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து மழை பெய்யுமாயின் பயிர்கள் அழிவுக்குட்படும் எனவும் இப்பகுதி விவசாயிகள் தமது கவலையைத் தெரிவித்தனர். மேலும் சில பகுதிகளில் நெற்பயிர்களை மூடி நீர் நிரம்பியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் மேட்டு நிலப்பயிர்களான கத்தரி, வெண்டி, கோவா, கீரை, பாவல், பயிற்றை என்பன உரிய பயனைத் தராது எனவும் இதன் காரணமாக மரக்கறி வகையின் விலைகள் அதிகரிக்கக் கூடும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (த-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த வைத்தியர்கள் இன்றுடன் வீட்டுக்கு

## வைத்தியசாலைகளில் நெருக்கடி வலுக்கும் நிலை

யாழ்ப்பாணம்,நவ.30

வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ளடங்கும் வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் வழங்கப்பட்டு பணியாற்றிவந்த 15இக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் தமது சேவையை இன்று புதன் கிழமையுடன் இடைநிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் நீண்டகாலமாக வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுவதால் அதனை ஓரளவுக்கு ஈடுசெய்யும் வகையில் மீள்நியமனம் செய்யப்பட்ட 15 இக்கு மேற்பட்ட வைத்தியர்களை இன்றுடன் வைத்திய சேவையை இடைநிறுத்துமாறு கூறி வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியினால் தனித்தனியாகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

குடாநாட்டு வைத்தியசாலைகளில் உரிய நேரத்தில் சிகிச்சை பெறுவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படும் நிலையில் இந்த வைத்தியர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளமை மேலும் தமக்கு இடையூறுகளை உருவாக்கும் என பொது மக்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

பொதுவாகவே இங்குள்ள ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், ஆரம்பப் பிரிவு சுகாதார வைத்திய நிலையங்கள் எனப் பலவற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்கள் மீள்நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒரு வைத்தியர் இரண்டு வைத்தியசாலைகளில் கடமையாற்ற வேண்டிய நிலையும் இருந்து வருகின்றது. காலை மற்றும் மாலை ஒவ்வொரு வைத்தியசாலைக்குச் சென்று சேவையாற்ற வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் மீள்நியமனம் செய்யப்பட்ட வைத்தியர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டமை மேலும் பல ஆபத்தான நிலைமைகளை உருவாக்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பெரும்பாலும் கிராமப்புற மக்களின் சுகாதாரத்தில் இது தாக்கமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஏனைய வைத்தியர்களும் அதனைக் கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

மீள்நியமனம் செய்யப் பட்ட வைத்தியர்கள் இடை நிறுத்தப்படுகின்றனர் என எனக்கும் தெரிவிக்கப்பட்டுள் ளது. 60 வயதுக்கு மேற்பட்ட வைத்தியர்களையே இடை நிறுத்துவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனினும் இந்த விடயம் தொடர்பாக இன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளு டன் கலந்துரையாடி இடைநிறுத்தப்பட்ட வைத்தியர்களது சேவையைத் தொடர்வது குறித்து ஆராயவுள்ளோம் - எனத் தெரிவித்தார்.

(த-4-36)

# வடமராட்சி கிழக்கில் பல வீதிகள் 'என்றிப்' திட்டத்தில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.30

வடமராட்சி கிழக்கில் பல வீதிகள் 'என்றிப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அம்பன் பிள்ளையார் வீதி, அம்பன் முருகன் ஆலய வீதி, மருதங்கேணி மயான வீதி வடமராட்சி கிழக்கு புதுவைரவர் கோயிலடி வீதி, அம்பன் கொட்டோடை வீதி ஆகியனவே தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நாகர்கோயில் பஸ் போக்குவரத்து வீதி, நாகதம்பிரான் கோயில் வீதி, குடத்தனை எல்லை வீதி, செம்பியன்பற்று தனித்தனை வீதி, செம்பியன்பற்று இறக்கைவீதி, வாரிவட்டான் வீதி என்பனவும் புனரமைக்கப்படுகின்றன.

உடுத்துறை பாடசாலை வீதி, மாமுனை வீதி, ஆழியவளை பாடசாலை வீதி, கொடுக்குளாய் வீதி, வடலியடி வீதி, உடுத்துறை சுமைதாங்கி வீதி, வத்திராயன் சுனாமி குடியிருப்பு வீதி, கொடுக்குளாய் ஆழியவளை வீதி, ஆழியவளை சுனாமி குடியிருப்பு வீதி, மருதங்கேணி சுனாமி குடியிருப்பு வீதி, செம்பியன்பற்று வடக்கு சுனாமி குடியிருப்பு வீதி, மருதங்கேணி பிள்ளையார் வீதி ஆகிய வீதிகளின் வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(த-319)

# மண்டைதீவுப் பகுதி விவசாயிகள் வெங்காயம் பயிரிடுவதில் ஆர்வம்

யாழ்ப்பாணம், நவ.30

மண்டைதீவில் நெல் உற்பத்தியுடன் வெங்காயச் செய்கையிலும் விவசாயிகள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள தோட்டக் காணிகளில் தற்சமயம் வெங்காயம் பயிரிடப்பட்டு வருகின்றது.

இதற்குத் தேவையான விதை வெங்காயத்தை விவசாயிகள் தற்சமயம் பெற்று வருகின்றனர்.

மண்டைதீவில் கடந்த காலங்களில் புகையிலை உற்பத்தியே அதிகமாகக் காணப்பட்டது. எனினும் தற்போது புகையிலைக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்பதால் புகையிலைக்குப் பதிலாக விவசாயிகள் வெங்காய உற்பத்தியில் கவனம் செலுத்துகின்றனர். (த-7)

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க 4 கிராமங்களில் தண்ணீர் தாங்கி

## வடமராட்சி கிழக்கில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ.30

வடமராட்சி கிழக்குக்கான நீர் வழங்கலை மேம்படுத்தும் பொருட்டு 'என்றிப்' திட்டத்தின் கீழ் நான்கு கிராமங்களில் தண்ணீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்குக்கான குடிதண்ணீர் உட்பட அத்தியாவசிய தேவைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய 'என்றிப்' திட்டத்தின் கீழ் நான்கு கிராமங்களில் இந்தத் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக சுமார் 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உவர்நீர் பகுதியாக உள்ள இடங்கள் இனங்காணப்பட்டு அந்தப் பகுதியிலேயே இந்தத் தண்ணீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

குடத்தனை மேற்கு, செம்பியன்பற்று, மருதங்கேணி நகரப் பகுதி போன்ற இடங்களிலேயே இந்தக் தண்ணீர் தங்கிகள் நிறுவப்படவுள்ளன.

மருதங்கேணி சந்திச் சுற்றாடலில் குழாய் நீர் வசதியும் செய்யப்படவுள்ளது. (த-319)

# மினிபஸ் பயணிகளுடன் அநாகரிகமாக நடந்தால் சாரதிகள், நடத்துநர்களுக்கு இனி 'நல்ல கவனிப்பு'

## வடமராட்சி மினிபஸ் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.30

தனியார் பஸ்களில் பயணிகளுடன் அநாகரிமாக நடந்து கொள்ளும் நடத்துநர்கள், சாரதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கம் எச்சரித்துள்ளது.

பயணிகள் தகுந்த ஆதாரத்துடன் நடந்த சம்பவத்தை உறுதிப்படுத்துவார்களாயின் குற்றமிழைத்தவருக்கு எதிராக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

உதயனின் 2 ஆம் பக்கத்தில் 'விரைவாக இறங்குமாறு பயணியின் சேலையைப் பிடித்து இழுத்த பஸ் நடத்துநர்' என்ற செய்தி பிரசுரமாயிருந்தது.

இதனையடுத்து நடவடிக்கையில் இறங்கிய வடமராட்சி தனியார் பஸ் சேவை சங்கம் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மினிபஸ் நடத்துநரைத் தேடிக் கண்டுபிடித்தது.

பயணியின் மனம் கோணும் வகையில் நடந்துகொண்ட அந்த பஸ் நடத்துனர் உடனடியாகக் கடமையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்தது.

உதயனில் வெளியான செய்தியைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

எதிர்காலத்தில் இவ்வாறு பயணிகளுடன் அநாகரிமான முறையில் நடந்துகொள்ளும் சாரதிகள், பஸ் நடத்துநர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை அறிக்கை ஒன்று யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-14)

# பருத்தித்துறை நவீன சந்தை பொங்கலுக்குப் பின் திறப்பு

வடமராட்சி, நவ.30

பருத்தித்துறை நகரில் சுமார் 145 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைக் கட்டடத் தொகுதி எதிர்வரும் தைப்பொங்கலுக்குப் பின்னர் திறந்து வைக்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா. ரவீந்திரன் தெரிவித்தார்.

மாடிக் கட்டடத்தைக் கொண்ட இந்தத் தொகுதியில் கீழ்த்தளத்தில் கடைகளும் மேல் தளத்தில் கடைகளுடன் வடபுறத்தில் பொதுமண்டபமும் அடங்கியுள்ளன.

இந்த நவீன சந்தையில் உள்ள கடைகளில் ஒரு தொகுதி கடைகள் ஏற்கனவே வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய கடைகள் விரைவில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு வழங்கப்படவுள்ளன - என்றார் சபைத் தலைவர். (த-336)

# இடைக்காடு பொதுச் சந்தை கட்டடப் பணிகள் ஆரம்பம்

அச்சுவேலி, நவ.30

வளலாய் - இடைக்காடு பொதுச்சந்தை நிர்மாணத்துக்கு 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் ஆரம்பமாகியுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

வளலாய் - இடைக்காடு சந்தையின் கட்டட வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட 49 இலட்சம் ரூபா நிதி கட்டட வேலை உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படாமையால் திரும்பியது தொடர்பாக தகவல் தெரிவிக்கையில்,

முன்பு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் நிர்மாணப்பணிகள் பிரதேச சபையை மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு நடைபெற்றது. பிரதேச சபையை பொதுமக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்ற பின்னர் 70 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டட நிர்மாண பணிகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளன - எனத் தெரிவித்தார்.(த-11)

# வலி.கிழக்கில் வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்தும் பணி

## பிரதேச சபை முன்னெடுக்கிறது

அச்சுவேலி, நவ.30

வலி.கிழக்குப் பிரதேச சபையின் வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இந்தவகையில் 178 விளக்குகள் பொருத் தப்படவுள்ளன. இவற்றில் 166 மின்விளக்குகளைப் பொருத்தும் பணி முடிவடைந்துள்ளது.

வலி.கிழக்குப் பிரதேசசபை பிரதேசத்தில் உள்ள பிரதான வீதிகளுக்கும் வீதிகளின் சந்திகளுக்கும் இந்த மின்விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உபஅலுவலகப் பிரிவுவாரியாக அச்சுவேலி உப அலுவலகப் பிரிவில் 38 மின் விளக்குகளும் உரும்பிராய் பிரிவில் 30 மின்விளக்குகளும் புத்தூர் உப அலுவலகப் பிரிவில் 35 மின் விளக்குகளும் நீர்வேலி உப அலுவலகப் பிரிவில் 30 மின்விளக்குகளும் கோப்பாய் உப அலுவலகப் பிரிவில் 33 மின்விளக்குகளும் பொருத் தப்பட்டுள்ளன.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிரிவில் வீதி மின்விளக்குகள் ஒளிரத் தொடங்கியுள்ளன.

(த-11)

# வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ.30

வல்வெட்டித்துறைப் பகுதியில் கிணறு ஒன்றில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை வயோதிப மாது ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை குறித்த இடத்துக்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் சடலத்தை மீட்டு வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதிப் பகுதியைச் சேர்ந்த சுப்பையா சரோஜினி (வயது -69) என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சடலம் பிரேதபரிசோதனையின் பொருட்டு வல்வெட்டித்துறை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-14-319)

# கூட்டுறவுச் சங்க நான்கு கிளைகள் வடமராட்சி கிழக்கில்

வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நான்கு கிளைகள் 'என்றிப்' திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளன. வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, மருதங்கேணி பகுதியிலேயே இக்கிளைக் கட்டடங்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள்.
0771329513 Computer Repair

### கச்சான் விற்பனைக்கு

தரமான கச்சான் மொத்தமாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : சாந்தா ஸ்ரோர்ஸ்
முல்லைத்தீவு, தருமபுரம்.
தொலைபேசி இல: 0770632650

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவையால் 16.11.2011 அன்று "கலைக்கிளி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கண்டாவளையைச் சேர்ந்த இசை வாத்தியக் கலைஞர்

**சி.கனகராசா**

அவர்கள் மேலும் தனது கலையில் உயர் சிறப்புப் பெறுவதோடு அவரைப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவெனவும் வாழ்த்துகின்றோம்.

- வரணிவாழ் உறவினர்கள்.

(10961) (2-6-9)


# அ'புரம் சிறைக்கைதிகளை வவுனியாவுக்கு மாற்றுக!

கொழும்பு, நவ. 30

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றுமாறு ரெலோ அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ரெலோ அமைப்பின் அரசியல் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவாஜிலிங்கம் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அநுராதபுர சிறைச்சாலையில் சிறைச்சாலை அதிகாரிகளால் தமிழ் அரசியல் கைதிகள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். ஊனமுற்ற கைதிகளின் ஊன்றுகோல்களைக் கூடப் பறித்து, ஆடைகளைக் களைந்து கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் எவரும் நியாயப்படுத்த முடியாது. இது விடயம் தொடர்பாக அரசு உடன் தலையிட்டு விசாரணைகளை மேற்கொள்ள வேண்

## ரெலோ அமைப்பு கோரிக்கை

டும். கைதிகள் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நீதி அமைச்சின் செயலாளரிடம் ரெலோ அமைப்பின் தலைமைக்குழு உறுப்பினர் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா பேச்சு நடத்தியுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றுமாறு அவர் நீதி அமைச்சின் செயலர் கம்லத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த வேண்டுகோள் தொடர்பாக நீதி அமைச்சரின் கருத்தைக் கேட்டபிறகு பதிலளிக்கின்றேன் என அவர் உறுதியளித்துள்ளார்.

தாம் விடுத்த வேண்டுகோளையடுத்து குறித்த விவகாரம் தொடர்பாக ஆராய நீதி அமைச்சின் ஆலோசகர் ஒருவரை கம்லத் அநுராதபுரத்திற்கு அனுப்பிவைத்துள்ளார் - என்றார் சிவாஜிலிங்கம்.


# சாவகச்சேரி பிரதேச சபை

## 01.01.2012 முதல் 31.12.2012 வரை சந்தைகள் இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2012

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி | : 30.11.2011-08.12.2011 ந.ப. 12.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி | : 09.12.2011 ந.ப. 12 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கும் திகதி | : 09.12.2011 பி.ப. 2.00 மணி |

| இல. | விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்வி படிவக்கட்டணம் மீளளிக்கப் படாதது (Vat, NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01. | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல.01 | 11000.00 | 1000.00 | 500.00 |
| 02. | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக் கடை | 25000.00 | 1000.00 | 500.00 |
| 03. | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 514000.00 | 5000.00 | 500.00 |
| 04. | கொடிகாமம் ஆட்டிறைச்சிக் கடை | 50000.00 | 1000.00 | 500.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 05. | வரணி மரக்கறிச் சந்தை, மீன் சந்தை | 67000.00 | 1000.00 | 500.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 06. | கைதடி பொதுச் சந்தை | 28000.00 | 1000.00 | 500.00 |
| 07. | கைதடி சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 40700.00 | 1000.00 | 500.00 |
| 08. | கைதடி சந்தை மாட்டிறைச்சிக் கடை | 50000.00 | 1000.00 | 500.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 09. | மிருசுவில் பொதுச் சந்தை | 25000.00 | 1000.00 | 500.00 |
| 10. | மிருசுவில் மாட்டிறைச்சிக் கடை | 75000.00 | 1000.00 | 500.00 |

### நிபந்தனைகள்

1. இறைச்சிக் கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
2. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், மாத வாடகை என்பவற்றுடன் Vat 12%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
3. சந்தையிலிருந்து 1 கிமீ சுற்றாடலில் மீன், மரக்கறி விற்றல் தடை செய்யப்பட்டுள்ளது.
4. சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
5. கால் நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல் களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்கு கொண்டு வரப்படுதல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
7. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் என்ற விலாசத்துக்கும் மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல்வேண்டும்.
8. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு
9. மேலதிக விவரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்

சிற்றம்பலம் துரைராஜா,
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

(சி-2877)(1,6,8,9)





ஜெய் குருதேவ்

## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அருளிய சஹஜ் சமாதி தியானம்

(ஒவ்வொருவருக்கும் தனியான மந்திரம் மூலம் செய்யப்படும் எளிமையான அதிசக்தி வாய்ந்த தியானம்)

வடமராட்சி :
கரவெட்டி
முத்த விநாயகர் கோயில் மண்டபம்
02.12.2011 - 04.12.2011
மாலை 4.00

முன்பதிவுக்கு:-
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை,
நெல்லியடி.
T.P: 0770474757

(10895)(2-6-9)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
15.07.1973

உதிர்வு
11.12.2010

### அமரர் குமாரசாமி பரமானந்தன்

திதி: 30.11.2011

*மலர்ந்த அன்பும் என்றும் அழியாத நினைவும்*
*வாடாத புன்னகையுமாய் எம்மோடு இருந்து*
*எம்மை மாறாத் துயரில் ஆழ்த்திவிட்டு*
*மீளாத் துயிலில் ஆழ்ந்ததேனோ?*

இன்று (30.11.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. — குடும்பத்தினர்

(10943)(2-6-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
01.07.1934

உதிர்வு
31.10.2011

### திருமதி பொன்னுத்துரை பரமேஸ்வரி

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் இருந்தீர்
அனைவருக்கும் இல்லையெனாது அள்ளி அள்ளிக் கொடுத்தீர்
பொறுக்க முடியாமல் காலனும் வந்து காவுகொண்டானோ
ஆறாது உங்கள் பிரிவு எந்நாளும்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

31.10.2011 காலமான எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசிமூலமும் இரங்கலும், ஆறுதலும் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.*

*மக்கள், மருமக்கள்,*
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(10944)(2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னத்தைச்...
## ...சொல்ல?!
### வெளிநாட்டு மாப்பிள்ளை..........
### .........மோகத்தால் வரும் மோசம்

முடித்தால், கனடா நாட்டு மாப்பிள்ளை இல்லாவிடில் கன்னியாயிருந்து காலத்தைக் கழிப்பேன். நீ எனக்கு உள்ளூர் மாப்பிள்ளையைப் பேசிவந்தால்- ''வளையில் கயிறு போடவும் தயங்க மாட்டேன்'' இப்படி எச்சரிக்கும் ஆரணங்குகள் நிறைந்தது இந்தக் குடாநாடு.

இப்படியான நங்கையரைத் தாலாட்ட ஏதுவாக, தினசரிப் பத்திரிகைகளிலும், பற்பல மாப்பிள்ளைமாரின், வெளிநாட்டு விவரங்கள் வந்த வண்ணமிருக்கின்றன.

அது போதாதென்று ''இன்ர நெற்'', ''பேஸ் புக்'' மூலம் மணப்பெண்களை வருந்தி அழைக்கும் வெளிநாட்டு மாப்பிள்ளைமார் ஏராளம்.

வெளிநாட்டு மாப்பிள்ளையைக் கட்டிவிட்டு ஆறாண்டு காத்திருக்கும் காரிகைகள் பற்பலபேர். இன்னும் விசா கிடைக்கவில்லை என்று ஆருண்டாய் கந்தஷஷ்டிக்குக் காப்புக் கட்டும் கன்னியர்களும் நானறியப் பலபேர் உண்டு.

நானிங்கு வரமாட்டேன். சென்னைக்கு வா! என்று சிங்காரியைக் கூப்பிட்டு சென்னையிலே தாலி கட்டிவிட்டு, சிட்டாக மாப்பிள்ளை பறந்துவிட, சிங்காரி வாயிலும் வயிற்றிலுமாய் வாந்தி எடுத்துவிட்டு வழக்கறிஞர் வீடு வரை ஏறி இறங்கும் பரிதாபம் இங்கு நாம் காணும் அவலம் நிறைந்த அனுபவம்.



சப்பட்டை மாப்பிள்ளையை, வயதிலும் பன்னிரண்டு கூடியவனை, மொட்டந் தலையனை ஏனிவள் மணம் முடித்தாள் என்றால், கல்லூரிக் காதலன் கனடாவில் காத்திருந்து காரிகையைக் கைப்பிடித்துக் கொண்ட கதையும் இங்குண்டு.

மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்து, மணவாளனின் படத்தையும் பெற்று, காதல் கனிமொழிகளைத் தொலைபேசியில் பரிமாறி, கன்னியோ மனம்குளிர மாப்பிள்ளை தான் நேரில் வர முடியவில்லை தன் நண்பனுடன் சேர்ந்து வா! என ஒரு செய்தியை அனுப்பி, அத்துடன் ரிக்கெற்றுக்கும் பணம் அனுப்பி வைக்க, கூட்ட வந்த மாப்பிள்ளையின் கூட்டாளி, இவளோடு சில நாள்கள் கூடித் திரிந்துவிட்டுக் கொழும்பில் ''லொட்ச்'' எடுத்துக் கூடி இருந்துவிட்டு, நண்பனின் காதலியோடு நள்ளிரவில் கம்பி நீட்டிய கதைகளும் பல இங்குண்டு.

கட்டிய கணவன், கல்லாகிப் போனான். எட்டாண்டு இருந்து விட்டேன். இனி அவன் வர மாட்டான் என்று ஏங்கித் தவித்து எலும்புருகி, உடல் உருகி, அலரிக் காயுண்ட அரியவையரும் இங்குள்ளனர். இத்தனையும் எழுதி என்ன? எல்லாமே நன்கறிந்த ஆரணங்குகள். வெளிநாட்டு மோகத்தால், நிலை குலைந்து நிற்கதியாகின்றனர்.

இலண்டன் மாநகரைச் சென்றடைந்த ஆரணங்குகளோடு படும் அவலம் பரிதாபமானது. அவளுக்கோ ஆங்கிலம் ஒரு சொல்லும் தெரியாது. அவனோ அவளை இம்சைப்படுத்துகிறான். என் செய்வாள் இந்த ஏந்திழை. பொலிஸாருக்கு எடுத்துச் சொல்ல ஆங்கிலமோ தெரியாது. அயல் வீட்டுக்காரனுக்கு இவள் அழுகுரல்தான் கேட்கிறது. எத்தனை நாள் இதைப் பொறுப்பாள் அந்தப்பெண். சுற்றுகின்ற காற்றாடியிலே சுருக்கிட்டு மாண்ட கதை பரகசியம்.

இன்னொரு சம்பந்தத்தில்-

கையில் ஒரு வெண்புகையும், காதிலொரு கடுக்கணும், உள்ளத்தில் மதுவுண்ணும் ஊக்கமும் கழுத்திலொரு சங்கு மாலையும், கை இரண்டில் வெள்ளிக் காப்பும், சீவி முடித்த சிறு கொண்டைக்காரனை- நாடி மணம் முடிக்கும், நாகரீக நாட்டம் மிக்க இவள், கணவன் அன்பளிப்பாய் தந்த ''எயிட்ஸ்' எனும் கொடுநோயால் பேதை இவள் ஏழை ஆனாள்.

மற்றொன்று:

கூட்டிச் சென்ற மாப்பிள்ளை டென்மார்க்கில் குமரிகளுடன் கொஞ்சி நடமாட, பார்த்திருந்த பைங்கிளியோ பருத்தித்துறை வந்தடைந்தாள். ஊரார் அதனைக் கேட்க உத்தமியோ நஞ்சுண்டாள். இப்படியாகச் செய்திகள் பல பரவும், நாட்டினிலே, கட்டினால் வெளிநாடு, கட்டாவிடில் சுடுகாடு எனும் சுந்தரிகள், இனியாவது சிந்தித்துச் செயற்படுவார்களா என்று எதிர்பார்க்க முடியுமா என்னவோ....!

பிரசண்டன் 

# நீதிமன்றங்களுக்கான ஆள்சேர்ப்பில் தமிழ் பேசுவோர் எண்ணிக்கை குறைப்பு
## சட்டத்தரணிகள் கவலை

கொழும்பு,நவ.30

நாட்டிலுள்ள நீதிவான் நீதிமன்றங்களுக்கான ஆள்சேர்ப்பில் சிறுபான்மையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என்று சட்ட வல்லுநர்களும், சட்டத்தரணிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட 17 நீதிமன்ற நீதிவான்களில் தமிழ், முஸ்லிம்கள் இருவரே தெரிவு செய்யப்பட்டனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நீதிவான் நீதிமன்றங்களும், சுற்றுலா நீதிமன்றங்களும் புதிதாக அமைக்கப்பட்டுவரும் நிலையில் இந்த ஆள்குறைப்பு நீதிவான்களுக்கான பற்றாக்குறையை ஏற்படுத்தும். இந்தவிடயத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் கவனமெடுத்து வடக்கு, கிழக்கிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## பிரதியமைச்சர் சரண குணவர்த்தனவுக்கு நாடாளுமன்றம் செல்லத் தடை

கொழும்பு,நவ.30

பெற்றோலிய வளத்துறைப் பிரதியமைச்சர் சரண குணவர்த்தன இன்று புதன்கிழமை முதல் ஒரு வாரகாலத்திற்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றுவதிலிருந்து சபாநாயகரால் இடை நிறுத்தம் செய்யப்பட் டுள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதியின் வரவு- செலவுத்திட்டம் மீதான உரையின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்ட குழப்பத்துக்குக் காரணமாகியுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் நாடாளுமன்ற அமர்விலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

(ச)

## துமிந்த சில்வாவின் வைத்தியசாலை பதிவேடு நீதிமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு,நவ.30

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் வைத்தியசாலைக் கட்டில் பதிவேடு புலனாய்வுப்பிரிவினரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தஅறிக்கை நரம்பியல் வைத்திய நிபுணர் மகேஷி விஜேரட்னவினால் கொடுக்கப்பட்டுள்ளது.

நீதிவான் பிரசன்ன அல்விஸினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கு தொடர்பான விசாரணைகளில் தமது கட்சிக்காரர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் எனவும் சந்தேகநபர் அல்ல எனவும் துமிந்த சில்வாவின் சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

பாரதவின் ஆதரவாளர்கள் அளித்த சாட்சியங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்டில் பதிவேட்டு அறிக்கையை துமிந்தவின் சட்டத்தரணிக்கு வழங்கக்கூடாது என்று பாரதவின் சட்டத்தரணி கோரிக்கை விடுத்துள்ளார்.

(ச)

## போகம்பரை சிறைக் கைதிகள் கண் தானம் செய்ய விருப்பம்

கொழும்பு,நவ.30

போகம்பரைச் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்துவரும் 500 கைதிகள் கண் மற்றும் உடல் உறுப்புக்களைத் தானம் செய்ய விரும்புவதாக அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் சிலர் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. கண் மற்றும் உடல் உறுப்புக்களைத் தானம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்து இந்தக் கைதிகள் ஆவணங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பலரும் கண் மற்றும் உடல் உறுப்புக்களை தானமாக வழங்கியுள்ளனர்.

பல கைதிகள் மரணத்தின் பின்னர் தமது உடல் உறுப்புக்களை பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

இதேவேளை, போகம்பரைச் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி திஸ்ஸ ஜயசிங்க உள்ளிட்ட அதிகாரிகளும் தமது கண் மற்றும் உடல் உறுப்புக்களைத் தானமாக வழங்க இணங்கி ஆவணங்களில் கையொப்பம் இட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)



கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது முல்லேரியா பிரதேசத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. அன்றையதினம் நீதிமன்றுக்கு வெளியே பாரத லக்ஷ்மனின் மகள் ஹிருணிக்காவுடன் சட்டத்தரணி திரந்த வலலியத்த உரையாடுகின்றார்.

## நாடு திரும்பியதும் துமிந்தவை கைது செய்வதற்கு நடவடிக்கை
### இரகசியப் பொலிஸார் தகவல்

கொழும்பு,நவ.30

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலையின் சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நாட்டில் இல்லாதததால் அவரைக் கைது செய்ய முடியவில்லை.

அவர் சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பியதும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இரகசியப் பொலிஸார் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்தவழக்கு நேற்றுக் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

துமிந்த சில்வாவின் உடல் நலத் தகுதி குறித்து ஆராய்ந்து வருவதாக இரகசியப் பொலிஸார் சார்பில் நீதிமன்றில் ஆஜரான பதில் பொலிஸ் அதிகாரி சானிஅபேசேகர தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவைக் கைது செய்யச் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும் அவர் நாடு திரும்பியதும் சட்ட மா அதிபரின் ஆலோசனைப்படி நீதிமன்றின் உத்தரவு செயற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கு அந்நாடு தனித்து தீர்வு காண முடியும்

## மலேசிய எம்.பிக்கள் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை வேறு நாட்டு அரசுகளின் தலையீடின்றி இலங்கையால் தனியாகத் தீர்வு காண முடியும் என்று மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஅரசு கடந்த காலங்களில் மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டதாகவும் அதனை நிவர்த்தி செய்ய சரியான தீர்வு வழி வகுக்கும் என்றும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.மனோகரன் மற்றும் எஸ்.ராமகிருஷ்ணன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையால்மட்டுமே அதன் உள்நாட்டு தமிழர்கள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும்" என்று தனது இந்திய விஜயத்தின் போது மனோகரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஏனையவர்களுடன் சேர்ந்து நாமும் இரண்டாம் நிலை பாத்திரமாகவே செயற்பட முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோகரனும், ராமகிருஷ்ணனும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் போர் முடிந்து வெற்றி, தோல்வி அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறிய மனோகரன் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சிறந்த வாழ்க்கை ஒன்றை எதிர்பார்த்துள்ளனர் என்று தெரிவித்தார்.

அரசு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது மாத்திரமன்றி சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் நிலை நாட்ட வேண்டும். இயல்பு நிலை திரும்ப தேவையான இடங்களை வழங்க வேண்டும்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோகரன் மற்றும் ராமகிருஸ்ணன் ஆகியோர் கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு பயணம் செய்து கொழும்பு மற்றும் வடக்கில் உள்ள தமிழர்களைச் சந்தித்தனர்.

இந்தியா பெரும்பான்மை அரசுடன் இணைந்து செயற்படுவதால் சிறந்த தீர்வு ஒன்றை வழங்க அழுத்தம் கொடுக்கும் என்று நம்புவதாக அந்த மக்கள் தங்களிடம் தெரிவித்ததாக இவர்கள் இருவரும் கூறியிருந்தனர்.

எந்தவொரு யுத்தத்திலும் இழப்புகள் ஏற்படுவது வழமைதான் என்று கூறிய மனோகரன், இலங்கை யுத்தத்தில் தமிழர்கள் மாத்திரமன்றி சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துள்ளது. ஆனால் இனப்பிரச்சினை இன்னும் தீரவில்லை என்று குறிப்பிட்ட மனோகரன், விடுதலைப் புலிகளுக்கு தாம் சார்பாகக் கதைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

நல்லிணக்க விடயங்கள் குறித்து இலங்கை மற்றும் இந்தியாவுடன் இணைந்து செயற்படத் தயார் என்று கூறிய அவர், இந்தியா மற்றும் இலங்கை சென்று வந்துள்ளதால் அங்குள்ள நிலைமைகளை தாம் நன்கு அறிந்துள்ளதாகத் தெரிவித்தார். (வ)

# கடன் அட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையர்கள் இந்தியாவில் கைது



கொழும்பு, நவ.30

இலங்கையில் தயாரிக்கப்பட்ட போலி கடனட்டைகளைப் பயன்படுத்தி ஏரி.எம் இயந்திரங்களில் லட்சக் கணக்கில் பணத்தை சூறையாடிய 5 பேர் கொண்ட கும்பலை மதுரையில் பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

இவர்களிடம் இருந்து 40.4 லட்சம் இந்திய ரூபாவும் போலி கடனட்டைகள் பலவும் மீட்கப்பட்டதாக இந்தியப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் ஏரி.எம்மை குறி வைத்து ஒரு கும்பல் தொடர்ந்து கைவரிசை காட்டி வருகிறது. ஏரி.எம். இயந்திரங்களில் பணம் எடுக்க வருபவர்களை நோட்டமிட்டு அவர்களைப் பின்தொடர்ந்து கவனத்தைத் திசை திருப்பி பணத்தைத் திருடிச் செல்வது, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஸ்கிம்மர் கருவிகள் மூலம், ரகசிய எண்களைக் கண்டறிந்து, போலி ஏரி. எம். கடனட்டையைத் தயாரித்து, அதைக்கொண்டு ஏரி. எம்.மையங்களில் லட்சக் கணக்கில் பணம் எடுத்து இந்தக் கும்பல் மோசடியில் ஈடுபட்டு வந்தது.

இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த ஐவரும் ஏனையவர்களின் கடனட்டை இரகசிய இலக்கம் உள்ளிட்ட தகவல்களை அறிந்து கொண்டு மோசடி செய்துள்ளதாகவும் இந்தியாவில் அவர்களுக்கு மோசடி வலையமைப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த அன்டனி ஆனந்தன், பிரதாப், செயிட் அபுதாகிர், விஜயகுமார் மற்றும் கணபதி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டு சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் கணபதி என்பவரிடமிருந்து 20 போலி கடனட்டைகளும் 40,000 இந்திய ரூபாவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

சகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான டிசெம்பர் மாதத்துக்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடை பெறவுள் ளது. சம்பந்தப்பட்டவர்கள் மேற்படி கூட்டத்தில் சமுகமளிக்கு மாறும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# இந்திய அருட்சகோதரியின் கைது: கத்தோலிக்கத் திருச்சபை அதிருப்தி

இலங்கையின் கத்தோலிக்கத் திருச்சபையின் இந்திய வம்சாவளியான கத்தோலிக்க அருட்சகோதரி ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கு அந்த சபை அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

மொரட்டுவ ராவத்தாவத்த பகுதியில் அருட்சகோதரி மேரி எலிசாவினால் நடத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம் பெற்றதாகக் கூறி, அருட்சகோதரி மேரி எலிசா கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் கடும் நிபந்தனைகளுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டார்.

அருட்சகோதரியின் வெளிநாட்டு பயணத்துக்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அத்துடன் சகோதரி சிறுவர் இல்லப் பிரதேசத்துக்குச் செல்லவும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்தநிலையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கத்தோலிக்க திருச்சபை, அன்னை தெரேசாவின் ஆசிப்பெற்ற தாமஸ் தாபனத்தை அருட்சகோதரிகள் இணைந்து மொரட்டுவப் பகுதியில் நடத்தி வருகின்றனர்.

எனினும் அருட் சகோதரிகளுக்கு எவ்வித மரியாதையும் வழங்கப்படாது கைது செய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்ட இந்திய சகோதரியை அவரது சட்டத்தரணி சந்திக்கக் கூட அனுமதி வழங்கப்படவில்லை என்று கத்தோலிக்கத் திருச்சபை குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட சகோதரியின் மீது எந்தவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை என்பதை இலங்கையின் பொலிஸாரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும் சிறுவர்களை விற்பனை செய்தார் என்ற சந்தேகத் தின் பேரிலேயே கைது செய்யப்பட்டதாக இலங்கையின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும் அருட் சகோதரியின் கைது குறித்து தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.


**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு செய்யவும். தொடர்பு:
1. நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், சந்தையடி, கிளிநொச்சி. 0776225944
(10964)(9-6-8)


## மரண அறிவித்தல்

### சின்னையா சிவராஜா



கொடிகாமம், கோயிலாமனையைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்து லிஸ், பேர்ன் (Lyss, Bern) போன்ற நகரங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவராஜா 26.11.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற திரு. திருமதி இளையதம்பி (வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்) தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சேந்தன், சயந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராணி (ஜேர்மனி), பாக்கிய ராணி (இந்தியா), சித்திராணி (இலங்கை), காலஞ்சென்ற புஷ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வீரகத்தியர் (ஜேர்மனி), நடராஜா (இலங்கை), பரமேஸ் வரி (இலங்கை), வேலாயுதபிள்ளை (ஜேர்மனி), பாலசுந்தரம் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2011) வியாழக்கிழமை சுவிற்சர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.
T.P: +41323842767

தகவல்:
குடும்பத்தினர்.
(10962)(9-6-9)


**வாகனம் விற்பனைக்கு**

254XXXX தொடரிலக்கமுள்ள டொல்பின் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:கச்சேரியடி, 0777245029
(10937)(9-6-8)

**வீடு வாடகைக்கு**

யாழ். கந்தர்மடம் மணல்தறை வீதியில் மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. முற்பணம்300,000/= மாத வாடகை 15,000/= தொடர்பு: 0777964220, 0212227308

**J.C.B.BACKHOE இயந்திரம் வாடகைக்கு**

Loader





பழைய கட்டடங்களை இடித்து துப்புரவு செய்யவும் காணிகளைத் துப்புரவாக்கி மட்டப் படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776035633, 0776452019, 0777279151
(10963)(9-6-8)





மண்ணிலிருக்க
கண்ணிமைக்கும்
எண்ணமெல்லாம்
திண்ணமுடன்
விண்ணுலகில்
மண்ணிலெங்கள்

வந்துதித்த
பொழுதினிலே
ஏங்குதம்மா
திருமகளே
வானவரின்
மனங்களிலும்

புதுமலரே
எமைப் பிரிந்த
பிஞ்சுமொழிப்
தேவனவர்
சேனையுடன்
காலமெல்லாம்

கண்மணியே
நற்கனியே
பாலமுதே
அணைப்பினிலே
மகிழ்ந்திருப்பாய்
நிலைத்திருப்பாய்.

54/2,கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம். T.P:-0213213785

என்றும் நீங்கா நினைவுகளுடன்:-
அப்பா, அம்மா, பெரியண்ணா,
அக்கா, குட்டியண்ணா.
(10926)(9-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றில் சபாநாயகர் திருப்புமுனை உத்தரவு
# பிரதியமைச்சர் ஒருவருக்கு ஒருவாரகாலத் தடை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 7 வருட ஆட்சியில் முதல் முறையாக ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர், அதுவும் பொறுப்பான பிரதி அமைச்சர் ஒருவருக்கு ஒரு வார காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தாக்கி சபாநாயகரால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு முறைப்படி சபை முதல்வரால் முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியின் முன்னிலையில் அரங்கேற்றிய அடாவடித்தனத்துக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

இந்த வேளையில் சபா நாயகர் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை சபையில் அறிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி வரவு-செலவுத் திட்ட உரையை ஜனாதிபதி நிகழ்த்த வந்தபோது சபையில் சண்டித் தனம் காட்டியவர்கள் நடத்தையையும் அவர் வன்மையாகக் கண்டித்தார்.

''எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் தவிர்ப்பதற்கு இரு தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்''- எனவும் வேண்டுகோள் விடுத்தார் சபாநாயகர்.

**செவிடன் காதில் ஊதிய சங்கு**

சபா நாயகர் இத்தகைய ஒரு தீர்ப்பினை வழங்கி, பொறுப்பாக நடந்துகொள்ளவேண்டும் என விடுத்த வேண்டுகோளையும் உதாசீனப்படுத்தி விட்டு, பழைய குருடி கதவைத் திறவடி என்ற ரீதியில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்டனர். இந்தச் சம்பவத்தின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க சபையில் விசேட உரை யாற்றினார். அப்போது சரத் பொன்சேகாவின் சிறைவாசம் தொடர்பாகவும் அவர் கருத்துக்களை வெளியிட்டார்.

**துள்ளிக்குதித்தார் தினேஷ்**

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன ''ஒழுங்குப் பிரச்சினை'' என்று துள்ளி எழுந்தார்.

''எதிர்க்கட்சித் தலைவர் நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாகப் பேசுகின்றார். இது ஏற்க முடியாதது. ரணில் சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. நாட்டைக் காட்டிக் கொடுப்பவர். துரோகி'' என்று சீறினார்.

அமைச்சரின் இந்தப் பேச்சு பின் வரிசை உறுப்பினர்களுக்குத் தெம்பை ஏற்படுத்தி விட்டது. இதனால் மீண்டும் கூச்சலும் குழப்பமும் எற்பட்டது.

எதிர்க்கட்சியினர் தாமும் சளைத்தவர்கள் அல்லர் என்று பதிலுக்கு கூச்சலிட்டனர்.

இந்தக் கூச்சல், குழப்பங்களுக்கு மத்தியில் எதிர்த்தரப்பில் ரணில் விக்கிரமசிங்க, யோன் அமரதுங்க, தயாசிறி ஜயசேகர ஆகியோர் தமது தரப்பின் நியாயங்களை முன்வைத்து வாதிட்டனர்.

ஆளும் தரப்பில் அமைச்சர்களான தினேஷ்குணவர்த்தன, நிமால் சிறிபால டிசில்வா ஆகியோர் தமது எதிர்வாதங்களை முன்வைத்தனர்.

இரு தரப்பினதும் வாதங்களை அவதானித்த சபாநாயகர் ''இது ஒரு முக்கியமான விடயம் என்பதால் உடனடியாகத் தீர்ப்பை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நாளை தீர்ப்பு வழங்கப்படும்'' என்று அறிவித்தார்.

அதன்பின் எதிர்க்கட்சித் தலைவர் அமைதியாகச் சபையில் இருந்து வெளியேறினார். அப்போது ஆளும் தரப்பில் இருந்து கூச்சல் அதிகரித்தது

**அஸ்வரை வெளியே செல்ல உத்தரவு**

இந்த நிலையில் ஆளும் தரப்பு உறுப்பினரான ஏ.எச். எம். அஸ்வர் எழுந்துநின்று உரத்த குரலில் ஏதேதோ கூறிக் கொண்டிருந்தார்.

இதனை அவதானித்த சபாநாயகர்,''அஸ்வரை சபையில் இருந்து வெளியேறுமாறு'' பல முறை கூறினார். ஆனாலும் அஸ்வர், ''ஒழுங்குப் பிரச்சினை, ஒழுங்குப்பிரச்சினை'' என்று கத்திக்கொண்டே இருந்தார்.

''என்ன உங்களுடைய ஒழுங்குப் பிரச்சினை?'' என்று சபாநாயகர் கேட்க, அஸ்வர் எதையோ கூற, ''இது ஒழுங்குப் பிரச்சினை இல்லை'' என்று நிராகரித்த சபாநாயகர், அஸ்வருடைய ஒலிவாங்கியை நிறுத்தி விட்டு அடுத்த விடயத்தை ஆரம்பிக்கும் படி உத்தரவிட்டார்.

**சர்ச்சையைக் கிளப்பிய தக்காளியும் தேங்காயும்**

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தக்காளியும் தேங்காயும் சபையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டன.




ஐ.தே.க உறுப்பினரான ரவி கருணாநாயக்க கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார்.

''கடந்த 12 மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்ட காய்கறிகளின் விவரங்களையும் அவை எங்கிருந்து பெறப்பட்டன? அவற்றின் மொத்தப் பெறுமதி எவ்வளவு?'' என்றும் கேட்டார்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பதில் அளித்தார்.

''உருளைக்கிழங்கு, தக்காளி, கோவா பீற்றூட், காளான், போஞ்சி, பூசணி, பசளி, வற்றாளைக்கிழங்கு என்பன இறக்குமதி செய்யப்பட்டன. அவை இங்குள்ள உல்லாச ஹோட்டல்களின் பாவனைக்கு வழங்கப்பட்டன''- என்று கூறினார் அமைச்சர்.

''ஐயா! நமது நாடு ஒரு விவசாய நாடு. இந்த அமைச்சர் என்ன கூறுகின்றார்? இவர் கூறிய மரக்கறி வகைகள் எல்லாம் இங்கே உற்பத்தி செய்யப்படுபவையே. தக்காளிப் பழம் தாரளமாகக் கிடைக்கின்றது. ஆனால் தக்காளியையும் வற்றாளைக் கிழங்கையும் இறக்குமதி செய்து, உள்ளூர் விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளது அரசு - என்றார் ரவிகருணாநாயக்க.

''இல்லை.இல்லை. நாட்டில் உற்பத்தி குறையும் போதும், விலைகள் அதிகரிக்கும் போதும் இவ்வாறு இறக்குமதி செய்து விலைகளைச் சீரான நிலையில் வைத்துள்ளோம். என்று சமாளித்தார் அமைச்சர்.

**கடலில் கொட்டப்பட்ட தேங்காய்கள்**

தக்காளிப் பிரச்சினையை ஒருவாறு சமாளித்த அமைச்சரின் முன்தேங்காயைப் போட்டு மண்டையைக் குழப்பினார் தயாநிதி ஜயசேகர.

''அண்மையில் நாட்டில் ஏற்பட்ட தேங்காய் பற்றாக்குறையை நீக்குவதற்காக பெருந்தொகையான தேங்காய்கள் இறக்குமதி செய்யப்பட்டன, இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனை அமைச்சர் தெளிவு படுத்த வேண்டும்'' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி ஜயசேகர.

''நாட்டில் ஏற்பட்ட தேங்காய் தட்டுப்பாட்டின்போது இந்தியாவில் இருந்து தேங்காய்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பின்னர் தேங்காய் விலை குறைந்த பின்னர் எங்கிருந்தும் தேங்காயை இறக்குமதி செய்யவில்லை ''- என்றார் அமைச்சர்.

''ஐயா இந்த மனிதர் வட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் கொட்டைப்பாக்கின் விலையைக் கூறுகின்றார். தேங்காய் இறக்குமதி செய்ததை நாம் கண்டிக்க வில்லை. இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகையான தேங்காய்களை கடலில் கொட்டியது ஏன்?'' அதை தான் கேட்கிறோம் என்றார் தயாசிறி.

இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத அமைச்சர், ''உள்ளூரில் தேங்காயின் விலை குறைந்துவிட்டதால் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களை அழித்து விட்டோம் என்று பதிலளித்தார்.

அவரது பதிலைக் கொண்டே அமைச்சரை மடக்கினார் தயாசிறி.

''ஐயா! இந்த அமைச்சர் பல இலட்ச ரூபா பெறுமதியான தேங்காய்களை இறக்குமதி செய்து அவற்றை அழித்து விட்டாராம்'' என்று கூறிய தயாசிறி, ''இறக்குமதி செய்து அதன் விலையைக் குறைத்து பண்ணையாளர்கள் வயிற்றில் அரசு அடித்து விட்டது'' என்று அரசையும் சாடினார்.

''இதுதான் இவர்களுடைய பொருளாதாரக் கொள்கை'' என்றும் விமர்சித்தார்.

அமைச்சரிடம் இருந்து பதில் இல்லை. பொல்லைக் கொடுத்து அடி வாங்கி கொண்டார் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ.

**சிறிதரன் எம்பியின் உரை இடைநிறுத்தம்**

வரவு- செலவுத் திட்ட உரை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ். சிறிதரன் பேச ஆரம்பித்தார். அப்போது சபைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தவர் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார். இவரால் பெயர் குறித்து அழைக்கப்பட்ட பின்னரே சிறிதரன் பேச ஆரம்பித்தார்.

வடமாகாணத்தில் போரின் போது பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக அப்போது அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபைக்குள் வந்த ஆளும் கட்சிக் கொறடாவான தினேஷ் குணவர்த்தன இதனை அவதானித்தார். பின்னர் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார். அதாவது ''நாடாளுமன்ற ஒழுங்கு விதிகளின் படி ஒரு விடயம் தொடர்பாக ஒரு உறுப்பினர் ஒரு முறைதான் உரையாற்ற முடியும். கௌரவ உறுப்பினர் ஏற்கனவே உரையாற்றிவிட்டார். எனவே இரண்டாவது தடவையாகவும் அவர் உரையாற்ற இடமளிக்க முடியாது'' என்றார்.

இதைத் தெளிவு படுத்திக் கொண்ட குழுக்களின் பிரதித் தலைவர், சிறிதரனை அமரும் படி கட்டளையிட்டார். சிறிதரனின் உரை இடை நடுவில் நிறுத்தப்பட்டது.

**கூட்டமைப்பினரின் கவனயீனம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நீண்டகால நாடாளுமன்ற அனுபவம் உள்ள அதன் தலைவர் சம்பந்தன் வழி நடத்திச் செல்பவர். தமது கட்சியின் சார்பில் உரையாற்றுபவர்களின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பிப்பதும் கட்சிதான். இவர்களுக்கு நாடாளுமன்ற ஒழுங்கு விதிகள் தெரியாதா? ஒரு விடயத்தில் ஒரு முறை பேசியவர் இரண்டாவது தடவையாக பேசமுடியாது என்பதும் இவர்களுக்குத் தெரியாதா? அசண்டையீனமாக இருக்கிறார்கள் என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

**வீட்டுக்குள் இருக்கும் நெருப்பை வெளியே கொட்ட வேண்டாம்: பிரதமர் ஆலோசனை**

வழமையாகவே நகைச்சுவையாகப் பேசி ஆழமான விடயங்களைக் கூறுபவர் பிரதமர். நேற்று அவர் உரை நிகழ்த்தும் போது ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். அதாவது,

''உள்நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை உள்நாட்டிலேயே பேசித் தீர்க்க முடியும். அதனை வெளிநாடுகளுக்குக் கொண்டுசெல்வதால் நன்மை ஏற்படப் போவதில்லை. இந்தச் சபையில் இடம்பெற்ற சம்பவங்களை பொதுநலவாய நாடுகளுக்குக் கொண்டு செல்வது முறையாகாது. வீட்டுக்குள் இருக்கும் நெருப்பை வெளியே கொட்ட வேண்டாம். அது ஆபத்தானது'' என்று கூறிய பிரதமர், வழமைபோல மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தைப் பாராட்டியும் வாழ்த்தியும் ஒரு கவிதை பாடி முடித்தார்.

**மழை விட்டாலும் தூவானம் ஓயவில்லை**

குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமாரும் உரை நிகழ்த்தினார். மழை ஓய்ந்தாலும் தூவானம் விடவில்லை என்பது போல் போர் முடிந்து விட்டாலும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் நீங்கவில்லை என்றார்.

''போர்க்காலத்தில் எமது மக்கள் தமது தேவைகளை சுருக்கிக் கொண்டு ஜீவனம் நடத்தினர். இப்போது போர் முடிந்து விட்டது. இனிமேலாவது நிம்மதியாக வாழவேண்டும், அதற்கான திட்டங்கள் தேவை, என்ற மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர். அவர்களுடைய அடிப்படைத் தேவைகளையும், உரிமைகளையும் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார். இடையில் கூட்டமைப்பினர் மீது தாவவும் அவர் தவறவில்லை.

**ரோஸி சீற்றம்**

தாய் நாட்டுக்காக மூன்றுமுறை தன் உயிரையும் பணயம் வைத்துப் போராடியவர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா. 'வெள்ளைக்கொடி' விவகாரத்தில் ஏதாவது தவறாகக் கூறியிருந்தாலும் அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கியிருக்க வேண்டும். அது இந்த நாட்டுக்கும், நாட்டைப் பாதுகாத்தவர்களுக்கும் செய்யும் நன்றிக் கடனாகும்'' - என்றார் ஐ.தே.க உறுப்பினரான ரோஸி சேனநாயக்க.

இவர் பேசும்போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சிலர் நக்கல் அடித்துக் கொண்டே இருந்தனர். அதற்கும் பதிலடி கொடுத்தார் ரோஸி.

''நாங்கள் இவர்களைப் போல் தண்ணீர்ப் போத்தலால் தாக்கவில்லை. ஜனாதிபதியை அவமானப்படுத்தவும் இல்லை. நாட்டுக்காக சேவை செய்த சரத் பொன்சேகாவைச் சிறையில் அடைத்துவிட்டு, இராணுவத்தினரின் வாழ்க்கையை மேம்படுத்துவோம் என்று கூறியது தான் வெட்கம் என்கிறோம்'' என்றார் ரோஸி.

**புலம்பெயர் சமூகங்களுக்கு அழைப்பு**

''எமது கடற்றொழிலாளர்கள் ஒருபக்கம் இந்திய மீனவர்களாலும் மறுபக்கம் தென்பகுதி மீனவர்களினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அரசு அதனைக் கண்டும் காணாதது போல் இருக்கின்றது. எமது கடற்பரப்புக்குள் வரும் இந்திய மீனவர்களின் பெரும் இயந்திரப் படகுகள் எமது கடல் வளங்களை அழித்து விடுகின்றன. இலங்கை-இந்திய மீனவர்களை மோத விட்டு வேடிக்கை பார்க்கிறது இலங்கை அரசு. கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களை மறப்போம்.நான் புலிகளுக்கு வக்காலத்து வாங்கவில்லை. புலிகளும் தவறு செய்துள்ளனர். அதேபோன்று இராணுவமும் தவறு செய்துள்ளது. இதற்கெல்லாம் பிராயச்சித்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்வரவேண்டும்'' என்று செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டார்.

அதேவேளை, ''புலம்பெயர் தமிழர்கள் எமது தாய்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவு வழங்கினால், நாம் அரசிடம் மண்டியிடவேண்டிய அவசியம் ஏற்படாது'' என்றும் கூறினார் அடைக்கலநாதன்.

வரவு- செலவுத் திட்ட உரையின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று புதன்கிழமை நடைபெறும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் நாளை முதலாம் திகதி ஆரம்பமாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் கல்வி என்பது புணர்ச்சி சார்ந்தது அல்ல; அந்த எண்ணம் தவறானது

**PATHWAY COUNSELORS இன் இயக்குநரும் நிறுவுநரும் பாலியல் எச்.ஐ.வி./எயிட்ஸ் சார்ந்த உளவளத் துணையாளரும் நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் உப தலைவருமான கந்தர் விசுவலிங்கம் கந்தவேளுடனான உதயனின் நேர்காணல்**

**யாழ். மாவட்டத்தில் தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை முன்னர் என்றும் இல்லாதவாறு விடம்போல் வீறு கொண்டுள்ள இவ்வேளையில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் எவ்வாறானவையாக அமைய வேண்டும் என எண்ணுகிறீர்கள்?**

அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடிய நபர்களை மையப்படுத்தியவைகளாகவே அமைதல் சாலச் சிறந்தது. ஆனால் இவர்களை இலகுவில் இனங்காணவல்ல எத்தகைய முயற்சியிலும் இன்றுவரை இங்குள்ள அரச அலகினர் முயலாமை வேதனையைத் தருகிறது. குறிப்பாகத் தொற்றுக்குள்ளான பெண்களில் 60 வீதத்தினர் தமது கணவன்மார்களாலேயே தொற்றுக்குள்ளானவர்கள் என்பதை எமது மாவட்டத்தின் மருத்துவத் துறையினர் மறந்தும் மறந்துவிடக்கூடாது.

**நீங்களாவது பாலியல் தொழிலாளிகளை, ஓரினச் சேர்க்கையாளர்களை மையப்படுத்திய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்தானே ?**

பயன்தரவல்ல தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் எக் குழுவினரையும் ஆபத்தானவர்கள் என முத்திரை குத்தக்கூடாது. ஒவ்வொரு தனி மனிதனது நடத்தைக் கோலங்களே தொற்றுக்குக் காரணங்களாக அமைகின்றன என்பதை நான் நன்கு அறிந்துள்ளேன். மேற்குறிப்பிட்ட குழுவினரில் பலர் தொற்று அற்றவர்களாக வாழ்வதையும் பாலியல் தொற்று மற்றும் எச்.ஐ.வி./எயிட்ஸ் சார்ந்தவற்றில் ஆழ்ந்த அறிவுடையவர்களாகவும் தடுப்பு நடவடிக்கைகளில் அரச அலகினரைவிட அதிக அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் ஈடுபடுவதை நான் அவ்வாறான அமைப்புகளில் அவர்களுடன் ஒன்றிணைந்து பல ஆண்டுகள் தொண்டாற்றியமையால் நன்கு அறிவேன்.

பலர் தாம் தொற்றுக்குள்ளாகுவதைத் தடுப்பதில் மட்டுமல்ல ஏனையோரையும் தொற்றிலிருந்து பாதுகாப்பதில் மிக அக்கறையாக உள்ளனர். சந்தர்ப்ப வசத்தினாலோ அல்லது சபலத்தினாலோ ஆபத்து விளைவிக்கவல்ல நடவடிக்கைகளில் ஈடுபட்டு தொற்றுக்குள்ளான ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த பலர் தமது தொற்று நிலையைப் பகிரங்கமாக எடுத்துரைத்து தடுப்பு மற்றும் பேணிப் பாதுகாத்தல் என்பனவற்றில் பயன்தரவல்ல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எம்மவரோ தமது தொற்று நிலைபற்றிப் பகிரங்கப்படுத்த அஞ்சுகின்றனர்.

இதற்கான முழு முதற் காரணகர்த்தாக்களில் ஒருவர் யாழ்.போதனா மருத்துவமனை 33ஆவது அறையின் மருத்துவ அதிகாரியே. மருத்துவர்களுக்கான நன்நெறிக்கோவையில் குறிப்பிடப்பட்ட பலவற்றுக்கு முரணாகவே இவ்வறையில் நோயாளர்கள் நடத்தப்படுகிறார்கள் என்பது குடாநாடு அறிந்த உண்மை.

**பெண்கள் தொற்று நிலை பற்றி?**

பெண்கள் தொற்றுக்குள்ளாகுவதற்கு முழுமுதற்காரணமாக அமைவது அவர்களின் அறியாமையுடனான பேரம் பேச இயலாமையே.

ஆண்களின் மேலாதிக்க நிலையில் கணவன்மார்கள் பல்வேறு பாலியல் தொற்றுக்கு உள்ளாகியமையை நன்கு அறிந்தும் பேரம் பேச இயலாமையால் தொற்றுக்குள்ளாகிய பெண்களில் பலருக்கு எமது அமைப்பினர் உளவளத் துணை வழங்கியுள்ளனர்.

**இவ்வாறான நிலையிலிருந்து பெண்கள் மீண்டு எழ ?**

பாலியல் சார்ந்த கல்வியை அவரவர் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ப நன்கு பயிற்றப்பட்ட தன்னலமற்ற மனித நேயமிக்கவர்களால் இவர்களுக்கு வழங்க வேண்டும். திருமணத்துக்கு முன் உளவளத்துணை வழங்க வேண்டும். இளவயதினருடன் இச்சையைத் தூண்டக் கூடிய நாடகங்களையும் சினிமாக்களையும் மணிக்கணக்காக ஒன்றாகப் பார்க்கும் பல பெற்றோர்களும் பொதுமக்களும் பாலியல் கல்வி என்பது புணர்ச்சி சார்ந்தது என்ற ஏற்கனவே பற்றிக்கொண்ட சில தவறான எண்ணங்களின் அடிப்படையில் ஏற்க மறுக்கின்றனர். அவ் எண்ணத்தை நீக்கிடவேண்டும்.

**நீங்கள் ஏன் தன்னினச் சேர்க்கையாளர்கள் பாலியல் தொழிலாளிகளை மையப்படுத்தி உங்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடாது?**

உன்னிப்பாகக் கவனியுங்கள்

அ. குழுவினர் அனைவருமே எயிட்ஸ் தொற்றுக்கு இலக்கானவர்களா?

ஆ.இவர்கள் அனைவர்களைப் பற்றிய தகவல்களோ தரவுகளோ உள்ளனவா ? அத்துடன் சரியாகக் கணக்கிட முடியுமா ? முடியாது எனின் அதற்கான காரணங்கள் எவை ?

காரணங்கள் என நான் கொள்பவை எச்.ஐ.வி.யைச் சுற்றிச் சுழல்கின்ற பயம் உண்மையை மறுதலித்தல், முத்திரை குத்தல், ஓரங்கட்டி ஒதுக்கித்தள்ளல் என்பவற்றுடன் தேசத்தின் நீதிநெறிக் கொள்கை, அரச அலகினரின் அர்ப்பணிப்பு இன்மையுமே. இவைகளாலேயே இவ்வாறானவர்கள் மறைந்தே வாழ்கின்றனர். இவர்கள் எண்ணிக்கையை இலகுவில் கணக்கிட இயலாதுள்ளது. இவர்களின் உள்ளத்தை முதலிலே வென்றெடுக்க வேண்டும்.

**சுமுகமான நிலையை உருவாக்க ?**

பாலியல் தொற்று சார்ந்த நடவடிக்கையில் ஈடுபடும் எம்மவர்கள், ஏனைய மாவட்டத்தில், ஈடுபடும் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் அரச அலகினர் போன்று தீர்ப்பிடாதும் அர்ப்பணிப்புடனும் மருத்துவ சபையினர் சுட்டிக்காட்டுகின்ற நெறி முறைகளுக்கு ஒப்ப நடந்திடவேண்டும்.

யாழ். போதனா மருத்துவமனை யாழ்.மாவட்ட மக்களுக்கு மட்டுமல்ல வட புலத்தவர்களின் மருத்தவ தேவையையும் நிறைவு செய்திடும் ஒன்றாக உள்ளது.

எனவே யாழ். போதனா மருத்துவமனையின் 33 ஆவது அலகின் மருத்துவ பரிசோதனை அறை மருத்துவத்துறையினருக்கான நன்நெறிக் கோவையில் சுட்டிக்காட்டிய வகையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

மேலும் இத்துடன் இங்கு இரகசியம் பேணத்தக்க சூழ்நிலையும் உருவாக்கப்பட வேண்டும். பேணத்தகாத இக் கொடூர நிலை பற்றி நேரிலும் ஊடகங்கள் மூலமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மருத்துவ அதிகரிக்குச் சுட்டிக்காட்டியும் இன்றுவரை அந்த நிலை நீங்க எவ்விதநடவடிக்கையும் அவரால் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் ஆபத்துக்குள்ளாகி விட்டோம் என அஞ்சுகின்றவர்களில் பலரும் தொற்றுக்கு உள்ளான பலரும் அங்கு செல்லாது அதிக பணத்தைச் செலவு செய்து கொழும்பு சென்று சிகிச்சை பெறும் சிலரை அவரது உயர்அதிகாரிகள் விசாரணை மேற்கொள்ளும் வேளை முன் நிறுத்த எம்மால் இயலும்.

**அரசு தேவையானவற்றை வழங்காமை காரணமாக இந்தநிலை உருவாகி இருக்கலாம்தானே ?**

அரசு வழங்கிய வளங்களையே இந்தவறையினர் முறைப்படி பயன்படுத்துவது இல்லை. இங்கு சிகிச்சை வழங்கக்கூடிய சாதாரண பாலியல் தொற்றுகளுக்குமே இங்கு பணியாற்றும் மருத்துவர் சிகிச்சை வழங்காது இடநெருக்கடியும் வேலைப்பளுவும் மிக்க Wards மருத்துவ நிபுணரிடம் அனுப்பி விடுவதை வழக்கமாகிக் கொண்டுள்ளமை பரம இரகசியம்.

இதனால் பல வேளைகளில் இரகிசியமாகப் பேணப்பட வேண்டியவை இலகுவில் கசிந்து விடுவதற்கான வாய்ப்புகளும் ஏற்பட்டுள்ளன. என மருத்துவ அதிகாரி மனித உரிமைக்குழுவினரது விசாரணையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசு வடிவமைத்த ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நோயாளர்கள் பரிசோதிக்கப்படுவதில்லை.

**இவை பற்றி தாங்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் பற்றி ?**

மனித உரிமை ஆணைக்குழுவில் இரகசியம் பேணாமை சார்ந்த முறைப்பாட்டை முன்வைத்த வேளை இர கசியம் பேணத்தக்க சூழ்நிலை மிக விரைவில் உரு வாக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆண்டுகளாகியும் எதுவுமே ஆகவில்லை . எதுவுமே ஆகாத நிலையில் அடுத்து நீதி தேவதையிடம் முறையிடுவது பற்றிச் சிந்திக்கிறோம்.

**எச்.ஐ.வி. தொற்றும் முறை பற்றி விளக்குவது மிகவும் சிரமமான பணிதானே ?**

ஆம் எயிட்ஸ் தினத்தில் மட்டும் விளம்பரத்துக்காக எதோ ஒன்றை முன்னெடுத்துவிட்டு செய்ய வேண்டியவற்றில் எதனையுமே செய்யாது விட்ட அதிகாரிகள் அரசைக் குறைகூறாது இனிவரும் ஆண்டுகளிலாவது அரசு வழங்கிய வளங்களை உரிய வகையில் பயன்படுத்துவதுடன் மருத்துவ நன்நெறிக் கோவைக்கு உட்படச் செயலாற்றுவார்களாகில் எவை, எவர்களைச் சென்றடைய வேண்டுமோ அவை அவர்களைச் சென்றடையும்.

ஏனைய மாவட்டங்களைப் போல் இங்கு இனங்காணுவதற்கான நடவடிக்கைகள் ஏன் முன்னெடுக்கப்படவில்லை என எண்ணுகிறீர்கள் ?

தமது வரையறுக்கப்பட்ட கடமைகளையே நிறைவேற்றாதவர்கள் இவ்வாறான அர்ப்பணிப்புடனான பணிதனை மேற்கொள்வார்களா?

**மாற்று வழிகள் ?**

இன்று எச்.ஐ.வி. சார்ந்த விடயங்களில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்கள் ஒன்றுகூடி

அ. தாம் சக்தியுடனும் வல்லமையுடனும் பணியாற்றக்கூடிய பகுதிகளை இனங் கண்டபின் தம்மிடையேயுள்ள அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் ஈடுபடுவர்களின் துணையுடன் ஆபத்து விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்களையும் ஈடுபட்டவர்களையும் இயன்றளவு இனங்காணவேண்டும்.

ஆ. அதன் பின் இனங்காணப்பட்டவர்கள் இலகுவாகவும் இரகசியமாகவும் பொலிஸாரையும் சுகாதாரத் துறையினரையும் அச்சமின்றி சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண் டும். பொலிஸாரும் பொதுமக்களும் எம் தேசத்தின் நீதி நெறிக்கு முரணான நடத்தைக் கோலங்களில் ஈடுபடுபவர்களை ஓரக்கண்ணால் பார்க்கின்றமையைத் தவிர்த்து அவர்களும் தொற்றுக்குள்ளாகாது வாழ தம்மாலானவற்றை வழங்க ஆவனபுரிய வேண் டும்.

தண்டனை வழங்குவதையே முழுமுதல் நோக்கமாகக் கொள்ளாது அவ்வாறான நடவடிக்கை களில் ஈடுபடக் காரணமாக அமைந்தவற்றை இயலுமானாவரை கண்டறிந்து அவ்வாறானவற்றைத் தாமாகவே களைய முன்வர வேண்டும். இயலாதவிடத்து அப்பணியில் ஈடுபடும் தகுதியானவர்களிடம் அவ் விடயத்தை ஒப்படைக்க வேண்டும்.

இ.சட்ட விதிகளுக்கு முரணான நடத்தைக் கோலங்களில் ஈடுபட்டவர்களையும் ஈடுபடுபவர்களையும் சீர்படுத்தி செம்மைப்படுத்த சுகாதாரத் துறையினர் தமது மேலாதிக்க செயற்பாட் டைத் தவிர்த்து தரமிக்க தொண்டர் நிறுவனங்களு டன் ஒன்றிணைந்து சமூக உறுப்பினர்களைக் களத் தில் இறக்கித் தகவல்களையும் தரவுகளையும் உரிய முறையில் திரட்டல் வேண்டும்.

**இவை எம் மண்ணில் சாத்தியமா?**

இன்று அதிக அளவில் தெரியவந்துள்ள போதைப் பொருள் பாவனையிலும் அக்கறை காட்டியே ஆக வேண்டும். இவ்வாறான முயற்சி ஏனைய மாவட்டங்களில் வெற்றியளித்துள்ளது. எமது கலாசார பண்பாட்டுப் பின்னணியை ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிகளவான வேறுபாட்டைக் காண இயலாது. எனவே மிகமிகச் சாத்தியமானது.

புறக்காரணிகளை முதன்மைப்படுத்தித் தமது நடத்தைக் கோலங்களுக்குத் தாமே பொறுப்பு என்பதை உணராது அடுத்தவர்களையே குறை கூறுபவர்கள் ஏனையவர்களைக் குற்றவாளிக் கூண்டிலும் நிறுத்து கின்றனர்.

இந்நிலை மாறவேண்டும். தவிர்த்து எமது நடத்தைக் கோலங்களுக்கு நாமே பொறுப்பேற்க வேண்டும்.

**நீங்கள் புறக்காரணிகள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறீர்கள் ?**

கூட்டுக் குடும்பக் குலைவு, இடப்பெயர்வு, நகரம் நோக்கிய நகர்வு, காலந்தாழ்த்திய திருமணங் கள் இவை அனைத்தையுமே தவிர்க்க முயலுவது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று. ஆகவே இவற்றின் தீய மற்றும் பக்க விளைவுகளைத் தவிர்க்க இதய சுத்தியுடன் முயலவேண்டும்.

பாலியல் சார்ந்த கல்வியை எமது இளவயதினருக்கு உரியவேளை புகட்டுவதிலும் நடத்தைக் கோலங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் பெற்றோர், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், மருத்துவர்கள், உளவளத்துணையாளர்கள் பங்களிப்பை வழங்கக் கூடியவர்கள் எனக் குறிப்பிடலாம்.

**இப் பணி பற்றி ?**

மிகமிகக் கடினமானது. இன்றும் நாம் முன்னெடுக்கும் ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளுக்குமே. தன்னலமிக்க அரச அலகினால் சிலர் பல்வேறு தடைகளைத் திட்டமிட்டே மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படமாட்டாது

## உறுதியளிக்கின்றார் துணைவேந்தர் முஹம்மட் இஸ்மாயில்

அம்பாறை,நவ.30

சம்மாந்துறையில் அமைந்துள்ள இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீடம், எந்தவகையிலும் அபிவிருத்தியிலோ வளர்ச்சியிலோ புறக்கணிக்கப்படமாட்டாது. இந்தப் பீடத்தின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் எதிர்காலத்தில் மேலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எல்.எம்.முஹம்மட் இஸ்மாயில் உறுதியளித்துள்ளார்.

சம்மாந்துறையிலுள்ள இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீடத்துக்கான புதிய மூன்றுமாடிக் கட்டடத் தொகுதி மற்றும் மாணவர், விரிவுரையாளர் விடுதிக்கான நிர்மாண ஆரம்ப அங்குரார்ப்பண விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த அங்குரார்ப்பண விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்மாந்துறையிலமைந்துள்ள இப்பீடம் அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும் புறக்கணிக்கப்பட்டுவந்ததுடன், இந்தப் பீடத்தை ஒலுவில் வளாகத்துக்குக் கொண்டு செல்லப் போகின்றோமென்ற சந்தேகமும், அபிப்பிராயமும் மக்கள் மத்தியில் பரவலாக இருந்துவந்தது.

குறிப்பாகச் சம்மாந்துறையிலுள்ள சமூக அமைப்புக்கள் மத்தியில் இக்கருத்து வலுப்பெற்றிருந்த போதிலும் நான் துணைவேந்தராகப் பதவியேற்ற பின்னர் உண்மை நிலைமைகளைத் தெளிவுபடுத்தி வந்தேன்.

எனது விளக்கங்கள் எந்தளவுக்கு அவர்களுக்குத் திருப்தியைக் கொடுத்ததோ தெரியவில்லையெனினும் இந்தப் பீடத்தின் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருப்பதாகவும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.

நாம் பல மில்லியன் நிதிகளைச் சம்மாந்துறை பிரயோக விஞ்ஞான பீடத்துக்கும் முதலீடு செய்துள்ளோமென்ற உண்மையையும் மறைக்க முடியாது.

குவைத் அரசின் 800 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில், பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் பிரயோக விஞ்ஞானபீடம் உட்படுத்தப்படவில்லை.

இதனாலும் சம்மாந்துறை பிரயோக விஞ்ஞானபீடம் புறக்கணிக்கப்படுவதாகச் சந்தேகம் எழுந்தது.

கடந்த காலங்களில் இந்தப் பீட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் முன்னெடுப்புக்கள், நடவடிக்கைகள் பலமாக மேற்கொள்ளப்பட்டமையும் இதற்கு ஒரு காரணம்தான்.

ஆனால் இன்று கணிசமான நிதி கிடைக்கப் பெற்றுள்ளதால் பிரயோக விஞ்ஞானபீட மூன்றுமாடி கட்டடத் தொகுதியும் இந்தப் பீட விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கான விடுதிகளும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஒருவருடகாலத்துக்குள் இந்தக் கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்படவுள்ளன.

எதிர்காலத்திலும் இந்தப் பிரயோக விஞ்ஞானபீடத்தின் அபிவிருத்தியிலும் நாம் கூடிய அக்கறை காட்டுவதுடன், இதற்கான ஆக்க பூர்வதிட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பெறுமானம் சேர்க்கப்பட்ட நிறுவனமாகத் திகழ அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

(ச-30)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவு அதிகரிப்பு

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுவந்த பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் சமூகத்தில் பின்தங்கிய நிலையிலுள்ளவர்களை மேம்படுத்துவதற்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களுக்கும் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த 100 ரூபா தொடக்கம் 300 ரூபா வரையிலான கொடுப்பனவுகள், கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் அதிகரிக்கப்பட்டிருந்தன என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த மாதம் தொடக்கம் ரூபா 250 முதல் ரூபா 500 வரையிலான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் இதற்கென ரூபா 40 மில்லியன் தேவைப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## காட்டு யானைகளால் தொல்லை

தியத்தலாவை, நவ. 30

மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சொறபொற கிராமத்தில் யானைத் தொல்லை அதிகரித்து வருகின்றது.

மஹியங்கனை பிரதேசத்தில் சொறபொற கிராமத்திற்குள் தினமும் காட்டுயானைகள் உட்புகுந்து தொல்லை கொடுக்கின்றன. அவை வீடுகளிலுள்ள தானியங்களை உண்ணுகின்றன. இருபது வீடுகளுக்கு மேல் பலத்த சேதத்துக்குள்ளாகி இருப்பதாக மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர். மஹியங்கனை வனப் பகுதியை அண்மித்த இந்தக் கிராமத்திற்குள் யானைகள் கூட்டம் கூட்டமாக நுழைவதால் மக்கள் பலத்த இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார். (ச)

# மழை வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு பிரதேச செயலகமே பொறுப்புக் கூறவேண்டும்

### தமிழரசுக்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

அம்பாறை,நவ.30

''கல்முனை மாநகரசபைக்குட்பட்ட தமிழ்ப்பிரதேசங்கள் மழைவெள்ளத்தினால் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு ஏற்படும் அவலங்களுக்கும், பாதிப்புகளுக்கும் கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகமே பொறுப்புக்கூற வேண்டும்.''

இவ்வாறு, கல்முனை மாநகர சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் அழகக்கோன் விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் இரண்டாவது மாதாந்தக் கூட்டத்தில் மழைவெள்ள நிலைமைகள் தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை நீடிக்குமானால் கல்முனை மாநகரசபைக்குட்பட்ட தமிழ்ப் பிரதேசங்கள் மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நினைத்தமாதிரி, எவ்வித திட்டமிடலோ, வடிகால் வசதிகளோ இன்றி எமது தமிழ்ப் பிரதேசங்களில் பல வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன.

சில இடங்களில் மக்கள் குடியிருப்பு நிலங்களை விட்டும் ஒன்றரை அடி உயரத்தில் கூட சில வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் மழை வெள்ளம் வடிந்தோட முடியாது வீதிகளிலும், குடியிருப்பாளர் காணிகளிலும் மழைவெள்ளம் தேங்கி மக்களை அவலத்துக்குள்ளாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

நமது மாநகர சபையின் எவ்வித அனுமதியோ, ஆலோசனைகளோ பெறப்படாமல்தான் தோன்றித்தனமாகவே இத்தகைய வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் மாநகரசபையின் அனுமதியின்றி நினைத்த மாதிரி வீதிகள் அமைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த மாநகர முதல்வர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்-என்றார்.

(ச-30)

# கல்முனை பஸ் நிலைய வர்த்தக நிலையங்கள் இன விகிதாசாரப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

### மக்கள் ஜனநாயகக்கட்சி வலியுறுத்து

அம்பாறை,நவ.30

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பிரதான பஸ்நிலைய வர்த்தக நிலையங்கள் இன விகிதாசாரப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் ஜனநாயகக்கட்சி இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனமொன்றின் நிதி உதவியுடன் கல்முனை மாநகரில் நிர்மாணிக்கப்பட்ட நவீன பஸ் நிலையத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் உள்ளன.

நவீன பஸ்நிலையம் நிர்மாணிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்தும் இந்த வர்த்தக நிலையங்கள் வாடகைக்குப் பகிர்ந்தளிக்கப்படாது பூட்டிய நிலையிலேயே காணப்படுவதுடன், இதன் மூலம் வருமானத்தைத் தேடிக் கொள்வதில் கல்முனை மாநகரசபையின் கடந்த ஆட்சியினர் அசமந்த நிலையிலேயே இருந்து வந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் எஸ்.லோகநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாநகர சபையின் புதிய முதல்வர் இந்தக் கடைகளைத் திறந்த கேள்விப் பத்திரம் மூலம் வியாபாரிகள், பொது மக்களுக்கு வாடகைக்கு வழங்கத் தாம் விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது வரவேற்கத்தக்க விடயமாயினும், திறந்த கேள்விப் பத்திரம் மூலம் கடைகளை வழங்கவுள்ளமை தமிழ் மக்கள் சார்பில் இந்தக் கடைகளில் சிலவற்றையாவது பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை களநிலவரப்படி வழங்காது என்ற கருத்து தமிழ் மக்கள் மத்தியில் மேலெழுந்துள்ளது.

ஏற்கனவே கடந்த சபை ஆட்சியின் போது, தமிழ், முஸ்லிம் மக்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப இந்தக் கடைகளைப் பகிர்ந்தளிப்பதெனப் பல தீர்மானங்கள் சபையின் மாதாந்த செயலமர்வுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாவட்ட அபிவிருத்தி சபை நிர்வாகம் இருந்தபோது கல்முனை நவீன சந்தைக் கடைகள் பகிர்ந்தளிப்பில் தமிழ் மக்களுக்குக் காட்டப்பட்ட புறக்கணிப்புகள் போன்ற கசப்பான நிகழ்வுகள் இன்னும் தொடரக்கூடாது. எனவே கல்முனை மாநகரம் வாழ்தமிழ் மக்கள் திருப்தி கொள்ளும் வகையில், இன விகிதா சாரப்படி கல்முனை பஸ் நிலையக் கடைகளை வழங்க புதிய முதல்வர் ஆவன செய்ய வேண்டும்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-30)

# கிழக்கில் இடைவிலகல் மாணவர்களை மீள இணைத்துக்கொள்வதில் சிக்கல்

ஆலையடிவேம்பு, நவ.30

கிழக்கு மாகாணத்தில் 10 வயதுமுதல் 14 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடை விலகிக்கொள்கிறார்கள். அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வறுமை காரணமாக 68 ஆயிரம் சிறார்கள் பெற்றோர்களுக்கு உழைத்துக்கொடுக்கும் பணிகளிலேயே ஈடுபட்டு வருகிறார்கள் என்று யுனிசெவ் அமைப்பு நடத்திய ஆய்வின்மூலம் தெரிய வருகிறது. நாடு முழுவதும் வருடாந்தம் இரண்டு லட்சம் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து விலகிக்கொள்கிறார்கள். அவர்கள் பெற்றோர்க்கு உழைத்துக் கொடுக்கும் பணியில்தான் அதிகமாக ஈடுபடுகிறார்கள். உயர்தர வகுப்பு வரையில் படித்து விட்டாலும் கூட மேசன் வேலைக்கு அல்லது கூலிவேலைகளுக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது. படித்தமைக்கு ஏற்ப தகுதியான தொழில் கிடைப்பதில்லை என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:**
எந்த வேலையையும் பிற்போட்டு வைக்காமல், இன்றே செய்து முடிப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். நீண்ட நாள்களாகப் பேசாத நண்பர் ஒருவர், உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். உறவுப் பெண்கள் சிலருக்கு உதவி செய்யலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வேலைப்பளு கூடும்.



**இடபம்:**
தொழில் ரீதியாகவோ அல்லது சுபகாரிய நிகழ்ச்சியில் பங்கேற்கவோ வெளியூர் பயணம் செல்லலாம். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆள்பட்டு நடக்கலாம். மற்றவர்கள் சொல்லும் விடயங்களைக் கேட்டு அதிலிருந்து அனுபவ பாடம் கற்றுக் கொள்வீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும் நாள். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம்.



**மிதுனம்:**
ஆரம்பித்த வேலைகளை முழுமையாகச் செய்ய முடியாமல் இடைநடுவில் தடைப்படலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகள் நேரும். ஒருவரிடம் கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாயம் உருவாகும். மன அமைதியைப் பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கும். விரக்தி உண்டாகும்.



**கடகம்:**
கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த முக்கிய தகவல்கள் வந்து சேரலாம். பணிபுரிவோர் அடுக்கடுக்காக குவியும் வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். மனைவி வழி உறவுகளால் அனுகூலம் பெற வாய்ப்பு உண்டு. உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பயணங்கள் தங்கு தடையின்றி அமையும்.



**சிங்கம்:**
உறவினர் ஒருவர் உங்களிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவார். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைக்கு ஆதரவு தெரிவிப்பர். சிலர் மருத்துவ சிகிச்சைகளை மேற் கொள்ள லாம். மலை போல பெரிதாக நினைத்த பிரச்சினை ஒன்று எளிதாக முடியலாம்.



**கன்னி:**
வேண்டா வெறுப்பாக சில செலவுகளைச் செய்வீர்கள். நீங்கள் எங்காவது அவசரமாகப் புறப்படும் நேரத்தில், யாராவது வேறு வேலைகளை சொல்லித் தொந்தரவு கொடுக்கலாம். உல்லாசமான செயற்பாடுகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக் குப் பயணம் செல்லலாம்.



**துலாம்:**
தொழில் ரீதியாக உங்களின் திறமையை வெளிப்படுத்துவீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை சரியான நேரத்துக்குச் செய்து முடிப்பீர்கள். இடம், பூமி விவகாரங்களில் நினைத்தது நடக்கும். எதிர்பாராமல் நண்பர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம், சந்தோஷம் அதிகரிக்கும்.



**விருச்சிகம்:**
எந்த வேலையையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். எதிர்பாராத பண வரவுகளைப் பெறலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவரைப் பற்றிய ரகசியத்தை மற்றொருவர் சொல்லலாம். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் விலகும். பொறுப்புகள் கூடும்.



**தனுசு:**
மனதுக்குப் பிடித்த பொருள்கள் வாங்க பணத்தை தாராளமாக செலவு செய்யலாம். சிலரை கேலிபேசி அதில் சந்தோஷம் காண்பீர்கள். தூக்கமின்மையால் சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். உங்களின் நண்பர் ஒருவரைப் பற்றிய ரகசியத்தை, மற்றொரு நண்பர் உங்களிடம் சொல்லலாம். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.



**மகரம்:**
நல்லவர், கெட்டவர் என்று பாராமல் எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்வீர்கள். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போலத் தோன்றினாலும், இறுதியில் சாதகமாக அமைந்து விடும். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம். புதுமை படைக்கும் நாள்.



**கும்பம்:**
நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றொருவர் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு தொலைபேசியில் பேசலாம். நண்பர் ஒருவருடன் கோயில்களுக்கு, முக்கிய இடங்களுக்குச் செல்லலாம். திட்டமிட்ட வேலை ஒன்றை திடீரென மாற்றி அமைக்கலாம். திடீர் செலவு நேரும்.



**மீனம்:**
அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர் ஒருவருக்குத் தெரிந்தவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவுகள் செய்யலாம். பிள்ளைகளிடம் அதிக பாசமாக நடந்து கொள்வீர்கள். உங்களுக் குப் பிடித்தமான பொருள்களை சிலர் கொடுக்கலாம்.

# அழுதும் அ… பெற்றா…

■ செந்தூரி

"வீழ்ந்தது கூட வலிக்கவில்லை, வீழ்த்தப்பட்ட விதம்தான் வலிக்கிறது'' என்று இற்றைக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பு நெஞ்சு பொறுக்காமல் புலம்பினான் புலம்பெயர் கவிஞன் ஒருவன்.

பகீரதப் பிரயத்தனங்களின் பின்னால் தற்காலிகமாகத் தோற்கடிக்கப்பட்ட இனமொன்று, கபட சர்வ தேசியங்களின் முன் நீதி கேட்டுக் குமுறும், நியாயத்தின் வார்த்தை வெளியீடுகளாகவும் கொள்ளலாம் இவ்வரிகளை.

ஏனைய எல்லா நாடுகளையும் போன்றதானவொரு தனித்தேசம் கேட்டது அவ்வளவு பெரிய குற்றமென்றா, - பாதிக் குடித்தொகைக்கு அண்மித்தான மக்களைப் பலிகொடுத்த மூன்று தசாப்தகால வேட்கையை இல்லாதொழிக்கும் அரும்பணியை மாவிலாறில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை முன்னின்று நடத்தின பல் கூட்டு நாடுகள்?

யாவரும் நன்கறிந்தபடியாக, எந்தவொரு ஜனநாயக (?) தேசமும் புரட்சியாளர்களைத் தமது செல்லப்பிள்ளைகளாக வரிந்து கொள்வதேயில்லை! தமது ஆட்சிப் பரப்பினுள்ளாயினும், எல்லைகளுக்கு வெளியாயினும் ''போராட்ட குணமுடையவன்'' தனிமனிதனோ, தனியினமோ, தனித்தேசமோ ஆயினும் தீர்த்துக் கட்டி, ஏப்பம் விடும் வரை ''ஆதிக்கப்பசி'' அவர்களைச் சும்மா விடுவதில்லை!

உலக நாடுகளின் வரைபடத்தில், இந்த ''நாட்டாமை'' பாத்திரமாக, எவருமே இலகுவில் கைநீட்டி விடமுடியாத 'ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியம்' அதி சிறந்த உதாரணம்.

தனக்கென்றொரு தனி இன, மொழி, மத கலாசார பின்னணியில்லாத, எல்லாம் கலந்த கூட்டுக் குடியேற்ற தேசமாக இருந்த போதிலும் வம்புச் சண்டைக்கு இழுத்து, தனது இராணுவ கட்டமைப்புக்களின் மூன்றிலிரு பங்கை பிறநாடுகளிலேயே நிலை கொள்ள வைத்திருக்குமளவுக்கு வல்லரசுக் கதிரையின் மமதை என்ற ''போதை''யை இலகுவில் தெளிய விடவும் தயாராக இல்லை அமெரிக்கா.

பெரும்பாலும் உலகின் எல்லா நாடுகளினதும், சவாலான நோய் எதிர்ப்பு சக்தியிழக்கச் செய்யும் பரவு வியாதியான ''எய்ட்ஸ்'' கண்டுபிடிக்கப்பட்ட புதிதில், ''ஆபிரிக்க தேசங்களைச் சேர்ந்த வனவாசிகள், மனிதக் குரங்கு இனங்களோடு கலந்து கொண்டதன் விளைவாகவே மனித இரத்த அணுக்களில் இக் கொடிய வைரஸ் தொற்று ஏற்பட்டது'' என்று கதையவிழ்த்து விட்டதும் இதே தேசம்தான்.

கறுப்பு வெள்ளை என்கின்ற வர்ண பேதங்களை என்றைக்கும் வீரியம் குறையாமல் வைத்திருக்க வேண்டும் என்ற வீண் அவாவின் கறுப்பின மக்கள் செறிந்து வாழும் ஆபிரிக்க தேசங்களின் தனிமனித ஒழுக்கத்தினை, உலகே வெறுப்போடு பார்க்கும் இழிநிலையை ஏற்படுத்தி விட்டு ஓரமாய் நின்று வேடிக்கை பார்க்கும் இவர்கள் தான், பட்டினி நிவாரணமாக வழங்கப்பட்ட கோதுமை தானிய விதைக்குள் மரபணு வழியில் இவ் வைரசுக்களை புகுத்தி, கொடுநோய் கிடங்காக ஆபிரிக்காவை மாற்றி விட்டு, எண்ணெய் வளம் வேண்டிப் படையெடுக்கக் காத்துக் கிடக்கின்றார்கள் என்று வாதிடுவோர் பலருண்டு.

''புருடாக்கள்'' அமெரிக்கர்களுக்கு என்றும் புதிதில்லை என்பதற்கு சான்றாக, ''சந்திரனுக்கு மனிதனை அனுப்பியது'' கூட மாயாஜால விளையாட்டின் உச்சம் என்று, புகைப்படங்களையும், காணொளிகளையும், விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகளையும் கொண்டு காண்பிக்கும் வாதங்கள் தவறென்று இன்று வரைக்கும் மறுக்கப்படவுமில்லை.

இந்திய வம்சாவழிப் பெண்ணான ''கல்பனா சாவ்லா'' எதிர்கால வல்லரசு இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சித் துறையின் முக்கிய அடையாளமாக மாறிவிடக் கூடாதென்ற இழிந்த சுயநலசிந்தைதான் தமது நாட்டவரான ஏனைய விண்வெளி வீரர்களின் நலனையும் கருத்தில் கொள்ளாது, ''கொலம்பியா'' விண் ஓடத்தை விபத்தென்ற பெயரில் திட்டமிட்டு வெடித்துச் சிதற வைத்தது என்ற பழியும் இன்றும் தீராத கறை!

உலகப் பொருளாதாரம், கனிய எண்ணெய் வளம், விண்வெளி ஆய்வுகள் என்று பெரிய தலைப்புக்களில் மட்டுமல்லாது, சில்லறை விடயங்களில் கூட விழுந்தடித்து பிறர்நலன் பாதிக்கும் உபாயங்களைக் கூட துச்சமென எவிவிடும் பிறவிக் குணம் அவர்களுடையது என நிரூபிக்கும் இன்னொரு சம்பவம் மிக அண்மையில் குட்டுடைக்கப்பட்டது.

இத்தாலியின் பிரபல கடற்கரை நகரம் ஒன்றில் கோடை கால விடுமுறையை ஒட்டி ஐரோப்பிய தொலைக்காட்சி ஒன்றால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் அதிகளவான மக்களைக் கவரும் சுற்றுலாத் தளமாக முதலிடம் பெற்றது.

மிகப் பெரிதான வாக்குகள் வித்தியாசத்தில் இரண்டாமிடத்துக்கு வந்தது முன்னைய வருடம் இதே வாக்கெடுப்பில் முதலிடம் பெற்ற அமெரிக்க கடற்கரை நகர் ஒன்று.

இதனால் குறித்த இத்தாலிய கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதைப் பொறுக்க முடியாமல் அக் கடலிலிருந்து பல மைல் தூரத்தில் சமுத்திரத்தில் வாழும் ஆட்கொல்லி சுறா மீன்களை இந்தக் கடற்பகுதிக்குள் கொண்டு வந்து சேர்க்க முயன்றது.

அமெரிக்கா கண்டம் விட்டுக் கண்டம் மாறிப் பறக்கும் வலுவுடைய கழுகினம் ஒன்றின் கால்களில் இஸ்ரேலிய பல்கலைக்கழக இளம் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பான அதிசக்தி வாய்ந்த ''லேசர் கதிர் உமிழி'' ஒன்றைப் பொருத்தி எந்த நாட்டுக் கடல் கண்காணிப்பு ராடர் திரைகளினாலும் இலகுவில் சிக்காதபடிக்குப் பயங்கரச் சுறாக்களை, நிலப்பரப்புக்களை நோக்கி நகரச் செய்யும் முயற்சி அது!

இந்த லேசர் கதிர்களால் தொந்தரவுக்குள்ளாகும் சுறாக்கள் கடற்கரைகளை அண்மித்து மனிதவுயிர்களைப் பலி கொள்வதன் மூலம் இத்தாலியச் சுற்றுலாத் துறையின் துரித வளர்ச்சியை தடுக்க முடியும் என்று அமெரிக்கா கண்ட கனவு

> "சமாதானத்தின் சான்றிதழ்
> பெற்ற தரகர்கள் என்ற
> முத்திரையோடு
> 'நோர்வே'யை அனுப்பி
> அவர்களின்
> நடுநிலைமையின் கீழ்
> போராடிய குழுவினரை
> சர்வதேச நகர்களுக்கு
> அழைத்து ஊர்வலம் நடத்தி
> பொறிமுறை ரீதியாக
> பலவீனப்படுத்தும்
> ஆள்பிரிக்கும்
> வேலைகளை
> சத்தமில்லாமல் நடத்தி
> வலுக்குன்ற
> வைத்தவர்களை
> இன்னமும் நம்பப்
> போகிறோமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ும் பிள்ளையை அவள்தான் ...ாக வேண்டும்

எவ்வளவு கீழ்த்தரமானது? நடைமுறைக்குப் பொருந்தாது ஆயினும் அவர்கள் எதற்கும் தயங்குவதில்லை என்பதன் உண்மை வெளிப்பாடு இது.


சின்னப்பிள்ளைத்தனமான விடயங்களில் தொடங்கி, சகல உலகையுமே ஆட்டிப்படைக்கின்ற பல்வேறு விடயங்கள் வரை ''உத்தரவின்றி உட்பிரவேசிக்கும்'' பழக்கம் அமெரிக்கர்களின் ஆதிக்கம் இரத்தத்தில் ஊறிப்போன விடயம். ஜனநாயகக் கட்டமைப்பு என்ற போர்வையின் கீழ் செயற்படும் அரசியல்வாதிகளுக்கும், அடிக்கடி உள்ளக இடமாற்றத்திற்குள்ளாகும் இராஜாங்க அதிகாரிகளுக்கும், இடையிலான- பிரதேசத்தவர்களால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாத- ''சூட்சும உறவு'' கலந்த நெருக்கம் தான் பல நாடுகளின் சிக்கல்களுக்கும் முதற் காரணம்.

வெவ்வேறு கொள்கைப் பிரகடனங்களை முன்நிறுத்தியவர்களை, எதிரெதிர் கட்சி சார்புடையவர்களாகிய போதிலும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் விடயத்தில் தலையிடுவதில்லை. அதிகாரிகளைப் பழிவாங்கும் குரோதப்பார்வை பார்ப்பதுமில்லை. இந்நிலைமைக்கான ஆகப்பிந்திய எடுத்துக்காட்டாக, தற்போதைய ஜனாதிபதி ''பராக் ஒபாமா'', வெளியுறவுச் செயலராக தன்னை எதிர்த்த ''ஹிலாரி கிளின்டனை'' நியமித்ததை உயர்ந்த தமைமைத்துவ பண்பென்று போற்றிப்பாடிய உலகத்தலைவர்களில் பலர் அச்சந்தர்ப்ப சூழலின் ஆழ்கருத்தினை புரிந்து கொள்ளவேயில்லை. இதே ''சம அதிகார நீடிப்பு வரம்பு'' இந்தியாவிலும் நடைமுறையிலிருப்பது நம்மில் பலர் கண்டுகொள்ளாத விடயம். இந்திராகாந்திக்கு முன் ஜவகர்லால் நேரு காலம் தொடங்கி இன்று வரை மத்திய அரசின் முடிவெடுக்கும் அதியிறுதிக்குழுவில் ''மேனன்''கள், ''சங்கர்'' கள், நாராயணன்கள், ''நாயர்''கள் என்று மலையாள நெருடி மாறவேயில்லை இன்னமும்.

ஏதோ நெருப்பொன்றிருப்பதால் இன்று வரை புகைத்துக் கொண்டிருக்கும் ''விக்கிலீக்ஸ்'' தணலில் தமிழனின் அவஸ்தைகளும் தெறித்து விழுவதைக் காதில் வாங்குகையில் எந்தப் பக்கமாகப் பார்த்தாலும் எமக்கு எட்டாத தூரத்தில் இருக்கும் அமெரிக்காக் கண்டத்தின் ''கனத்த சதி''. மேற்கூறிய அனைத்துச் சம்பவங்களினதும் பார தூரத்துடன் பார்க்கையில் அவர்களுக்கு ''வெரி சிம்பிள்'' போல் தெரிகிறது.

வெளிப்படையாகத் தெரியும் படியாகப் பலவுலகக் கண்களும் பார்த்திருக்கும்படியாக அவர்கள் நிகழ்த்திக் காட்டிய 'ஆப்கானிஸ்தான்' தேடுதல் வேட்டைகளும், 'ஈராக்' வீழ்ச்சியும், 'எகிப்திய' புரட்சியும், 'தென்சூடானிய' தனிச் தேச பிரகடனமும், 'லிபியா' வின் புரட்சிப்படை எழுச்சியும், 'கியூபா'வுக்குக் கொடுக்கும் குடைச்சலும், 'ஈரானில்' வைத்த அடுத்த குறியும், 'தென் கொரியா' வுடனான சேஷ்டைகளும், சீனா'வுடனான ஆயுதப் போட்டியும், 'இந்தியா' மேல் உள்ளூறும் பனிப்போரும் போலவே மிக இலகுவாகத் தட்டி வீழ்த்திக் காலால் நசுக்கி விட்டுப் போகும் உயரத்தில் தான் 'தமிழன்' தொங்கிக் கொண்டிருந்தான். அது நமது பிழையா என்ன?

''அமெரிக்க விவகாரங்களுக்கான இராஜாங்க செயலர்'' என்ற பெயரில் ஆசிய வல்லரசுகளான இந்தியாவோ, சீனாவோ தம் தேச பிரஜை ஒருவரை வோஷிங்டன் அனுப்ப அமெரிக்கா அனுமதிக்குமா? ஆனால், கேட்காமலே பரிவாரங்களுடன் வந்திறங்கும் 'தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்க அதிகாரி'' களுக்காகத் தொடை நடுங்க வேண்டியிருப்பது காலத்தின் கட்டாயத்தையும் தாண்டிய உலக மாற்றம் என்றே கொள்ள வேண்டியுள்ளது.'ஹிட்லரால்' உருவாக்கப்பட்ட வதைக் கூடங்கள், மனித கொல்களங்களுக்குப் பிறகு, அதே பெருமெடுப்பில் 'குவாண்டணாமோ' என்னும் மாபெரும் மனித வதைக் கூடத்தை இன்றளவும் நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு தேசமும், மிகப்பெரும் சனத்தொகைக் குடிகளும் எம் சிறு இனத்துக்கு, அவர்களின் ஆசீர்வாதத்துடன் இழைக்கப்பட்ட மனுக்குல எதிர் அநீதிகளுக்குப் பரிகாரம் தேடித் தருவார்கள் என்று நம்புவது மூடத்தனத்தின் உச்சமில்லையா?



சமாதானத்தின் சான்றிதழ் பெற்ற தரகர்கள் என்ற முத்திரையோடு 'நோர்வே' யை அனுப்பி அவர்களின் நடுநிலைமையின் கீழ் போராடிய குழுவினரை சர்வதேச நகர்களுக்கு அழைத்து உலகவலம் நடத்தி பொறிமுறை ரீதியாக பல வீனப்படுத்தும் ஆள்பிரிக்கும் வேலைகளை சத்தமில்லாமல் நடத்தி வலுக்குன்ற வைத்தவர்களை இன்னமும் நம்பப் போகிறோமா?.

தற்காலத் தமிழ் அரசியல் தலைமைகள் என்று தமிழர்களால் 'இடைமுடி' சூட்டப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரை அன்பொழுக அழைத்து, 'அவரைச் சந்திக்க', 'இவரைச் சந்திக்க' என்று இழுத்தடிப்புச் செய்து இறுதியில் இலங்கை அரசின் பேச்சுக்களுக்கு தலையாட்டிக் கொண்டு கீழ் மட்ட அதிகாரிகளுடன் கண்துடைப்பு அரங்குகளில் சந்திப்புகளை ஏற்படுத்திய அவமானம் தீர முன்னரே, வாங்கிய மனுவின் பிரதிகளை அரசுக்கும் கசிய விடும் அசிங்க நடத்தை கொண்ட அதிகாரக் கும்பல்தானா எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடித் தரப்போகின்றது?

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' எனும் சொல்லடையின் சாலப் பொருந்துநர்களாகத் தமிழனை ஆட்டிப்படைக்கும் 'இனப்பிரச்சினைத் தீர்வு' என்ற நூற்றாண்டுச் சனி, அடுத்த இருபது வருடங்கள் கழித்தும் தலைப்புச் செய்தியாக மட்டுமே இழுபட வேண்டும் என்பதில் அப்படி என்ன அற்ப 'சந்தோஷமோ?'

அவர்கள் எதுவும் செய்யமாட்டார்கள் என்பது 'தெளித்துப் போன' பின்னால், 'அழுதும் பிள்ளையை அவள்தான் பெற வேண்டும்' என்பது தானே விதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பவம் ஒன்று அனுபவம் வேறு



உலகம் பல ரகம் என்பதை முற்றிலும் வேறான கோணத்திலிருந்து கூறலாம். ஒரு பிரலபமான மனிதர் மரணப் படுக்கையில் இருக்கிறார். அவரைச் சுற்றி நான்கு பேர் நிற்கிறார்கள். நான்கு பேரும் ஒரே வகையான நிலையில் இருப்பார்களா? மரணத்தருவாயில் இருக்கும் பிரபல மனிதரின் படுக்கையைச் சுற்றி அவர் மனைவி, மருத்துவர், பத்திரிகைச் செய்தியாளர், அவரது வாரிசு ஆகியோர் நிற்கிறார்கள். மருத்துவருக்கு மடிந்து கொண்டிருப்பது ஒரு கேஸ்... அவரது அக்கறை ஒரு விஞ்ஞானியின் அக்கறை. பிழைக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறார்... மீறி அவர் இறந்தால் அவரது கேஸ் தோல்வியுற்றுவிடும்..... அவ்வளவுதான். ஆனால் மனைவி... இவரது மரணத்துடனேயே அவளுக்குள்ளும் ஏதோ ஒரு மரணம் நிகழ்ந்து விடும். அவள் இருந்தும் இல்லாதவளாகி விடுவாள். அவளது வாழ்க்கை துண்டிக்கப்பட்டு விடும்.மனைவி, மருத்துவர் இவர்களைத் தவிர பக்கத்தில் இருக்கும் பத்தரிகைச் செய்தியாளர் தவிக்கிறார். பத்திரிகை அச்சேற இன்னும் பதினைந்து நிமிடங்களே உள்ளன. அதற்குள் ஏதாவது முடிவு தெரிந்துவிட்டால் செய்தி பிரசுரிக்க வசதியாக இருக்கும். பத்திரிகை அச்சான பின் மரணம் நிகழ்ந்தால் செய்தியில் சேர்க்க முடியாது. முக்கிய செய்தி விடுபட்டு பத்திரிகை உயிர்ப்பற்றதாக வெளிவரும். அதற்காக இறந்து விடுவார் என்ற உறுதியில் இறந்து விட்டதாகச் செய்தி போட முடியாது. முடிவு தெரிய முடியாத தவிப்பு அவருடையது. நான்காவதாக நிற்பவர் தவிப்பு முற்றிலும் மாறுபட்டது. இந்த மரணத்தில் அவரது ஜனனம் ஒளிந்திருக்கிறது. அவருக்கும் அழுகைதான்.... ஆனால் அது சிரிக்க முடியாத ஓர் அழுகை.. முற்றிலும் கலவரமான குழப்பமான என்ன செய்தால் சரியாக இருக்கும் என்று முடிவெடுக்க முடியாத தவிப்பு, தடுமாற்றம் அவருடையது.

இந்த நால்வரையும் நீங்கள் தனித்தனியாக விசாரித்தால் இவர்கள் ஒரே மனிதரின் கட்டிலைச் சுற்றி இருந்தார்கள் என்று நீங்கள் நம்புவது கடினம். அவ்வளவு வேறு வேறான உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள். சம்பவம் ஒன்று.. ஆனால் அனுபவம் வேறு வேறு... பறவைகள் பலவிதம்.. ஒவ்வொன்றும் ஒரு விதம்.

இதை எல்லாம் விட ஆச்சரியமான சம்பவம் ஒன்று சொல்கிறேன். ஒரே நாளில் மூன்று பேர் கேட்ட ஒரே கேள்விக்கு, புத்தர் வேறு வேறு பதில்கள் அளித்தார் என்று நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? கடவுள் இருக்கிறாரா? என்ற கேள்வியைக் காலையில் கேட்டவனிடம் இல்லை என்றார் புத்தர். மாலை கேட்டவனிடம் இருக்கிறார் என்றார். இரவு கேட்டவனுக்குப் பதில் ஏதும் சொல்லாமல் மௌனம் சாதித்தார். பக்கத்திலேயே இருந்த ஆனந்தர் குழப்பம் அடைந்தார். ''இது என்ன நியாயம், ஒரே கேள்விக்கு மூன்று விதப் பதில்களா?'' என்று புத்தரிடம் நியாயம் கேட்டார். ''பதில் உனக்கல்ல... அவர்களுக்கு... உனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பேசாமல் தூங்கு'' என்றார் புத்தர்.

''விடை தெரியாதவரை தூக்கமே வராது'' என்றார் ஆனந்தர். ''முதலாமவன் கடவுள் இருக்கிறார் என்று பலர் சொல்வதை நம்பிக்கொண்டிருக்கும் மூட ஆத்திகன். சுய அனுபவம் இல்லாதவன். நான் இல்லை என்றதும் அவன் எப்படி கலைந்து போய்விட்டான் பார்த்தாயா? என் பதிலால் அவன் மண் கோட்டை சுக்கு நூறானது. இனி அவனாக ஒரு வீடு கட்டிக்கொள்வான். உண்மையான தேடுதல் அவனிடம் தொடங்கும்.

இரண்டாமவன் எந்தச் சிந்தனையுமற்ற வரட்டு நாத்திகன். அவன் தன் அகங்காரத்தை வலிமைப்படுத்திக் கொள்ள என் சாதகமான பதில் நோக்கி வந்தான். அவனையும் உலுக்க வேண்டியது கட்டாயம். உலுக்கி விட்டேன். இனி சுயமாகச் சிந்திப்பான்.

இரவு வந்தவன் கபடமற்றவன். எளியவன். அவனுக்கு எந்தப் பதிலும் அளிப்பது நியாயமில்லை. உண்மையை மௌனத்தால் மட்டுமே உணர முடியும் என்பதை உணர்த்திவிட்டேன். என் பணி முடிந்தது. இந்த வெவ்வேறு பதில்களால் நீ ஏன் கலவரமடைகிறாய்?'' என்ற புத்தர், ''எல்லோருக்கும் ஒரே மாதிரி பதில் கூற என்னால் முடியாது'' என்றார்.

இந்த உலகம் பல்வேறுபட்ட எதிர் எதிரான இயல்புடைய மனிதர்களால் நிரப்பப்பட்டிருப்பதுதான் இந்த உலகின் பெருமையே... எல்லா மனிதர்களும் ஒரே தன்மையில் இருப்பது உலகின் அழகைக் கெடுத்து விடும். ஒரு தன்மையான கறுப்பு வெள்ளைப் படங்களை விட வண்ணப் படங்கள் எல்லோரையும் கவர்வது எதனால்? அதன் பன்முகத் தன்மை... வண்ணங்கள் பலப்பல என்கிற பலம். ஒரு தோட்டம் பல வகை மலர்களால் நிறைந்திருப்பதுதானே மகிழ்ச்சி தருகிறது. மனிதர்களிலும் அப்படித்தான்.

இந்த உலகம் முழுவதையும் ஒரே வகையான மனிதர்களால் நிறைக்க முயன்ற முட்டாள்களும் உண்டு. ஹிட்லர்,ஜேர்மனியர்களை அதுவும் ஒரே மாதிரியான மன இயல்புடைய ஜேர்மனியர்களை, உலகமாக்க நினைத்தான். இது நிறைவேறி இருந்தால் உலகம் எவ்வளவு அசிங்கமாக இருந்திருக்கும். யோசித்துப் பாருங்கள். உலகம் முழுவதையும் ஒரே மதம், ஒரே கடவுள், ஒரே தன்மை உடையதாக்க சிலர் வெறித்தனமாக முயற்சி செய்கிறார்கள். இவர்கள் அசடுகள். இவர்கள் இயற்கையின் எதிரிகள்.... ஏன் இறைமையின் எதிரிகளும் கூட.... பன்முகத் தன்மைதான் உலகின் பேரழகு.. அது ஒரு போதும் சிதையக் கூடாது. முரண்பட்ட, மாறுபட்ட மக்களின் கூட்டுக் கலவையாகவே உலகம் இயங்குவது அவசியம். அதை மாற்றக் கூடாது.

சுகி. சிவம்



ஆறுகால்மடம் அறிவொளி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபையின் சனசமூக நிலைய உத்தியோகத்தர் ச.லோகசிவம் மங்கள விளக்கேற்றுகிறார். (ம)

# கலாசாரச் சீரழிவு குறித்த செய்திகளால் இதயம் கனத்து இரத்தம் வழிகிறது

## வணபிதா போல் நட்சத்திரம் அடிகளார் கவலை தெரிவிப்பு

அச்சுவேலி, நவ.30

தமிழ் மக்களின் சமகால கலாசார சீரழிவு மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகள், மாணவர்களின் போதைப்பொருள் பாவனை என்பனவற்றைக் கேட்கும் போது இதயம் கனத்து இரத்தம் வழிகிறது .

இவை தொடர்பாக யாரிடம் கூறி குறைநிவர்த்திப்பது. மாணவர்கள் தமிழ் இனத்தினதும் தமதும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இல்லாவிடில் வரலாற்றுப் பழிக்கு உள்ளாக வேண்டி ஏற்படும்.

இவ்வாறு கூறினார் அமல மரித் தியாகிகளின் மாகாண முதல்வர் வணபிதா போல் நட்சத்திரம் அடிகளார்.

அச்சுவேலி லங்கா மாதா மடத்தின் ஒளி விழாவும் மாணவர் விடுதி நாளும் அச்சுவேலி புனித திரேசா மாணவர் கல்வி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

நீண்ட காலங்களாக பல்வேறு துன்பங்களுக்கும் அல்லல்களுக்கும் உட்பட்டு ஆறுதலைத் தேடி அலையும் ஈழத் தமிழ் இனத்தின் சமகால நிலை கலாசார சீரழிவு, பண்பாட்டுச் சிதைவு, சமூகவிரோதச் செயல் என்ற நிலையில் வந்து நிற்கிறது.

நீண்டகாலம் துன்பப்பட்ட இனம் இனிமேல் தானும் ஆறுதல் அடையும் என்று இருந்த வேளையில் நிகழும் சம்பவங்கள் தொடர் கதையாக நீண்டு செல்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு மாணவர் சமூகம் தங்களை சுதாகரித்துக் கொள்ளாவிடில் வரலாற்றுப் பழிக்கு உள்ளாக வேண்டிவரும்.

எமக்கென தனித்துவமான கல்விப் பாரம்பரியம், பண்பாட்டுக் கோலங்கள் உள்ளன. அவற்றை நாங்கள் சிதைத்து விடக்கூடாது. உரிய முறையில் பாதுகாத்து எதிர்காலச் சந்ததிக்குத் தூய்மையாகக் கையளிக்க வேண்டும்.தம்மை உணர்ந்து மாணவர் சமூகம் செயற்பட வேண்டும்.

யுத்தத்தால் நலிவடைந்த நாம் மீள எமது பண்பாட்டை பாரம்பரியங்களைக் கலாசாரத்தை தூய்மையானவையாக பேணிக் கொள்ள வேண்டும்.

இந்தவகையில் மாணவர் சமூகத்தில் பெரும் பொறுப்பு காத்திருக்கின்றது. உடலால் உள்ளத்தால் உடைந்த எமது உறவுகள் மீண்டும் புத்துயிர் பெற்று எழவேண்டும்.

பெற்றோர் மூத்தோர் சொற் கேட்டு கல்வி கேள்விகளில் உயரவேண்டும். மாதா பிதா குரு தெய்வம் என்ற நிலையில் மரியாதை செலுத்தி உயர்வடைய வேண்டும். அவ்வாறு இன்றி கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் மனம்போன போக்கில் செயற்பட்டால் எதிர்காலம் இல்லாத துன்பச் சூழலை உருவாக்கி விடும்.

யாரையும் நிந்திக்காத உயர்வான சிந்தனையும் அன்பும் முயற்சியும் எங்களை உரிய நிலைக்கு உயர்த்திச் செல்லும்.

இந்தவகையில் எமது மனதை ஒரு நிலைப்படுத்தி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு உயர்வடைய வேண்டும். - என்றார். (ம-11)

# காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் எதிர்கால சந்ததி வளர்க்கப்பட வேண்டும்

## ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் உரை

கொழும்புத்துறை, நவ.30

காலத்தின் தேவைக்கும் தொழில் சந்தையின் கேள்விக்கும் பொருத்தமான எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு பாடசாலைகளைச் சார்ந்ததாகும்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் பரிசளிப்பு விழா நிகழ்வின் போது அறிக்கை உரையாற்றும் போது கல்லூரி அதிபர் அருட்திரு ஜேம்ஸ் சிங்கராயர் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண அறிவுசார் சமூகத்துக்கான கல்விச் செயற்றிட்ட முகாமையின் முகாமையாளர் எஸ்.ரி.பீரிஸ் பிரதம விருந்தினராக இதில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் அதிபர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

மாறிவரும் உலகின் தொடர் சவால்களை எதிர் கொள்ளக் கூடிய ஆற்றலும், வலிமையும் கொண்ட புதிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பும் கடமையும் பொறுப்பும் தற்போது பாடசாலைகளின் கையிலே உள்ளது.

எனவே வெறுமனே ஏட்டுக் கல்வியை மட்டும் கொண்டிராது தனிநபர் திறன்களை விருத்தி செய்வது ஆசிரியப் பணியின் இலக்காகும்.

இதனை மையமாக வைத்தே ஆளுமையும், இறை நம்பிக்கையும் கொண்ட சமூகம் என்ற நோக்கக் கூற்றையும் நவீன தொழில் நுட்ப அறிவுடன் கூடிய திறன்களை வளர்த்தலும் சமய சமூக விழுமியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட முதிர்ச்சியுடைய சமுதாயத்தை உருவாக்குதலும் என்ற பணிக் கூற்றையும் நாம் தெரிந்தெடுத்துள்ளோம்.- என்றார். (ம-135)

# நாட்டில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் கடன் உதவிகள்

## சனச அபிவிருத்தி வங்கியின் பிராந்திய முகாமையார் உரை

வடமராட்சி,நவ.30

நாட்டில் வறுமையை முற்றாக ஒழிக்கும் நோக்கில் சுயதொழில் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் சனச அபிவிருத்தி வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். அச்சுதம்பிள்ளை.

சனச வங்கியின் நிதி உதவியுடன் வல்வெட்டித்துறை நகரப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோருக்குக் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

இந்தக் கடன் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், நாட்டில் எந்தவொரு பிரஜையாவது வறுமையில் வாடக் கூடாது என்பதற்காகவுமே சனச அபிவிருத்தி வங்கி இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குள் முதல் தடவையாக இவ்வளவு பெருந்தொகையான மக்களுக்கு இந்த அபிவிருத்திக் கடன் ஊக்குவிப்புத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரது வீடும் அழகான கல் வீடுகளாகவும் ஒவ்வொருவரும் தொலைக் காட்சி, சோபா செற் என்று வசதியான வாழ்க்கை வாழ்பவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.- என்றார்.

இந்த நிகழ்வில் கோ.சற்குணபாலன், இளைப்பாறிய வங்கியாளர் ந.சிவரத்தினம் மற்றும் சனச அபிவிருத்தி வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-236)

# தேசிய வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

*(நேற்றைய தொடர்ச்சி)*

வலிகாமம் தென்.மேற்குப் பிரதேச சபையின் உப அலுவலக ரீதியான நான்கு நூலகங்களாலும் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. சில நேற்றைய உதயனின் வெளியாகின. அவற்றின் தொடர்ச்சி வருமாறு:

பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பு.கார்த்திகா- இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியால்யம், பா.மதுர்ஷா - இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம், நா.அருண் - புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகியோரும்

சித்திரப் போட்டியில் அ.பிரதீபா - இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம், இ.பிறின்சியா - இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம், வி.அஜீபன் - புனித ஹென்றியரசர் கல்லூரி, யோ. மேரிடினுயா- இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் அ.மேரி மெல்சியா - சில்லாலை றோ.க. த.க.பாடசாலை, கி.விஜிதா - பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், அ.சிந்துஜா - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க. த.க. பாடசாலை ஆகியோரும்

சித்திரப் போட்டியில் ஏ.ஜெயகாந் - பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை, ஐ.சுபாசினி- பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை, பா.கிருசிகா பண்டத்தரிப்பு யசிந்தார் றோ. த.க.பாடசாலை ஆகியோரும் வெற்றி பெற்றனர். (ம- 100)

# சுவரொட்டிப் போட்டியில் முதலிடம்



கல்வி அமைச்சின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் மூலம் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் வடமாகாணத்தில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் சிவபாலகுமார் றஜிகரன் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ம)

# ஞானச்சுடர் கார்த்திகை இதழ் வெளிவந்தது

யாழ்ப்பாணம், நவ.30

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' கார்த்திகை மாத இதழ் வெளிவந்துள்ளது.

சமயச் சுடராக வெளிவந்துள்ள இந்த இதழில் மார்கழி மாதத்தின் மகத்துவம், விநாயகர் வழிபாட்டுத் தத்துவம், கந்தன் பெருமை உட்படப் பல்வேறு சமய ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வாழ்வியல் தொடர்பான கருத்துக்களையும் இது சுமந்து வந்துள்ளது. சிறுவர்களுக்கெனவும் இதில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை இறுதியில் ஆலயங்களில் காவல் செய்த ஆ(சா)மிகள்

■ செந்தில்குமார்

அன்றும் வழமைபோல் மாலை 6 மணிக்கு உணவகத்துக்குப் புறப்பட்டேன். மழை இருட்டு அந்த பொழுதை இரட்டிப் பாகக் காட்டியது. போகும் வழியில் பிள்ளையார் கோயில். கோயிலின் தெற்கு வாசல் திறந்திருந்தது. வழமையாக நான் அந்த வழியாகப் போகும் நாள்களில் மாலையில் வாயில் திறந்திருப்பதில்லை. வழமைக்கு மாறாக அன்று வாயில் திறந் திருப்பதற்கான காரணம் புரியாது மழை இருட்டில் உற்றுப் பாரத்த எனது கண் களுக்கு இரண்டு உருவங்கள். அவை இராணுவச் சீருடை, தோளில் தொங்கவிடப் பட்ட துப்பாக்கியுடன் தென்பட்டன.

சமயாசாரப்படி இந்துக் கோயில் களுக்குப் போவதாயின் ஆண்கள் மேலங் கியைக் களையவேண்டும். பாதணி தரிக்க முடியாது. இதன் காரணமாகவே கோயில் வாயிலில் நின்று கும்பிட்டுவிட்டு இறை வனின் எல்லா வரங்களையும் பெற்று விட்டதாகப் பெருமிதப்பட்டுக் கதை சொல்லும் எனக்குப் பிள்ளையார் கோயில் சம்பவம் வியப்பாக இருந்தது.

எனது மனதுக்குள் எண்ணிக்கொண் டேன், சிலவேளைகளில் இப்படியும் இருக்குமோ என்று. யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. விடுதலை புலிகள் பற்றி உள்ளூர் கதைகள் வருவ தில்லை. புலிகள் இலங்கையில் தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராடிய தற்கான பல தடயங்கள் அழிக்கப்பட்டு விட்டன. அவர்கள் இறந்தவர்களைப் புதைத்து வைத்த இடங்களையும் மிச்ச மில்லாமல் அழித்துவிட்டோம். இதனால் காலம் காலமாகத் தமிழ் மக்கள் அனுஷ் டித்து வந்த மாவீரர் தினத்தை மறந்து விடுவார்கள். எனவே தமிழ்மக்கள் மறந்து விடாமல் போரில் உயிர் நீத்த தமது உறவு களை நினைவுகூரட்டும் என்ற ஏற்பாடு தான் இது என்று.

கார்த்திகை 27 தமிழ் மக்கள் மனங்களை விட்டு என்றுமே அகலாத நாள். மலரெ டுத்து மாலை கட்டி பூசிக்கும் நாள். இறந்து போன தமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்தும் ஒரு புனிதமான நாள். ஆனா லும் அந்த நாளை வெளிப்படையாக கொண்டாடுவதற்கு இலங்கையில் தடை. 2009 யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப் பட்ட அடுத்த கணமே வன்னிப்பகுதியில் காணப்பட்ட தமிழ் பண்பாட்டை எடுத்தி யம்பும் கட்டடங்கள், விடுதலைப் போராட் டத்தைச் சித்திரிக்கும் நினைவிடங்கள், தூபங்கள், சிலைகள் போன்ற எல்லாமே அழிக்கப்பட்டன. அவற்றுடன் அங்கு போராட்டத்தில் உயிரிழந்த போராளி களின் உடல்கள் விதைக்கப்பட்ட துயிலு மில்லங்களும் தரைமட்டமாக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசி யத் தலைவர் வே.பிரபாகரனின் 57 ஆவது பிறந்ததினம் மற்றும் மாவீரர் தினம் அதனை ஒட்டிய மாவீரர் வாரம் என்பன உலகம் பூராகவும் அனுஷ்டிக்கப்பட்டன. இந்த கொண்டாட்டங்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களால் கொண்டா டப்படலாம் என்ற அச்ச நிலை இரா ணுவத்தினர் மத்தியில் ஏற்பட்டது. இத னால் வழமையைவிடவும் வடபகுதி யில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதி கரித்துக் காணப்பட்டன. இதன் ஒரு அங்க மாகத்தான் ஆலயங்களுக்குப் படைக் காவல் வழங்கப்பட்டது.

வன்னியில் அந்தணர்கள் பூசை செய் யும் ஆலயங்களில் மணி ஒலி எழுப்பு வதற்கும் அந்தணர் அல்லாத பூசகர்கள்; பூசை செய்யும் ஆலயங்களில் பூசை செய் யவும் மணி ஒலிப்பதற்கும் இராணுவத்தி னரால் தடை விதிக்கப்பட்டது. 25,26,27 ஆகிய தினங்களில் வன்னியில் உள்ள சகல ஆலயங்களிலும் பூசைகள் நடத்தவும் மணிகளை ஒலிக்கவும் கூடாது எனப் படையினர் உத்தரவிட்டிருந்தனர். ஆனால் அந்தணர்கள் பூசை செய்யும் ஆலயங்களில் பூசை இடம்பெறாவிட் டால் கும்பாபிஷேகம் செய்ய வேண் டிய கட்டாய நிலைமை தோன்றுமெனச் சுட்டிக் காட்டப்பட்டதால் அவற்றில் பூசை செய்வதற்குப் பின்னர் படையினர் அனுமதி வழங்கினர் என்றும், எனினும் மணி ஒலி எழுப்புவதற்கு அந்தந்த ஆலயங்களில் தடை விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் காரைநகரில் உள்ள ஆலயங்களில் மாவீரர் வாரத்தில் மணி ஒலி எழுப்பக் கூடாது என்று படையினர் அறிவித்திருந்தனர். இதன் தொடர்ச்சி யாக இந்த அறிவிப்பு வடக்கு முழுவதும் பரப்பக்கப்பட்டது. இது போலவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களில் இராணு வத்தினரின் சோதனை நடவடிக்கை களை அதிகரித்திருந்ததுடன், ரோந்து நடவடிக்கைகளிலும் சிறு சிறு குழுக்களாக இராணுவத்தினர் ஈடு பட்டனர்.

ஆலயங்களுக்கு அருகில் பகலிர வாக இரண்டொரு இராணுவத்தினர் காவலுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். அதிலும் 27ஆம் திகதி மாலை 6 மணி ஐந்து நிமிடம் என்பதை படையினர் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டி ருந்தனர். ஆலய மணியை யாரும் அசைத்து விடாமல் விடுதலைப்புலி களின் தலைவர் தமிழ் தேசிய மாவீரர் நாள் உரை நிகழ்த்தியதும் மணிஒலி எழுப் பப்பட்டு அதன் பின்பு 06.06க்கு சுடர் ஏற்றும் புனித நேரமே அது.

### யாழ்.பல்கலையை சல்லடைபோட்ட புலனாய்வுப் படையும் பொலிஸும்

தமிழ் தேசியத்தின் எழுச்சி என்பது பல்கலைக்கழகத்தைச் சார்ந்தது. இது வரலாற்று உண்மை. ஆரம்பத்தில் போராட் டத்தை முன்னெடுத்துச் சென்ற பலர் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர் களே. போராட்டவளர்ச்சியின் ஒவ்வொரு பரிணாமத்திலும் அதன் பங்கு காத்திர மாக இருந்தது. பொங்குதமிழ் எழுச்சி யின் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினை களை உலகுக்கு எடுத்துகூறியதன் மூலம் யாழ்.பல்கலைக்கழகம் போராட்டத்தைப் புதிய வடிவத்துக்கு மாற்றியிருந்தது. இன்றுவரை உலகத் தமிழர்களால் ஈழ மக்களுக்கு நீதி கேட்டு நடத்தப்படும் போராட்டங்களுக்குப் புதிய வடிவத்தை பொங்கு தமிழ் எழுச்சி வழங்கியது. இதற் காக யாழ் பல்கலைக்கழகம் நிறையவே விலையும் கொடுத்திருக்கிறது.

ஆனாலும் 2009 யுத்தமுடிவின் பின் னர் காட்டிக் கொடுப்புக்களும் துரோகத் தன்மையும் இந்தச் சமூகத்தில் காலூன்றி உணர்வுகளைக் கொச்சைப்படுத்த ஆரம் பித்தது. ஆனாலும் உண்மையான உணர்வு களை எவராலும் விலைபேச முடியாது என்பதை பல்கலைக்கழகம் எடுத்துச் சொல்லத் தவறவும் இல்லை.

மாவீரர் தினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நினைவுச் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட் டிருந்தன.

(22 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு...

**பரிதவித்த பதினொராண்டில்**

**பறந்தோடிய பதினைந்தாண்டில்**





அமரர்
## இராசு செல்வரட்ணம்
**(சித்தப்பா)**
**(உரிமையாளர், அம்பாள் மரக்காலை, நல்லூர்)**

செல்வி
## செல்வரட்ணம் றஜனி
**(வர்த்தகப் பிரிவு *A/L* 95,**
**மாணவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி)**

*மண்ணுலகுக்கு மனம்*
*மகிழ வந்தாய்:*
*03.08.1942*

*மலராய்*
*புலர்ந்தாய்:*
*19.10.1976*

*விண்ணுலகுக்கு*
*விம்மியழச் சென்றாய்:*
*30.11.2000*

*காற்றாய்*
*மறைந்தாய்:*
*21.08.1996*

அன்பின் திரு உருவாய் பண்பின் பொக்கிசமாய் வாழ்ந்தீர்களே
அமைதியின் இருப்பிடமாய் அழகின் உறைவிடமாய்
கொடை வள்ளலாய் பார்போற்ற வாழ்ந்து காட்டினீர்களே
உமை இழந்து தலை தளர்ந்து கதி கலங்கி தவிக்கின்றோம்
என்றும் எமையாளும் உயிரோவியங்களே
அன்னை வீரமாகாளியின் பாதம் பணிந்து
உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'செல்வபதி', 256, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

ஆறாத் துயரில் குடும்பத்தினர்

(சி-6407)(1,6,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இடப்பெயர்வில் இருந்து மீண்டு புதுப்பொலிவுபெறும் காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி ஆலயம்

*(சென்றவாரத்தொடர்ச்சி)*

1973 இல் காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று திருப்பணிச் சபையையும் அமைத்த கா. சபாரட்ணத்தின் காலத்தில் கோயில் பூசைகளும் திருப்பணிகளும் சிறப்பாக நடைபெற்றன. பின்னர் க.சண்முகநாதன் கோயிலைப் பொறுப்பேற்று நடத்திவந்தார். தொடர்ந்து தி.ஸ்ரீஸ்கந்தராசா ஆலயத்தை சிறந்த முறையில் நிர்வகித்து வருகின்றார்.

1991 இல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் பூசை வழிபாடுகள், திருவிழாக்கள் இன்றி ஆலயம் காணப்பட்டது. தொடர்ந்து 1996 இல் மக்கள் மீளக்குடியமர்ந்ததும் ஆலய பூசை வழிபாடுகளும் மீண்டும் ஆரம்பமாகின. எனி னும் இந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கை மக்கள் இடப்பெயர்வு என்பவற்றால் ஆலயம் சேதமடைந்து பொலிவுகுன்றிக் காணப்பட்டது.

கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் 2001 ஆம் ஆண்டு திருப் பணிச் சபை ஆரம்பிக்கப்பட்டு ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயப் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றன.



இந்தத் திருப்பணிச் சபையின் முயற்சியினால் பழைய தூண்கள், மதில்கள் இடிக்கப்பட்டு, புதிதாகத் திரா விடக் கலைப் பணியில் அமைக்கப்பட்டு, பெரியளவிலான திருப் பணி வேலைகள் இடம் பெற்று 2002 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25 ஆம் திகதி குடமுழுக்குவிழா சிறப்பாக இடம் பெற்றது.

இந்த ஆலய மூலஸ்தானம் இரட்டைப் பஞ்சாங்க அமைப்பைக் கொண்டதுடன் இங்கு நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. திருக்குளம், சித்திரத்தேர், தேர்முட்டி, பஞ்சதள இராச கோபுரம் ஆகியன விதிமுறைப்படி அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலயத்தில் மாதப்பிறப்பு, தைப்பூசம், கார்த்திகை உற்சவம், வைகாசி விசாகம், மணவாளக் கோலம், கந்தசஷ்டி, சூரன்போர், திருக்கல்யாணம், ஐப்பசி வெள்ளி, திருவெம் பாவை போன்ற தினங்களில் விசேட அபிடேகம், சுவாமி திருவீதியுலா வருதல் என்பன சிறப்பாக இடம்பெறும். அத்துடன் வருடாந்த பெருந்திரு விழாவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. கந்தசஷ்டி விரத காலங்களில் புராணபடனம் நடத்தி பயன் சொல்லுதல் இடம் பெறும். ஏராளமான பக்தர்கள் ஆலயத்தில் தங்கி உபவாசம் இருப்பர். சித்திரா பௌர்ணமி நாளில் தீர்த்தோற்சவம் இடம் பெறக்கூடிய வகையில் பத்துத் தினங்கள் சிறப்பான பெருந்திருவிழா இடம் பெறும். மூன்று காலப் பூசை கள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. கடந்த 75 ஆண்டுகளுக்கு முன்பு தாபிக்கப்பட்ட சண்முகா னந்தசபை, விழாக்காலங் களில் தண்ணீர்ப் பந்தல் நடத்துதல், சமயப் பிரசங்கங்களை ஒழுங்குபடுத்தல், அன்னதானம் செய்தல் போன்ற கைங்கரியங்களை மேற்கொண்டு ஆலய நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பாக செயற்படுகின்றது. இந்தக் கோயில் பரிபாலகர்களே கோயிலுக்கு அண்மையில் வியாவில் சைவ வித்தியாசாலை என்ற பாடசாலையையும் ஆரம்பித்து இந்தக் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கும் ஆன்மிக ஈடேற்றத்துக்கும் வழிகோலினர்.

**டர்னிகன்**

பாடசாலையில் அக்காலத்தில் கல்வி கற்ற மாணவர்களிடையே சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதன் பயனாகச் சிறந்த சமூகக் கட்ட மைப்பு இந்தக் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டது.

(முற்றும்)

---

## ஈராண்டு நினைவுகளில்

## எம் ஜனா

தாயின் மடியில்
15 . 05 . 1974

ஆண்டவன் அரவணைப்பில்
30 . 11 . 2009



## அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தன் (ஜனா)

(வர்த்தக ஆசிரியர், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்)

ஈரவிழி காயவில்லை இன்னும் ஜனா
ஈராண்டு சென்றதுவோ நீ பிரிந்து
கூறறிவு கொண்ட எம் குலவிளக்கே
பாரகத்து வாழ்வை துறந்து சென்றதேனோ!
உன்பிரிவை எண்ணியெண்ணி உறவுகளும் நாமும்
உருகுவதை அறியாயோ எம் ஜனாவே
கண்ணிமைக்கும் போதினிலே நீ மறைந்தாய்
கண்மணியே ஜனா உன்னையென்று காண்போம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
(10956)(2-6-9) அப்பா, அம்மா, தம்பி, தங்கை.

---

### முதலீட்டு வங்கியின் ஆண்டு நிறைவையொட்டி போட்டிகள்


அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் 80 ஆவது வருட நிறைவையொட்டி நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

சேமிப்புப் பழக்கத்தை பழக்குவது தாயாவாள், ஒன்றிணைந்து வீடொன்றினை அமைப்போம், சிக்கனமான எதிர்காலம் ஆகிய தலைப்புகளில் கட்டுரை, சித்திரங்களை ஆக்கி அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் ஒழுங்கமைப்புக் குழு அரச ஈட்டு முதலீட்டு வங்கி, 269, காலி வீதி, கொழும்பு என்னும் முகவரிக்கு பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் அனுப்பி வைக்குமாறும், யாழ்.மாவட்ட மாணவர்கள் 127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-207)

---

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**மாணிக்கம் சின்னராசா**

திதி:- 30.11.2011

தோற்றம்
03.03.1945

உதிர்வு
07.12.2005

*அன்பான குணத்தாலும்
அயராத உழைப்பாலும்
அனைவரையும் அரவணைத்து,
அகிலத்தில் ஏற்றமுடன் எம்மை
அவையத்து முந்தி இருக்கச்செய்த அப்பாவே!
ஆண்டுகள் ஆறு சென்றாலும் ஆறிடுமோ நம் துயரம்.*

"திரவியபவனம்"
அல்வாய்.

- குடும்பத்தினர்.

(8022)(2-6-9)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**டானியல் தேவகுமார்**

**(தேவன்)**

மலர்வு: 26.10.1976
உதிர்வு: 30.11.2010

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்" (வெளி 14:13)

கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

(7857)(2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் மீது தாக்குதல்; காணொளி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு,நவ.30

அனுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான காணொளி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு காணொளியொன்று வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜீ.டபிள்யூ.கொடிப்பிலி உத்தரவிட்டுள்ளார். அனுராதபுரம் சிறைச்சாலையில் 53 விடுதலைப்புலி சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அதிகாரிகளினால் தாக்கப்படுவது போன்ற காட்சிகள் இந்த காணொளியில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மாவீரர் தின நிகழ்வை கொண்டாடத் தயாராவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அனுராதபுரம் சிறைச்சாலையில் சோதனை நடத்தப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். சோதனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்ட இந்தச் சந்தேகநபர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக வெளிநாடுகளுக்கு காணொளி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் செய்மதி தொழில்நுட்பத்துடன் கூடிய இந்தக் காணொளியை அனுப்பி வைத்துள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காணொளி போலியானது என்று சிறைச்சாலை ஆணையாளர் கொடிப்பிலி லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். (ச)



பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினால் பாடசாலை கல்வியைப் பூர்த்திசெய்த யுவதிகளுக்கான மனைப் பொருளியல் பயிற்சி வகுப்புகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களுடன் பேரவை நிர்வாகிகள் காணப்படுகின்றனர். (207)

# கிழக்கு வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடில்லை

## போதுமானளவு மருந்துகள் உள்ளன என்கிறார் மாகாண சுகாதார அமைச்சர்

மட்டக்களப்பு,நவ.30

கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. போதுமானளவு மருந்துகள் எம்மிடம் உள்ளன என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் பொதுமக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மருந்துகளுக்கு தட்டுபாடு என்று எந்தவொரு வைத்தியரும் கூறமுடியாது. அவ்வாறு தெரிவிக்கப்பட்டால் அதனை எழுத்து வேலை மூலமாக எனக்கு அறிவிக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண வரவு - செலவுத் திட்டத்தின் சுகாதார அமைச்சு மீதான விவாதத்தை முடித்து வைத்து உறையாற்றும்போதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தாவது:

சுகாதாரத்துறைக்கென தனிக் கொள்கையொன்று உண்டு. அதற்கமையவே என்னால் பணியாற்ற முடியும்.

எவருடைய அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்காகவும் என்னால் பணியாற்ற முடியாது.

ஊழலும், அரசியல் ஆதிக்கமும் நிலவிய ப.நோ. கூ. சங்கங்களை இன்று நாம் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளோம்.

அதிகளவான ஊழல் மோசடிகளை ஒழித்து மக்கள் நம்பிக்கை கொள்ளும் அமைப்பாக மாற்றியமைத்துள்ளோம்.

அதன் பிரதிபலனை அதிகளவானோர் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் - என்றார். (ச)

# சிறுவர் நாடகத்துறையை மேம்படுத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.30

மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு வடக்கு, கிழக்கு மக்களின் கலை மற்றும் கலாசாரத்தை மீண்டும் மேம்படுத்தும் நோக்கில் சிறுவர் நாடகத்துறையை மேம்படுத்துவதற்கான கருத்தரங்கு எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கல்லடி, விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டீ.பி. ஏக்க நாயக்க தலைமையில் மேற்படி கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இந்தவருடம் சிறுவர் நாடகத்துறையில் பங்கு பற்றிய தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் ஆகியோருக்கும் நாடகத்துறையைக் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள், மேற்படி துறையைக் கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு மேற்படி ஒரு நாள் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் நாடகப் பிரதியாக்கம், ஒப்பனையாக்கம், தயாரிப்பு ஆகியவை குறித்த விளக்கங்களை பிரபல விரிவுரையாளர்கள் வழங்கவுள்ளனர். (வ)

# வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.30

வடமராட்சிப் பிரதேசத்தில் பொலிஸாரும், பொதுசுகாதாரப் பரிசோதகரும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸார் தத்தம் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த பொதுசுகாதாரப் பரிசோதகர்களை இணைத்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரும், பொது சுகாதாரப் பரிசோதகர்களும் குழுக்களாக இணைந்து டெங்கிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் மத்தியில் டெங்கு சம்பந்தமாக விழிப்புணர்வுர்வை ஏற்படுத்திவருவதுடன், வீடுகள், காணிகளைத் துப்புரவு செய்து வைத்திருக்குமாறும் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர். (ச-236)

# தொடரும் மழையால் மக்கள் பாதிப்பு

கொழும்புத்துறை, நவ.30

தொடர்ந்து பெய்துவரும் பெருமழையால் கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமம் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

அண்மையில் மீளக்குடியமர்ந்து சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்துவந்த இந்தப்பகுதி மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து இயல்பு வாழ்வைப் பாதித்துள்ளது. புதிய வீதி அமைப்புக்காக இந்தப்பகுதி வீடுகள் பல அகற்றப்பட்டு புதிய எல்லை நிர்ணயம் மேற்கொள்வதற்கான காணி அளவிடும் பணிகள் தாமதப்படுவதால் தாம் வீடுகளை அமைப்பதில் ஈடுபடமுடியாதுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ச-135)

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு,நவ.30

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தீ விபத்து எற்பட்டுள்ளது.

இந்த விபத்தினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தீயணைப்புப் படையினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர். கடலில் இருந்து அனல்மின் நிலையத்துக்கு கரித் துண்டுகளை எடுத்துச் செல்லும் குழாயிலே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்துச்சம்பவத்தி னால் இதுவரை எவருக்கும் ஆபத்து இல்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


## சிவாச்சாரிய அபிஷேக அழைப்பு



(குரு பட்டாபிஷேகம்)

நிகழும் மங்களகரமான ஹர வருஷம் கார்த்திகைத் திங்கள் 14 ஆம் நாள் [30.11.2011] புதன்கிழமை காலை 9.14 மணி முதல் 9.36 மணிவரையிலான சுப முகூர்த்தத்தில் பருத்தித்துறை பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய சர்மா லக்சுமி அம்மா தம்பதியரின் புத்திரன் பிரம்மஸ்ரீ

பா.பாலசதீஸ்வர சர்மா

அவர்களுக்கு பருத்திநகர் கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. அந்தண பெருமக்கள், தேவஸ்தான பரிபாலன சபையினர் மற்றும் அடியார்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

தீக்ஷா குரு சபரிமலை குரு சுவாமி பிரம்மஸ்ரீ தானு வாசுதேவ சிவாச்சாரியார்
தர்மசாஸ்தா ஆலய ஸ்தானிகர்
உரும்பிராய்

தங்கள் நல்வரவை நாடும்
பிரம்மஸ்ரீ பா.பாலசதீஸ்வர சர்மா
ஜனனி குடும்பம்
சிவன்கோயிலடி, தும்பளை வீதி,
பருத்தித்துறை.

(10776)(1,6,9)

குறிப்பு: பருத்தித்துறை சிவன் ஆலயத்தில் நடைபெற இருந்த இவ்விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பருத்திநகர் கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தில் நடைபெறுகிறது.



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA No.1 புறொயிலர் குஞ்சுகள்
30.11.2011 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே
மேற்கொள்ளவும்.
* றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(10909) (2-6-9)



## i-Spoken English (3 M)

நீங்கள் ஏற்கனவே நன்கு அறிந்த கே.யு வின் சிறப்பு பயிற்சி நெறி. தனிப்பட்ட விசேட நவீன கல்வி முறையில்.... IELTS

Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
K.U-Education -"Practical and Result Oriented." Tel:0776458253



## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY!



லண்டனில் வசிக்கும் சுரேந்திரன் வஜீனா தம்பதிகளின் செல்வப் புதல்வி அபினா தனது 3 ஆவது பிறந்தநாளை இன்று (30.11.2011) புதன்கிழமை வாகையடி வீதி, மட்டுவில் தெற்கில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, கொலண்ட் தாத்தா, ஜேர்மனியிலிருக்கும் மாமா, பாலா மாமா, தாசா மாமா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மாமாமார் மற்றும் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

அபினா

(10737)(1.6.9)



## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறொயிலர் ரூ.450/= மட்டுமே) காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.



## கோழிக்குஞ்சு விநியோகம்

1 மாதம் வளர்ச்சியடைந்த சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
TP.0776090926



## வேலையாள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பெண்கள்
வேலைசெய்யும் வியாபார
நிலையத்துக்கு (கணினி மூலம்)
பெண் காசாளர் தேவை.
தொடர்பு: 0773689179

(10929)
(9-6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் விடயத்தில் 'ஜெ' இரட்டை வேடம் போடுகிறார்

## திருமாவளவன் ஆவேசம்

சென்னை, நவ.30

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் இரட்டை வேடம் போடுகிறார் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை கோயம்பேட்டில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர்:

இலங்கை தமிழர்களுக்கு விடுதலை வாங்கித் தருவேன் என்று ஜெயலலிதா பேசினார். ஆனால், அவர்களால் தனது உயிருக்கு ஆபத்து இருக்கி றது என்று நீதிமன்றில் கூறுகிறார்.

மூன்று தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சட்டசபையில் தீர்மானம் போடுகிறார். ஆனால், நீதிமன்றத்தில் அவர்களை விடுவிக்கக் கூடாது என்று அரசு சட்டத்தரணி கூறுகிறார். மாவீரர் தின கூட்டத்துக்கு அரசு அனுமதி மறுக்கிறது. இலங்கை தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதா இரட்டை வேடம் போடுகிறார்.

பரமக்குடி துப்பாக்கி சூட்டில் இறந்தவர்கள் குடும்பத்துக்கு ரூ.1 லட்சத்தை தமிழக அரசு வழங்கியது. விபத்து, மழை வெள்ளத்தால் பலியானோருக்கு ரூ.2 லட்சத்தை அரசு வழங்குகிறது.

மாவீரர் தினகூட்டத்துக்கு அரசு அனுமதி மறுக்கிறது. இலங்கை தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதா இரட்டை வேடம் போடுகிறார்.

ஜெயலலிதாவின் இரட்டை வேடம் வெளியில் வந்து கொண்டிருக்கும் நிலையில் ஈழப் போராட்டம் தொடரும்.



இது என்ன ஒரவஞ்சனை. ஈழத்தமிழர் பிரச்சி னையிலும் தலித் மக்கள் பிரச்சினையிலும் அவருக்குக் கவலை இல்லை. அவரது இரட்டை வேடம் வெளிப்பட்டு வருகிறது. ஈழப் போராட்டமும் சாதி ஒழிப்புப் போராட்டமும் தொடரும். அதற்கு எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்-என்றார். (வ)

# கனிமொழிக்குப் பிணை; மகிழ்ச்சியில் கருணாநிதி

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கனி மொழிக்கு பிணை கிடைத்திருப்பது மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். கனிமொழி சென்னைக்கு வரும் போது வரவேற்பு அளிக்கப் படும் என்றும் அவர் கூறினார்.

கனிமொழிக்கு பிணை கிடைத்துள்ள மகிழ்ச்சியில் தி.மு.கவினர் தமிழகத்தின் பல பகுதிகளிலும் இனிப்பு வழங்கிக் கொண்டாடினர்.

தி.மு.க. ராஜ்யசபா நாடாளுமன்ற உறுப்பினரும், கருணாநிதியின் மகளுமான கனிமொழி கடந்த மே மாதம் 20 ஆம் திகதி 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டார்.

கடந்த ஆறு மாத காலமாக சிறையில் இருக்கும் கனி மொழிக்கு நேற்று முன்தினம் பிணை கிடைத்துள்ளது.

இது குறித்து சென்னை கோபாலபுரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி செய்தியாளர்களிடம் பேசுகையில், கனி மொழிக்குப் பிணை கிடைத்தது மட்டற்ற மகிழ்ச்சி.

இந்த மகிழ்ச்சியை ராசாத்தி அம்மாளிடம் பகிர்ந்து கொண்டேன் என்றார். கனிமொழிக்கு கட்சியில் பதவி வழங்கப்படுமா என்ற பத்திரிக்கையாளர் கேள்விக்கு பதவி பற்றி பேசி முடிவு செய்யப்படும் - என்றார். (வ)

# அம்பானியின் சொத்துகளை முடக்க ஜார்க்கண்ட் நீதிமன்றம் உத்தரவு

வாடிக்கையாளரை மோசடி செய்த குற்றத்துக்காக இந்தியத் தொழிலதிபரான அனில் அம்பானியின் சொத்துக்களை பறிமுதல் செய்யுமாறு நீதிபதி பி.கே.பாண்டே உத்தரவிட்டார்.

இந்தியாவில் மொபைல் ரீசார்ஜ் தொடர்பான மோசடி வழக்கில் ரிலையன்ஸ் இன்ஃபோகாம் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அனில் அம்பானியின் சொத்து களைப் பறிமுதல் செய்ய ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள தான்பாத் மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக பிரதாப்குமார் வர்மா என்பவரின் மனைவி ரிலையன்ஸ் கைத்தொலைபேசி சிம் கார்ட் வாங்கி இருந்தார். அதை ஈசி ரீசார்ஜ் செய்தபோது குறிப்பிட்ட திட்டத்துக்கென ரிலையன்ஸ் நிறுவனம் அறிவித்திருந்த சலுகைகள் கிடைக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து ரிலையன்ஸ் நிறுவனம், தன்து வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. வாடிக்கையாளர்களை மோசடி செய்கிறது. எனவே ரிலையன்ஸ் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி கடந்த 2009 ஆம் ஆண்டு பிரதாப் குமார் வர்மா ரிலையன்ஸ் நிறுவனத் தலைவர் அனில் அம்பானி மீது மோசடி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் கடந்த மே 21 ஆம் திகதி ஜார்கண்ட் நீதிமன்றம் அனில் அம்பானிக்கு பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டது. எனினும் அனில் அம்பானி இதுவரை கைது செய்யப்படாத நிலையில் அவர் தலைமறைவாக இருப்பதாக கருதி அவரது சொத்துகளைப் பறிமுதல் செய்யுமாறு நீதிபதி பி.கே.பாண்டே உத்தரவிட்டார். (வ)

# மத்திய அரசுக்கு எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை

டில்லி, நவ.30

சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி வழங்கும் முடிவை மத்திய அரசு திரும்ப பெறாவிட்டால் நாடாளுமன்ற கூட்டத் தொடரை நடத்த விட மாட்டோம் என்று எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்கும் முன் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் குருதாஸ் தாஸ் குப்தா மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் எண்ணம் இல்லை என்றார்.

நாடு முழுவதும் விவசாயிகள் ஏற்கனவே சிக்கலில் உள்ள இந்த நிலையில் அரசின் இந்த முடிவு அவர்களை மேலும் இக்கட்டில் தள்ளி விடும் என்றும் கூறினார். இந்த விவகாரத்தில் மத்திய அரசுக்கு இடையே கருத்து வேறுபாடு நிலவுவதால், அரசு தனது முடிவை கைவிட வேண்டும் என்றும் குருதாஸ் தாஸ் குப்தா வலியு றுத்தினார். (வ)



தெலுங்கானா ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் டில்லியில் நடத்திய தர்ணா போராட்டத்தில், தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதித் தலைவர் சந்திரசேகர ராவ், விஜயசாந்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

# சுக்ராமுக்கு பிணை

டில்லி, நவ.30

லஞ்சம் வாங்கியதாக 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் சுக்ராமை பிணையில் விடுவிக்க டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவ காரணங்களுக்காக அவருக்கு ரூ 10 லட்சத்துக்கான உத்தரவாதத்தின்பேரில் பிணை வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக இருந்தபோது 1996 ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் ஒன்றிடம் இருந்து ரூ 3 லட்சம் லஞ்சம் பெற்றதாக இவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்தே உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால் தனக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்தார். (வ)

# ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மூவரின் தூக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டும்

## தமிழக அரசு கூடுதல் மனு

சென்னை, நவ.30


இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று கூடுதல் மனு தாக்கல் செய்துள்ளது.

இதனையடுத்து தமிழக அரசின் மனு மீது விசாரணை, அடுத்தவருடம் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக, சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, 1991ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இதில் நளினி, முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய 4 பேரின் தூக்குத் தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. 3 பேரின் தூக்குத் தண்டனை ஆயுளாகக் குறைக்கப்பட்டது. எஞ்சிய 19 பேரை விடுதலை செய்தது.

தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட 4 கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதை ஆகிவிடும் என்று முதல்வர் தெரிவித்த கருத்துக்கிணங்க நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும் ஏனையவர்களைப் பொறுத்தவரை அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க முடிவு செய்யப்பட்டது.

அமைச்சரவை முடிவை ஏற்று 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஆளுநர் ஒப்புதல் அளித்தார். சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. இந்த 3 பேரும் ஜனாதிபதிக்கு அளித்த கருணை மனுக்களை தமிழக அரசு 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதியிட்ட கடிதத்தின்படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.




இந்த கருணை மனுக்களை. ஜனாதிபதி நிராகரித்து விட்டதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது. இந்த நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை தூக்கு தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

# ஸ்ரீரங்கம் கோயிலின் பாதுகாப்பு அதிகரிப்பு

திருச்சி, நவ.30

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் கோயிலின் பாதுகாப்பைப் பலப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக கோவில் முழுவதும் நிரந்தரமாக குளோஸ் சர்க்யூட் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

இதுகுறித்து அறநிலையத் துறை அமைச்சர் பரஞ்சோதி கூறுகையில்,

கோவிலில் கண்காணிப்புக் கமராக்கள் அமைக்க அனுமதி கோரி முதல்வரிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இந்தநடவடிக்கை அவசியமாகிறது.

கோயிலின் கிழக்குப் பகுதிக்குள் உள்ள காட்டழகிய சிங்கர் கோவிலுக்குள் உள்ள வெற்றிடமான இடத்தில் கலையகமும் அமைக்கப்படும்-என்றார்.

இந்நிலையில் 21 நாள் வைகுண்ட ஏகாதசி விழா வரும் அடுத்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகி ஜனவரி 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. வைகுண்ட ஏகாதசி ஜனவரி 5 ஆம் திகதி நடைபெறும். இதற்கான பாதுகாப்புப் பணிகளில் 2,500 பொலிஸார் ஈடுபடுத்தப் படவுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை.......

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

துரதிஷ்டம் அந்தச் செய்தி படைப் புலனாய்வாளர்களுக்குப் பல்கலைக் கழகத்திலிருந்தே அறிவிக்கப்பட்டது. உடனே நான்கைந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த முகமூடி அணிந்தவர்கள் மாணவர் பொது அறைக்குக்கீழ் இருந்த விளம்பரப் பலகைக் கண்ணாடிகளை அடித்து நொருக்கிவிட்டு அதில் ஒட்டப்பட்டிருந்த நோட்டீஸை எடுத்துச் சென்றனர்.

மறுநாள் பல்கலைக்கழகம் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக சமூகத்தினர் மாவீரர்தினம் கொண்டாடுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததாகவும் அதனால் பல்கலைக் கழகத்தைச் சோதனையிடப் போவதாகவும் கூறி நுழைந்த பொலிஸார் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு மற்றும் வளாகத்திலுள்ள மண்டபங்கள், விரிவுரை அறைகளைச் சோதனையிட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முற்பகல் கூடிய மாணவர்களில் ஒரு பகுதியினர் தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடி வீரச்சாவடைந்த போராளிகளுக்காகவும், போரில் மரணமடைந்த மக்களுக்காகவும் மௌன அஞ்சலியைச் செலுத்தினர் என்பதே பரவிய தகவல்.

## வன்னியில் எதுவாயினும் இராணுவத்தின் அனுமதி தேவை

இலங்கை அரசு விடுதலை புலிகளை தோற்கடித்துத் தமிழ் மக்களைப் பயங்கரவாதத்திடம் இருந்து மீட்டெடுத்ததாகப் பிரசாரப்படுத்தி அவர்களைத் தொடர்ந்து அடிமைகளாகவே பயன்படுத்தி வருகிறது. மண் குடிசை என்றாலும் தூய்மையாய் வாழ்ந்த வன்னிமக்களைவாணம்பார்த்து வாழவைத்து வேடிக்கை பார்க்கிறது அரசு.

போதாக்குறைக்கு அவர்கள் தமது பண்பாட்டை பிரதிபலிக்கக் கூடிய விழாக்களையும் நிகழ்வுகளையும் நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கார்த்திகை விளக்கீட்டுத் திருநாளில் தீபம் ஏற்றத் தடைவிதிக்கப்படுகிறது.

பொது இடங்களில் கூட்டம் நடத்த அனுமதி பெற உத்தரவிடப்பட்டுள்ளது. பொது நிகழ்வுகளுக்கு அழைக்கப்பட வேண்டியவர்கள் யார் யார் எனப் பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. வெளியிடப்படும் நூல் களாயினும் அதில் இடம்பெறும் அம் சங்கள் முற்கூட்டியே கோரப்படுகின்றன.

அரசுக்குச் சார்பற்ற மாற்று கருத்துகள் அடங்கியவற்றைத் தவிர்க்குமாறு வற்புறுத் தப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் தமிழ் மக்களது அபிலாசைகளையும் உணர்வுகளையும் எந்த சந்தர்ப்பத்திலும் யாராலும் மாற்றி விட முடியாது. அது காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில் முனைப்புப் பெறும்.

இதுபோலவே உணர்வுள்ள நிகழ்வுகளும் ஏதோ ஒரு மூலையிலாவது கொண்டாடப்படும். அதை யாரும் கண்டுவிடவோ தடுத்துவிடவோ முடியாது. இந்த மாவீரர் தினமும் பிரத்தியேக இடங்களில் கொண்டாடப்பட்டே இருக் கிறது.

மெழுகு வர்த்திகள் தமது கண்ணீரை வடித்தே இருக்கின்றன. உலகெங்கும் அந்தநாள் உச்சரிக்கப்பட்டே உள்ளது. ஏன் நாட்டின் ஜனாதிபதியும் மாவீரர் நாளை நினைவு கூர்ந்து தெற்கின் அதி வேக நெடுஞ்சாலையை திறந்து வைத்தார் மாவீரர் தினத்தில். நவம்பர் 27 ஐ நினைவுகூர்ந்து உரையும் நிகழ்த்தினார். ✱

## மனவளக் கலை யோகா இலவச பயிற்சி ஆரம்பம்

இலங்கை மனவளக்கலை மன்றத்தினூடாக யாழ்ப்பாணத்தில் மனவளக் கலை யோகா பயிற்சி பெற்றவர்களுக்கு இலவசமாக மீளவும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி எதிர்வரும் மூன்றாம், நான்காம் திகதிகளில் மாலை 4.30 மணி தொடக்கம் 7 மணிவரை இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி மனவளக் கலை பேராசிரியர்களால் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியை முன்பு பெற்றவர்கள் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன் பயிற்சியில் மீளவும் கலந்து கொள்ளுமாறு இலங்கை மனவளக் கலை மன்றத்தினர் கேட்டுள்ளனர்.


## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியைகளான
திருமதி ம.மகேந்திரன், திருமதி ஆ. சர்வேந்திரன்
ஆகியோரின் பாசமிகு மாமி
திருமதி சிவபாக்கியம் இராமநாதர்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)
அவர்கள் 26.112011 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரின் பிரிவால் துயர் அடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
யா/நுணாவில் கிழக்கு
அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி.
பாடசாலைச் சமூகம்
(வி/2876) (2-6-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர்
தி.வேலாயுதம்பிள்ளை
(உரிமையாளர் "சாயிராம் பார்மசி" சாவகச்சேரி)
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி தியாகராசா தையல்நாயகி
அவர்கள் 29.11.2011 அன்று காலமானதையிட்டு அன்னாரின் மறைவுக்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.
(7859) (2-6-9)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை யோகராசா



கோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை யோகராசா (25.112011) வெள்ளிக்கிழமை இரவு ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், ஜேர்மனியில் வசிக்கும் செல்வகுமார், ரேக்கா, அங்கலிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜேர்மனியில் வசிக்கும் றாஜினி, ஸ்ரீசங்கர், கோபிநாத் ஆகியோரின் அன்பு மாமனும், மயில்வாகனம் (முன்னாள் உத் தரவு பெற்ற வியாபாரி மயில் வாகனம் ஸ்ரோர்ஸ், கொக்குவில் கிழக்கு), சுபத்திரை, நல்லலட்சுமி, தங்கம்மா (சங்குவேலி), பூபதி, இராசேஸ்வரி (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), சற்குணதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தனலக்சுமி, சுந்தரம் பிள்ளை, கனகசபை (J.P), திருபாலசிங்கம் (சங்குவேலி), சின்னத்துரை, நவரத்தினராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்), தனபாலசிங்கம், ஏழாலையைச் சேர்ந்த நாகேஸ்வரி, ஜெயராசா, திலகேஸ்வரி, சிவனேஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜேர்மனியில் வசிக்கும் ஐஸ்வர்யா, அபிராமி, திபிஷா, ஸ்ரீவிஷ்ணு, திஷான், இலக்கியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.12.2011) வியாழக்கிழமை 2 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குமரகோட்டம், கோண்டாவில்.
சி.மயில்வாகனம் (சகோதரன்),
சி.பூபதி (சகோதரி).
(10971) (2-6-9)

## வைத்தியம்

நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் பதினாறு வருடங்களுக்கு முன்பு பல வருட காலமாக அஸ்மா, தொய்வு, முட்டு நோய்களுக்கு விசேட சிகிச்சை அளித்த தற்சமயம் கொழும்பில் சிகிச்சை புரியும் டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்கள் பல நோயாளிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் மாதத்தில் இருமுறை சில நாள்கள் யாழ்ப்பாணத்தில் சிகிச்சை அளிக்க இருக்கிறார். உங்களைப் பார்வை இடப்படும் நாளையும், நேரத்தையும், இடத்தையும் தொலைபேசி மூலம் முன் அனுமதி (புக்கிங்) பெற்றே வரவேண்டும்.
தொலைபேசி இலக்கங்கள்:
(C/5899)(9-6-8) 0714815690, 0114801582

## தேவை

புடைவைக் கடைக்கு வேலை தெரிந்த/பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் வரவும்.
தமயந்தி ரெக்ஸ்,
நவீன சந்தை, சாவகச்சேரி.
(7858)(2-6-9)

## காணிகள் விற்பனைக்கு

கைதடி வடக்கு ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்திற்கு வடக்குப் பக்கமாக நான்கு காணி கள் விற்பனைக்கு உண்டு.

1. எட்டுப் பரப்பு கிணறு, மதில், தண் ணீர் தாங்கி
2. எட்டுப் பரப்பு, மதில் கிணறு வீடு ஒரு பகுதி
3. இரண்டு பரப்பு, வீடு வளவு
4. ஐந்து பரப்பு, வீடு வளவு

தொடர்பு: 0750402302
(10933)(6/9/8)

## காணி விற்பனைக்கு

A-9 பிரதான வீதியில் ஆசைப்பிள்ளை ஏற்றத் துக்கு அருகில் (மிருசுவில்) "6" பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 0776099004

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பிரான்ஸ் குடியுரிமை 1979 சுவாதி, துலாம் ராசி, 4 இல் செவ்வாய் 10 1/2 கிரகபாவம், 5'9" G.C.E. O/L, தனியார் கம்பனியில் பணி. பிரான்ஸ் குடியுரிமை 1983, பூரம் சிம்மராசி 05 கிரகபாவம் 5'7" G.C.E. A/L, தனியார் கம்பனியில் பணிபுரியும் மணமகன்களுக்கு A/L, படித்த அழகான மணமகள் தேவை. மிகவிரைவில் சென்னை வந்து திருமணம் செய்வார்கள். உடன் புகைப்படங்களுடன் அணுகவும்.
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
42/11, கெனடி லேன், இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு
(பூங்கனிச்சோலை அருகில்)யாழ்ப்பாணம்
தொ.பே: 0779694009/0750741451

## தவறிவிட்டது

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த செல்லன் குணபாலசிங்கம் (I.C.இல.428512061V), குணபாலசிங்கம் செல்வமணி (I.Cஇல.518654195V) ஆகிய இருவ ரினதும் தே.அ.அட்டைகள் உரும்பிராய்க்கும் யாழ். பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.
தொ.பே: 0777049895

## தவறிவிட்டது

கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு சுன்னாகம், முகவரியில் வசிக்கும் ஜெயராம் அனோஜன் என்பவரது தேசிய அடையாள அட்டை (912052621V) வவுனியா பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 0775387608, 0778969279 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

## தவறிவிட்டது

தெல்லிப்பழையைச் சேர்ந்த வைத்தீஸ்வரன் குணாளன் என்பவரது தே.அ.அ (47052 1066V) மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், பதிவுச் சான்றிதழ் என்பன தெல்லிப்பழைக்கு அண்மைய பகுதியில் 24.11.2011 அன்று தவறி [illegible] ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077[illegible]27522

## தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதவி வெற்றிடம் - பயிற்சி இலிகிதர்
கொடிகாமம்

நேற்றைய 29.11.2011 உதயன் பக்கம் 18 இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில், க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/எண்கணிதம், தமிழ் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக 5 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என வாசிக்கவும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி சற்குணபவான் சுகுமாரி
தம்பதியரின் புதல்வியும்
வவுனியா பூந்தோட்டம்
மகா வித்தியாலய மாணவியும் ஆகிய
செல்வி ச.தமிழினி
அவர்கள் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டுவதுடன், இவர் கல்வியில் மேன்மேலும் சாதனை படைக்க இறைவனை வேண்டுகின்றோம்.
பெரியகுளம், பூந்தோட்டம், வவுனியா.
வாழ்த்துவோர்:
சற்குணபவான் (அப்பா), சுகுமாரி (அம்மா).
(இ/6417)(2-6-9)

## Computer Express

Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால்

Batch I 30.11.2011:- 9 am or 3Pm Batch II 02.12.2011:- 9 am or 3Pm
Batch III 03.12.2011:- 9 am or 3Pm Batch IV 04.12.2011:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சின்னத்துரை
பரமேஸ்வரி



மலர்வு
15.04.1954

உதிர்வு
11.12.2010

குடும்ப விளக்காய் எமக்கு ஒளிதந்தாய்
குடும்ப குல விளக்கின்றி தவிக்கின்றோம் நாம்
வருடம் ஒன்று கடந்து சென்றாலும்
வருடும் நினைவுகள் நித்தம் எமக்கு

பொதுநூல் நிலைய வீதி,
கைதடி தெற்கு, கைதடி.
(10968)(2-6-9) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு மட்டும் போதாது விளைவுகள் மோசமாகும்

## நேட்டோ மீது பாகிஸ்தான் ராணுவம் காட்டம்

இஸ்லாமாபாத்,நவ.30

நேட்டோ படைகள் தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதற்காக மன்னிப்புக் கேட்டால் மட்டும் போதாது. இந்த விவகாரம் மேலும் பல மோசமான விளைவுகளை உருவாக்கும் எனப் பாகிஸ்தான் ராணுவம் காட்டமாகத் தெரிவித்துள்ளது.

நேட்டோ பொதுச் செயலர் ஆண்டர்ஸ் போக் ராஸ்முஸ்ஸன் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கு எவ்வித உள்நோக்கமும் இன்றி எதிர்பாராத விதமாக இந்தச் சம்பவம் நடந்து விட்டது என வருத்தம் தெரிவித்து எழுதிய கடிதத்துக்குப் பதிலளித்த போதே பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் அதர் அப்பாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

இந்தச் சம்பவம் குறித்து மன்னிப்புக் கேட்டால் மட்டும் போதாது. இதன் விளைவுகள் இன்னும் மோசமாக இருக்கும். இதுபோன்ற தாக்குதல்கள் ஏற்கனவே பல முறை நடந்து விட்டன. கடந்த மூன்றாண்டுகளில், நேட்டோ நடத்திய தாக்குதல்களில், 72 பாகிஸ்தான் வீரர்கள் பலியாகியுள்ளனர். 250 பேர் காயம் அடைந்துள்ளனர். நேட்டோ நடத்திய தாக்குதல் மீதான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தான் அரசு முடிவெடுக்கும்.-என்றார்.

அதேநேரம், வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் கார்டியன் போன்ற பத்திரிகைகளில், முதலில் பாகிஸ்தான் தரப்பில் இருந்து தான் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அது தலிபான்களாக இருக்கலாம் எனக் கருதித்தான் நேட்டோ பதிலடி கொடுத்ததாகவும், தாக்குதல் குறித்து பாகிஸ்தான் ராணுவத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் ஆப்கன் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்;

இது ஒரு பொய்யான தகவல். அப்படி பாகிஸ்தான் தரப்பில் இருந்து முதல் தாக்குதல் நடத்தப்பட்டால் அங்கு எத்தனை பேர் பலியாகினர், சேதம் என்ன என்பது பற்றி விவரங்களை அவர்களால் தர முடியுமா? தாக்குதலில் எதற்காக ராணுவ ஹெலிகொப்டர்களும் ஜெட் ரக போர் விமானங்களும் பயன்படுத்தப்பட்டன? இவ்வாறு அப்பாஸ் கேள்வி எழுப்பியுள்ளளார். (ந)

# நேட்டோ தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணை நடக்கும்

## பென்டகன் அறிவிப்பு

வாஷிங்டன்,நவ.30

ஆப்கன்-பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்காவின் நேட்டோ படைகள் நடத்திய வான் தாக்குதல்கள் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்படும் என பென்டகன் அறிவித்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி பாகிஸ்தானின் மொஹ்மந்த் பழங்குடியினப் பகுதியில் சலாலா இராணுவ நிலையம் மீது, நேட்டோ-ஆப்கன் படைகள் இணைந்து நடத்திய தாக்குதலில், 28 பாகிஸ்தான் வீரர்கள் பலியாகினர்.

இந்தச் சம்பவம், ஏற்கனவே சிக்கலில் உள்ள அமெரிக்கா - பாகிஸ்தான் உறவில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் செய்தி தொடர்பாளர் ஜியார்ஜ் லிட்டில் கூறுகையில், நேட்டோ படைத் தாக்குதல் குறித்து விரிவாக இந்த விசாரணை நடத்தப்படும். தற்போதுள்ள சிக்கலான நிலையில் பாகிஸ்தான் அமெரிக்க உறவுகள் குறித்து நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அமெரிக்காவின் மத்திய சிறப்புப் படைத் தலைவர் தலைமையிலான குழு விரிவான விசாரணை நடத்தும் என்றார்.

இதற்கிடையே இந்த விவகாரம் குறித்து அமெரிக்காவின் ராணுவ அமைச்சர் லியோன்பெனட்டா கூறுகையில் , திடீரென இடம்பெற்ற வான் தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அரசுக்கு வருத்தம் தெரிவித்துள்ளோம் எனவும் அந்நாட்டு ராணுவ உயரதிகாரிகளுடன் தொடர்ந்தும் தொடர்பில் உள்ளோம் எனவும் தெரிவித்தார். (ந)

# சிரிய ராணுவம் சுட்டு 23 பேர் சாவு

## மனித உரிமை இயக்கங்கள் தகவல்

நிகோசியா, நவ.30

சிரியாவில் கடந்த சில நாள்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற மோதலில் 23 பேர் பாதுகாப்புப் படையினரால் சுடப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை அங்குள்ள மனித உரிமை இயக்கங்கள் தெரிவித்தன.

அந்த இயக்கங்கள் மேலும் கூறியதாவது:

சிரியாவுக்குள் பன்னாட்டுப் பார்வையாளர்களை அனுமதிக்குமாறு அரபுக் கூட்டமைப்பு விதித்திருந்த கெடுவை அந்நாட்டு அதிபர் பாஷர் அல்-ஆசாத் அலட்சியப்படுத்தியதைத் தொடர்ந்து, பொருளாதாரத் தடை விதிக்க ஆதரவாக அரபு கூட்டமைப்பு வாக்களித்தது. இதனைத் தொடர்ந்து சிரியாவில் ஆங்காங்கே மோதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

மத்திய பிராந்தியமான ஹோம்ஸில் 7 பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வடக்கே உள்ள ஹமாவில் 17 வயதுச் சிறுவன் உள்பட 3 பேர் படையினரால் கொல்லப்பட்டனர். டமாஸ்கஸ் அருகே ராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 14 வயது சிறுவன் உள்பட 10 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 13 பேர் படுகாயமடைந்தனர். கிழக்குப் பகுதியில் உள்ள டைர் எஜார் பகுதியில் ஒருவரது இறுதிச் சடங்குக்காக குழுமியிருந்த மக்களை நோக்கி படையினர் சுட்டதில் 2 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

வடமேற்கு சிரியாவின் காஃபர்நுபோல் பகுதியில் போராட்டக்காரர்களுக்கு எரிபொருள் விற்றதாக கைதுசெய்யப்பட்டவர் விசாரணைக்குப் பின் சுட்டுக்கொல்லப்பட்டார். எல்லாமாக 23 பேர் கொல்லப்பட்டதாக அந்த இயக்கங்கள் தெரிவித்தனர். (ந)



உக்ரைன், கீவ் நகரில் நடந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் அந்நாட்டு அதிபர் விக்டர் யானுகோவ்ச்(நடு), போலந்து அதிபர் பிரெளனிஸ்லா கோமோராவ்ஸ்கி (வலது) கலந்து கொண்டு பேசினர்.

# சேற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்கிறது இஸ்ரேல்

ஜெருசலேம், நவ.30

சேற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை இஸ்ரேல் கண்டுபிடித்துள்ளது. இதுகுறித்து இஸ்ரேலைச் சேர்ந்த மின் உற்பத்தி நிறுவனம் ஜி ஆர் பி எல் தரப்பில் கூறப்படுவதாவது:

ஆற்றுப் படுகையில் சேரும் சேறு, சகதியில் படிந்திருக்கும் , மின்காந்த சக்தியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் கண்டறியப்பட்டுள்ளது.

இயற்கை எரிவாயு தயாரிப்பு உலை மூலம் சேறு, சகதியை வெப்பமூட்டும் போது அது வாயுவாக வெளிப்பட்டு டர்பைன்கள் வழியாக மின் உற்பத்தியாகும். சேறு, சகதி மட்டுமின்றி தண்ணீரில் நனைந்த குப்பைகளில் காணப்படும் சகதியிலும் மின் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஜிஆர்பிஎல் தெரிவித்துள்ளது. (ந)

# கடலில் தத்தளித்த மாலுமிகளை காப்பாற்றிய இளவரசர் வில்லியம்

பிரிட்டன், நவ.30



பிரிட்டன் அருகிலுள்ள கடலில் மூழ்கிய கப்பலில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த இரண்டு மாலுமிகளை இளவரசர் வில்லியம் காப்பாற்றிக் கரை சேர்த்துள்ளார்.

ஸ்வான்லாந்து என்ற இந்தக் கப்பல் 3000 தொன் சுண்ணாம்புக் கல்லை ஏற்றிக்கொண்டு பிரிட்டனின் வடக்கு வேல்ஸில் உள்ள லாண்டுல்ஸ் துறைமுகத்திலிருந்து வைட் தீவில் உள்ள கோவெஸ் துறைமுகத்துக்குச் செல்லும் வழியில் வேல்ஸ் கடற்கரைக்கு பத்து கிலோ மீற்றர் தொலைவில் அலையில் சிக்கி மூழ்கத்தொடங்கியது. இதனையடுத்து 'ரோயல் எயார் போர்ஸ்' விமானப்படையில் பயிற்சிபெறும் பிரிட்டன் இளவரசரும் இன்னும் மூவரும் இணைந்த மீட்புக்குழு விரைந்து சென்று கப்பலில் இருந்து இரு மாலுமிகளைக் காப்பாற்றியுள்ளது.

இதுதொடர்பாகப் பாதுகாப்புத் துறையின் செய்தித்தொடர்பாளர் குறிப்பிடுகையில்; வில்லியம் அங்கிருந்த இராணுவ விமானத்தில் துணை விமானி என்ற பொறுப்பிலிருந்து தேடினார். இப்போது மீட்புப்பணி முடிந்து விமானப்படைத் தளத்துக்குத் திரும்பி விட்டார் என்றார். (ந)

# தலாய்லாமாவுக்கு ஆதரவு வழங்காதீர்கள்!

## இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை

திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய்லாமாவுக்கு இந்தியா எந்தவித ஆதரவுகளையும் வழங்கக்கூடாது என சீனா எச்சரித்துள்ளது.

இந்தியாவில் நடைபெறுகின்ற மாநாடு ஒன்றில் தலாய்லாமா உரையாற்றவுள்ள நிலையில் சீன வெளிவிவகார அமைச்சினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா சீனாவுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றமையே இந்த எச்சரிக்கை விடுக்கப்படுவதற்கான முக்கிய காரணம். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் எல்லைப் பிரச்சினைகள் நிலவிவரும் வேளையில் சீனாவின் இந்தக் கருத்து இந்தியாவைப் பாதிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# முதற்கட்ட நாடாளுமன்றத் தேர்தல்; எகிப்தில் அதிகளவு வாக்குப் பதிவு

கெய்ரோ,நவ.30

திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் எகிப்து நாடாளுமன்ற முதற்கட்டத் தேர்தல் தொடங்கியது. இதன்படி எகிப்தின் 27 மாகாணங்களில் எட்டு மாகாணங்களில் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. மக்கள் வாக்களிக்கும் இடங்களுக்கு வந்து வரிசையில் நின்று வாக்களிக்கத் தொடங்கினர். நிர்வாகக் கோளாறால் வாக்குப்பதிவு சற்றுத் தாமதமடைந்தது என்றாலும் பல பகுதிகளில் அதிகபட்ச சதவீதத்தில் வாக்குகள் பதிவாகின.

இரண்டாம் கட்டத் தேர்தல் டிசெம்பர் 14ஆம் திகதியும், மூன்றாம் கட்டத்தேர்தல் அடுத்தாண்டு ஜனவரி 3 ஆம் திகதியும் நடக்க உள்ளன. அடுத்தாண்டு ஜனவரி 10 வரை நடத்தப்படும் இத்தேர்தலின் இறுதி முடிவுகள், அதே மாதம் 13ஆம் திகதி வெளியிடப்படும். இதையடுத்து, 270 உறுப்பினர்கள் கொண்ட மேலவை எனப்படும் ஷூரா கவுன்சில் தேர்தல், அடுத்தாண்டு ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் வரை நடக்கும். தொடர்ந்து அடுத்தாண்டின் மத்தியில் அதிபருக்கான தேர்தல் நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அமையும் அரசு, புதிய அரசியல் சாசனத்தை தயாரிக்க உள்ளது. இதற்கிடையில் தாரிர் சதுக்கத்தில் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி நூற்றுக் கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ந)

# ஈராக் குண்டுத் தாக்குதலில் 11 பேர் சாவு

பக்தாத்,நவ.30

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள சிறைச்சாலை ஒன்றுக்கு வெளியில் நடத்தப்பட்ட தற்கொலைக் கார்குண்டுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலர் ஒன்று கூடியிருந்த சந்தர்ப்பத்தில் இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பாதுகாப்பு ஊழியர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் உயிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் இலங்கை அணியில் திலான் சமரவீர

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கிரிக்கெட் தொடருக்கான இலங்கை டெஸ்ட் அணியில் துடுப்பாட்ட வீரரான திலான் சமரவீர இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார் என விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் அணித் தெரிவுக் குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்தே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது என விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தென்னாபிரிக்க - இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 15ஆம் திகதி தென்னாபிரிக்காவில் தொடங்கவுள்ளது.

அதற்கு முன்னர் டிசெம்பர் 9ஆம் திகதி தென்னாபிரிக்க 'ஏ' அணியுடனான பயிற்சி ஆட்டத்திலும், பின்னர் 3 டெஸ்ட்கள் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளிலும் இலங்கை அணி விளையாடவுள்ளது.

முதல் டெஸ்ட் செஞ்சூரியனில் டிசெம்பர் 15ஆம் திகதி தொடங்குகிறது. இரண்டாவது டெஸ்ட் டிசெம்பர் 26ஆம் திகதி டர்பனிலும், 3ஆவது டெஸ்ட் ஜனவரி 3ஆம் திகதி கேப்டவுனிலும் ஆரம்பமாகும்.

இந்தத் தொடருக்கான இலங்கை அணி அண்மையில் அறிவிக் கப்பட்டிருந்தது. எனினும், அந்த அணியில் திலான் சமர வீர சேர்க்கப்பட வில்லை.

ஆனால், தற்போது அவர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணி, உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடந்து முடிந்த பின்னர் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற முடியாமல் திண்டாடிவருகிறது.


திலான் சமரவீர

அதேவேளை, அணித் தெரிவு விடயத்தில் கிரிக்கெட் சபைக்கு அப்பால் சில சக்திகள் இயங்குகின்றன எனவும் அண்மைக்காலமாக விமர்சனங்கள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய இளைஞர் சைக்கிளோட்டம் மட்டக்களப்பில் 8 ஆம் திகதி ஆரம்பம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இளைஞர் சைக்கிளோட்ட சவாரி எதிர்வரும் 08ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து ஆரம்பமாகும் இந்தச்சவாரி, மாத்தறையில் நிறைவுபெறும்.

இந்தச்சவாரி தொடர்பான செய்தியாளர் மாநாடு அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்தச்செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பிரதியமைச்சர் துமிந்த திசாநாயக்க, இளைஞர் மன்றத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான லலித்பியும் பெரேரா, விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர், தேசிய காப்புறுதி நிறுவனத்தின் தலைவர், முன்னாள் சைக்கிளோட்ட வீரர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தப்போட்டியில் வெற்றி பெறும் வீரருக்கு பரிசாக கார் வழங்கப்படும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து ஆரம்பிக்கும் இந்தச்சைக்கிளோட்ட போட்டியானது, 50 வருடங்களுக்குப் பின்னர் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச்சைக்கிளோட்டப் போட்டியில் பங்குகொள்ளும் அனைவருக்கும் 5 லட்சம் ரூபா பெறுமதியான காப்புறுதி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் வீதியோட்டம்

யாழ்ப்பாணம், நவ.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நடத்தும் வீதியோட்டப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 8 மணியளவில் முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி முல்லைத்தீவு பிரதேச செயலக முன்றலில் முடிவடையவுள்ளது. மேற்படி வீதியோட்டப் போட்டியில் 100 வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (த-23)


வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று ஆரம்பமான உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி முகாமில் பயிற்சியாளரான மில்றோய் ஜெயமான ஆசிரியர் ஒருவருக்குப் பயிற்சி அளிக்கிறார். (த-86)

# சங்கானைப் பிரதேச செயலக, மாவட்டச் செயலக அணிகள் அணிகள் அரச அதிபர் வெற்றிக்கிண்ணங்களை வென்றன




யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியும், பெண்களுக்கான வலைப் பந்தாட்ட சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட செயலக அணியும் சம்பியன் கிண்ணங்களை வென்றன.

கல்வியங்காடு ஞானபாஸ்ரோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை போட்டியின் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி களமிறங்கியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சங்கானைப் பிரதேச செயலக அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி 12.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிஷாந்தன் 14 ஓட்டங்களையும், வைத்தீய நாதன் 13 ஓட்டங்களையும், ரகுமான் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.மாவட்ட செயலக அணி வீரர்களான சதீஸ்வரன் 3 இலக்குகளையும்சுதர்சன், பிரதீபன், முகுந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட செயலக அணி 14.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 48 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் 5 ஓட்டங்களால் வெற்றியீட்டி சங்கானை அணி சம்பியனானது.

இதில் சூரியகுமார் 12 ஓட்டங்களையும், மகிந்தன் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சங்கானை பிரதேச செயலக அணிசார்பாக நிஷாந்தன் 4 இலக்குகளையும், கிரிகரன் , ரகுமான் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக நிஷாந்தனும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக கே.ரகுமானும் சிறந்த பந்து வீச்சாளராக கிரிதரனும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் சங்கானை பிரதேச செயலக அணியைச் சேர்ந்தவர்கள். சிறந்த களத்தடுப்பாளராக யாழ். மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த சதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

பெண்களுக்கான வலைப் பந்தாட்ட இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட செயலக அணி 11:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு அரச அதிபர் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த மனோன்மணி, சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த பிறேமினி, யாழ்.பிரதேச செயல அணியைச் சேர்ந்த யக்குலின் ஆகியோர் சிறந்த வீராங்கனைகளாக தெரிவுசெய்யப்பட்டனர். சகல துறை வீராங்கனையாக யாழ். மாவட்ட செயலக அணி வீராங்கனை திருமதி.ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் தெரிவு செய்யப்பட்டார். பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் கலந்துகொண்டார். (23)


சங்கானை பிரதேச செயலக அணி

# விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி முகாம் கோப்பாயில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.30

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 19 விளையாட்டு உத்தி யோகத்தர்களுக்கான வதி விடப் பயிற்சி முகாம் நேற்று செவ்வாய்க் கிழமை கோப்பாய் சுகாதாரத் திணைக்களப் பணிமனையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி கலந்து கொண்டார். வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், ஆளுநரின் ஆலோசகர் டபிள்யூ எ. விமலராஜன், வடமாகாண விளையாட்டுத் துறைப்பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, உதவிப் பணிப்பாளர் எஸ். கனகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரையிடம் வதிவிடப் பயிற்சி முகாம் தொடர்பாகக் கேட்ட போது விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு முதல் இரண்டு நாள்கள் நிதி நிர்வாக திட்டமிடல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும்

மற்றைய நாள்களில் துரையப்பா விளையாட்டரங்கில் விளையாட்டுத்துறை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் இந்த வதிவிட பயிற்சி முகாம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை இடம்பெறும் எனவும் தெரிவித்தார். (த-23)

# மாணவர் அணி வெற்றி

யாழ்ப்பாணம், நவ.30

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் உதைபந்தாட்ட அணிக்கும் கல்லூரி பழைய மாணவர்கள் உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான ஆர். கனகரத்தினம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் உதைபந்தாட்ட அணி வெற்றி பெற்றது.

இரண்டு அணி வீரர்கள் ஒருவருக்கு ஒருவர் சளைக்காதவர்கள் அல்ல என்பதை நிருபிக்கும் வகையில் மோதிக் கொண்டனர்.

கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் உதைபந்தாட்ட அணி 4:1 என்ற கோல் கணக்கில் பழைய மாணவர் அணியை வெற்றி கொண்டு கனகரத்தினம் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (த- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது இந்தியா




இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து மேற்கிந்தியத்தீவுகள் அணி விளையாடி வருகின்றது. முதலில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் இழந்த நிலையில் முதலாவது ஒரு நாள் ஆட்டம் நேற்று இடம்பெற்றது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் இந்தியா ஒரு விக்கெட்டால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் தலைவர் சேவாக் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சிம்மொன்ஸ், பரத் களமிறங்கினர். முதலாவது இலக்குக்காக 18 ஓட்டங்கள் மட்டுமே பகிர்ந்த நிலையில் பரத் 13 பந்துகளில் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த சாமுவேல்ஸ் 10, சிம்மொன்ஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, மேற்கிந்தியத்தீவுகள் அணி பத்து பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 52 ஓட்டங்களைப் பெற்றது.

அதன் பின்னர் இணைந்த டரன் பிராவோ, கயாட் ஜோடி நிதானமாகத் துடுப்பெடுத்தாடியது. இலக்கு இழப்பினை தடுத்து ஆட்டத்தை முன்னெடுத்துச் செல்ல மேற்கிந்தியத்தீவுகள் அணி 137 பந்துகளில் 100 ஓட்டங்களைத் தாண்டியது. 75 ஓட்டங்கள் நான்காவது இலக்குக்காக பகிரப்பட்ட நிலையில் கயாட் 31 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'.

மறுமுனையில் ஆடிய டரன் பிராவோ 56 பந்துகளில் தனது 6 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். தொடர்ந்து அணி 154 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிராவோவும் ஆட்டமிழக்க மேற்கிந்திய அணி சரிவை நோக்கி முன்னேறியது. பின்வரிசை வீரர்களில் ருஷல் மட்டும் சிறப்பாக ஆடி 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் உமேஸ் யாதவ், ஆரோன் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.



பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய இந்தியாவை மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர்கள் மிரட்டத் தொடங்கினர். இந்தியாவின் இலக்குகள் மளமளவென சரிந்தன. பார்த்தி பட்டேல் 12, சேவாக் 20, காம்பீர் 4, ஹோக்லி 3, ரெய்னா 5 என்று முன்னணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற, ஒரு கட்டத்தில் இந்தியா 5 இலக்குகள் இழப்புக்கு 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும் ரோகித் சர்மா அபாரமாக ஆடி, அரைச்சதம் கடந்து வெற்றியை இந்தியாவின் பக்கம் திருப்பினார். ரோகித் சர்மா 72 ஓட்டங்களை விளாசினார். இந்திய அணி 48.5 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. மேற்கிந்திய அணி சார்பில் கேமர் ரூச் 3 இலக்குகளையும், ரசேல் 2 இலக்குகளையும் சரித்தார்கள். ஒரு புறம் இலக்குகள் வீழ்ந்தபோதும் தனித்து நின்று போராடி வெற்றிக்கனியைப் பறித்த இந்தியாவின் ரோகித் சர்மா ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஙு-15)




# பாகிஸ்தான் பந்து வீச்சில் பணிந்தது பங்களாதேஷ்

பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 50 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பாகிஸ்தானின் சிறப்பான பந்து வீச்சுக்கு பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள் மண்டியிட இந்த வெற்றியை இலகுவாக பாகிஸ்தான் பெற்றது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது பாகிஸ்தான் அணி. இரு அணிகளுக்குமிடையிலான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டம் மிர்பூரில் நேற்று இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 20 பந்து பரிமாற்றங்களில் 135 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் சார்பில் அதிகபட்சமாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹபீஸ் 25, மிஷ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பங்களாதேஷின் பந்து வீச்சில் சீரான இடைவெளியில் பாகிஸ்தானது இலக்குகள் சரிக்கப்பட்டன. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வேகமாகத் துடுப்பெடுத்தாடினாலும் மத்திய வரிசை, பின்வரிசையின் சிறப்பான ஒத்துழைப்பின்மையால் 20 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பாகிஸ்தான் பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பில் சகிப் அல் ஹசன், அலொக் கபாலி தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது பங்களாதேஷ் அணி.

ஆரம்பத்திலிருந்தே பங்களாதேஷ் அணி பாகிஸ்தானின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் திணறியது. பங்களாதேஷ் சார்பில் இரண்டு வீரர்கள் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர். ஏனையோர் பாகிஸ்தானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வேகமாக வெளியேறினர். நஷீர் ஹுசைன் ஆட்டமிழக்காமல் 35, அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹீம் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பாகிஸ்தான் பந்து வீச்சில் திணறிய பங்களாதேஷ் இறுதியில் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகள் நஷ்டத்துக்கு 85 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் சார்பில் ஹபீஸ், மலிக் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சகல துறைகளிலும் கலக்கிய ஹபீஸ் தெரிவானார். (15)




# இந்திய அணியை ஆஸ்திரேலியா வெற்றிகொள்ளும்

இந்தியக் கிரிக்கெட் அணியை ஆஸ்திரேலிய அணி தனது சொந்த மண்ணில் வைத்து வெற்றிகொள்ளும் என அந்த அணியின் முன்னாள் வீரரான ஸ்டீவ் வோக் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் 26ஆம் திகதி முதல், ஆஸ்திரேலியாவில் 4 டெஸ்ட்கள் மற்றும் இரண்டு 'இருபது-20' கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதன்போது, டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றும் என்று ஆஸ்திரேலிய அணி யின் முன்னாள் தலைவரான ஸ்டீவ்வோக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

ஆஸ்திரேலிய அணி கடந்த சில மாதங்களாக மிகவும் சிறப்பாகச் செயற்படவில்லை.

எனினும், மைக்கல் கிளார்க் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி, 2-1 என்ற கணக்கில் இந்தியாவை வீழ்த்தும்.

ஆஸ்திரேலிய அணியில் இன்னும் உலகின் தலைசிறந்த வீரர்கள் உள்ளனர். உள்ளூர் மைதானத்தில் ஆஸ்திரேலிய அணியை அவ்வளவு எளிதாக தோற்கடிக்க முடியாது.

சஹீர்கான்மீது அனைவரது எதிர்பார்ப்பும் இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக அவரது பந்துவீச்சும் சிறப்பாக உள்ளது.

காயத்திற்குப் பின்னர் மீண்டும் களமிறங்கவுள்ள அவரது பந்துவீச்சுக் குறித்து தற்போதைக்கு எதுவும் கூற முடியாது - என்றார்.

# இங்கிலாந்தின் சிறந்த 10 வீரர்கள் தெரிவு; அலைஸ்டர் குக்குக்கு மூன்றாவது இடம்

ஆண்டின் சிறந்த 10 இங்கிலாந்து வீரர்களை பி.பி.ஸி. தெரிவுசெய்துள்ளது.

ஆண்டுதோறும் இங்கிலாந்தின் சிறந்த 10 வீரர்களை தெரிவு செய்து, அவர்களுக்கு பி.பி.ஸி. விருது வழங்கிவருகிறது.

அதன்படி இந்த ஆண்டுக்கான இங்கிலாந்தின் சிறந்த பத்து வீரர்களையும் ரசிகர்களுக்கிடையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு மூலம் பி.பி.ஸி. தெரிவு செய்துள்ளது.

ரசிகர்களால் தெரிவுசெய்யப்பட்ட பத்து வீரர்களுள் சைக்கிளோட்ட வீரரான மார்க் கவென்டிஸ் முதலிடத்தைப் பிடித்தார்.

கிரிக்கெட் வீரர்களான அலைஸ்ரையர் குக் மூன்றாவது இடத்தையும், அன்ட்ரூ ஸ்டிராஸ் பத்தாவது இடத்தையும் பிடித்தனர்.

ஆண்கள் டென்னிஸ் தரவரிசையில் நான்காவது இடத்திலுள்ள அன்டி முர்ரே ஒன்பதாவது இடத்தைப் பிடித்தார்.

மகளிர் பிரிவில் டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்திலுள்ள டென்மார்க்கின் கரோலின் வொஸ்னியாக்கியின் காதலரும், பிரபல கோல்வ் வீரருமான ரொர்ரி மைக்கல்ரோய் எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

முதல் பத்து வீரர்கள் விவரம் வரிசைப்படி வருமாறு:-

மார்க் கவென்டிஸ் (சைக்கிளோட்டம்), டெர்ரென் கிளார்க் (கோல்வ்), அலைஸ்ரையர் குக் (கிரிக்கெட்), லக் டொனால்ட் (கோல்வ்), மோ பரா (தடகளம்-மரதன்), டெய் ஹரீன் (தடகளம்), அமிர்கான் (குத்துச் சண்டை), ரொர்ரி மைக்கல்ரோய் (கோல்வ்), அன்டி முர்ரே (டென்னிஸ்), அன்ட்ரூவ் ஸ்டிராஸ் (கிரிக்கெட்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் பொன்னுத்துரை



சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னுத்துரை நேற்று (29.11.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், செல்வரதியின் அன்புக் கணவரும், தவபாலன் (ஜீவா), தவகுலம்(ஜெயா), தயாளன் (தயா), தவபாலினி(ரூபி- லண்டன்), தர்மேந்திரா(சிவன்), தர்சினி(குட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
ஐங்கரன் விதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வல்லிபுரம் விநாயகமூர்த்தி (சின்னராசா)

(பிக்பொன்ஸ் கடை உரிமையாளர், கிளிநொச்சி)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் விநாயகமூர்த்தி நேற்று (29.11.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், விநோதினியின் (லண்டன்) அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, நடேசலிங்கம் மற்றும் நாகபூசனி, ஆனந்தம் (அருள்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சொர்ணலிங்கம், பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ராஜ்மோகனின்(லண்டன்) அன்பு மாமனும், யதுராணாவின் (லண்டன்) பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு, கோப்பாய்.

தகவல்:
மனைவி.

## குழந்தைவேலு தம்பையா



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு தம்பையா நேற்று (29.11.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு- சின்னாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனகசிங்கம்(ஓய்வுபெற்ற பொறியியலாளர், கொழும்பு மாநகர சபை), குணசிங்கம், குலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணாதேவி, புவனசுந்தரி, பத்மாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனும், கஜேந்தினி(விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்), மஞ்சுதன், கஜேந்திரன், கௌரிசங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2011) புதன்கிழமை பிலாவடி, வதிரி இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

# யாழ்.பல்கலை மாணவர்களின் புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.பல்கலைக்கழக ஊடகக்கற்கை சிறப்புக்கலை இரண்டாம் வருட மாணவர்களின் 'சாரல்' இதழியல் புகைப்படக் கண்காட்சியும், மூன்றாம் வருட மாணவர்களின் புகைப்பட இதழ் வெளியீடும் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30. மணிக்கு கலை வரலாற்றுத்துறை ஆட்கலரி கட்டடத்தொகுதியில் இடம் பெறவுள்ளன.

நிகழ்வினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் போராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆரம்பித்து வைப்பார்.

இந்தக் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை இடம்பெறும்.

(உ-311)

# தண்டவாளம் திருடமுயன்றோர் விளக்கமறியலில்

யாழ்.நகர்ப்பகுதியில் ரயில் தண்டவாளங்களைத் திருடமுயன்ற 4 பேரை யாழ்.பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர். அவர்களை நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்திய போது குறித்த நால்வரையும் எதிர்வரும் 9 திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நாவலர்வீதியைச் சேர்ந்த 2 பேரும் மற்றும் அரியாலையைச்சேர்ந்த இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் இந்த நால்வரையும் கைது செய்தனர். (ங-4)

## தவறிவிட்டது

பத்தர் கடவை அளவெட்டி நாராயணசாமி சிவராசா என்னும் பெயர் முகவரியுடைய தே. அ.அட்டை இல(712530740V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் வரிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் கடந்த (17.11.2011) அன்று KKS வீதி, மல்லாகத்தில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:0712828122,0779439508

## விற்பனைக்கு

- ND XXXX தொடரிலக்கமுடைய லங்கா அசோக் லேலண்ட் பஸ்ஸும் (வவுனியா- யாழ்ப்பாண வழி அனுமதியுடன்)GL XXXX தொடரிலக்கமுடைய இசுசு லொறியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0773530930,0776648691

## விற்பனைக்கு

செல்மோடல் வான் விற்பனைக்கு உண்டு NO-28 சீனிவாசகம் றோட் கொட்டடி, யாழ்ப்பாணம்.

T.P:0775925162,0771345556

## காணவில்லை

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து 25.11.2011 திகதி இரவு கறுப்பு,பிறவுண் கலந்த அல்சேசன் நாய் காணாமல் போய்விட்டது. நாயைக் கண்டால் தயவு செய்து கீழ்காணும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:0774196946

## திசைகாட்டி நிறுவனத்தில் பதவி வெற்றிடங்கள்

1. எழுதுவினைஞர்: (Clerk) 3 வெற்றிடங்கள் பயிலுநர் பெண்கள், கணினியில் பணிசெய்யக்கூடியவர்கள்.
2. அலுவலக உதவியாளர் ஆண்/பெண்

நேர்முகத்தேர்வு:
2011.11.30 பி.ப. 2 மணி
புதன்கிழமை
2011.12.01 பி.ப. 2 மணி
வியாழக்கிழமை

ஆளணி முகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)



T.P: 021 4914527, 021 2219016
Email: thisaikaddi@sltnet.lk
www.thisaikaddi.lk

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

வேலையற்ற பட்டதாரிகளின் விவரம் திரட்டல் தொடர்பான அவசரமானதும், அவசியமானதுமான கலந்துரையாடல் ஒன்று பெருமாள் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது. பதிவுகளை மேற்கொள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் தமது University Statement Photo copy உடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காலம்- 2011.12.02 வெள்ளிக்கிழமை.
நேரம்- மு.ப 10.00 மணி

குறிப்பு: பதிவுகள் அன்று மட்டுமே இடம்பெறும். தனிப்பட்ட முறையில் இடம்பெறாது.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்,
தலைவர்: பா.விஜேந்திரன்.

## சேவை நலன் வாழ்த்துப்பாமாலை



உயர் திரு நாகேசர் இராசலிங்கம் அவர்கள்
(அத்தியட்சகர் அரச முதியோர் இல்லம் கைதடி)

முதியோர் இல்லம் மாபெரும் வளர்ச்சி
காணவே விரும்பினர் இராசலிங்கம்
அது கடமையின் உயர்ச்சி

அத்தகு மேன்மையில் பலன் அடைகின்றனர் முதியோர்
ஓய்வினில் விடைபெற்றாலும் இறுதிமூச்சுவரை
இத்தரை மீதினில் அவர் பணி நீழ்க
முதியோர் இல்லம் ஆலமரம் மூலவேர் அத்தியட்சகர்
வந்திடும் மூத்தோரை அன்புடன் அரவணைத்து
இளைய தலைமுறை அணையாவிடினும்
தன்கடமை அதுவே என்றார்

சீர்த்தமுகமும் கடமையே கண்ணாய்
பல்துறை புலமையுடன் இல்ல அபிவிருத்தியே
மூச்சாய் பணியின் இறுதிநாள்வரை உழைத்தனர்
அவரால் பண்பட்ட நம்திறன் இன்னும் மேலோங்க
பல்கி பெருகி முதியோர் உலகினை
இனி இத்தகு கைகளே தாங்கும்

ஆற்றல் அறிவு அன்பரவணைப்பு
போற்றும் நன்னடத்தை புனிதமாய் உழைப்பு
அறுபது கடந்தாலும் நூற்றுவரை சாற்றுக
முதியோர்களாய் ஆற்றுக என
உள்ளத்தால் வாழ்த்தும்

அரச முதியோர் இல்லம், கைதடி உத்தியோகத்தர்களும், மூத்தோர்களும்,

## கடை விற்பனைக்கு



பிரதேச செயலகம் முன்பாக,
கண்டி வீதி,
சாவகச்சேரி.
தொடர்பு-
0777177592

## 11 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

### இராசையா சிவஞானம்

(உரிமையாளர்- ஐயாகடை)



கேசாவில் பிள்ளையார் கோயிலடி வண்ணார் பண்ணையைச் சேர்ந்த இராசையா சிவஞானம் கடந்த 20.11.2011 அன்று மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன்

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

20 காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.

கி.யோகரத்தினம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை நேற்று(29.11.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், சந்திரமௌலீஸ்வரதேவியின் அன்புக் கணவரும் கவிதாகரன்(கரன்), சசிகரன், காலஞ்சென்ற சிவாகரன், சுவேதா, உமாகரன்(குட்டி), பிரியங்கா(சா.இந்துக் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர் மஜீத் காலமானார்

கிழக்கு மாகாணத்தின் மூத்த அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான ஏம்.ஏ.அப்துல் மஜீத் நேற்று இரவு சம்மாந்துறையில் காலமானார்

இவர் 1960ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக ஐக்கிய தேசிய கட்சியின் சம்மாந்துறை தொகுதி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.

புடைவை கைத்தொழில் அமைச்சர் மற்றும் அஞ்சல் துறை பிரதியமைச்சர் போன்ற பல பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.

இவரின் ஜனாஸா இன்று புதன்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு ஜனாஸா நல்லடக்கம் சம்மாந்துறையில் மாலை நடைபெறவுள்ளது.(10-30)

## படையினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தகால சம்பவங்கள் குறித்த ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு, கடந்த 20ஆம் திகதி ஜனாதிபதியிடம் குறித்த அறிக்கையைக் கையளித்தது.

அந்த அறிக்கை பகிரங்கமாவதற்கு முன்னர் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய சில தகவல்கள் கசிந்துள்ளன. அதனடிப் படையில் படைத்தரப்பு போர்க் குற்றத்தில் ஈடுபட்டது என்ற விடயத்தை உறுதிப்படுத்திய நல்லிணக்க ஆணைக்குழு, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை அவசியம் என்று வலியுறுத்தியுள்ளது என அறியமுடிகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி அந்த அறிக்கை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற மாநாடொன்றில் கருத்து வெளிட்ட பாதுகாப்புச் செயலாளர், குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியாகக் கூறினார்.

அதுமட்டுமின்றி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியின்போது, குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்டால் நடவடிக்கை உறுதி என்ற விடயத்தை தெரிவித்திருந்தார்.

சர்வதேச அழுத்தங்களை குறைத்துக் கொள்வதற்கும், சர்வதேசத்தின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகப் போர்க்குற்றம் இழைத்தோருக்கு தண்டனை உறுதி என்ற விடயம் ஏறத்தாழ உறுதியாகியுள்ளது.

ஆரம்பம் முதலே போரை ஆதரித்து - படையினரை பெருமைப்படுத்தி கருத்துகளை வெளியிட்ட கடும்போக்குடைய அமைச்சர்கள் படையினருக்கு எதிராக நடவடிக்கை என்ற விடயம் அறிந்ததும் அதிர்ச்சியடைந்துள்ளனர். அத்துடன் கடும்அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் குறித்து அவர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

(உ-சி)

## அக்கிரமத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்கிழமை என்பதால் வழமையை விடவும் பெண்கள் அதிக எண்ணிக்கையில் குழுமி இருந்தனர்.

கூட்டத்தை அவதானித்த அப்பகுதியில் கடமையில் நின்ற சிப்பாய் ஓடோடி வந்தார்.

கூடி இருந்தவர்களிடம்'மணி அடிக்க வேண்டாம்' என்று அதிகாரத் தொனியில் கூறினார் எவரும் வாய்திறக்கவில்லை.

பூசை ஆரம்பமானது மணிக்கோபுரப் பக்கம் எவரும் செல்லவில்லை அச்சகரின் கையில் இருந்த மணி மட்டும் ஓசை எழுப்ப பூசை நிறைவுற்றது அடியார்கள் 'இந்த அக்கிரமத்துக்கு அளவே இல்லையா?' என்று முணுமுணுத்தவாறு வீடு திரும்பினர்.

## மாயமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இராணுவத்தினர் அல்லது பொலிஸார் அவரைக் கைது செய்தனரா என்று நாங்கள் விசாரித்ததற்கு, *இல்லை* என்று பதிலளித்துள்ளார்.'' - இப்படிக் கூறினார் யாழ். பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் சமன் சிகேரா. மாணவர்கள் இடையிலான பிரச்சினையில் யாராவது இவரைத் தடுத்து வைத்திருந்த பின்னர் விடுவித்திருக்கலாம் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார். தனக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி மாணவன் தெளிவான கருத்து எதனையும் பல்கலைக்கழகத்திற்கோ பொலிஸாருக்கோ தெரியப்படுத்தவில்லை என்று அறிய வந்தது.

(உ-14 -207-86)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினால் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்கப்பட்ட சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகாவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இதில் கலந்துகொள்ளவில்லை என்றபோதிலும், அவர் சார்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் கலந்துகொண்டார்.

சரத் பொன்சேகா உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறும், சட்டமாக்கப்பட்டுள்ள நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசுடைமையாக்கும் சட்டத்தை இரத்துச் செய்யும்படி வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், அரசால் அடுத்த ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டிருக்கும் வரவு-செலவுத்திட்டத்தில் நிவாரணங்கள் இல்லை என்பதை சுட்டிக்காட்டி, அதற்கெதிராகவும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள தற்போதைய அரசியல் நிலை குறித்து அவர்கள் அகாஷிக்கு விளக்கினர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவடைந்து 3 ஆண்டுகளாகியும் வடக்கில் அளவுக்கதிகமாக இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். கிராமம் கிராமமாக அவர்கள் இருக்கின்றனர். அங்கு இராணுவ நிர்வாகமே இடம்பெறுகின்றது. இந்த நிலையை மாற்ற அரசு ஒன்றும் செய்யவில்லை. தமிழ் மக்கள் இன்றும் ஜனநாயகச் சூழலில் வாழவில்லை. போருக்கு முன்னர் இருந்த பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. அவற்றுடன் போருக்குப் பின்னர் புதிய பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும் என்ற விடயத்தை தாம் அரசிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார் என்று அகாஷி இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

(உ-15)

## உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய நாடுகளின் அடுத்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு பொதுநலவாய நாடுகள் அனைத்தும் இணக்கம் தெரிவித்தன.

இதுதொடர்பாக எந்தவொரு நாடும் பிரச்சினைப்படுத்துவதில்லை. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் இதுதொடர்பாக கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கின்றார்.

நாம் சர்வதேச நாடுகளுடன் சிறந்த உறவைப் பேணுவதில்லை என எம் மீது எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டுகின்றது.

சர்வதேச உறவில் பலவீனம் ஏற்பட்டிருந்தால் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்தும் வாய்ப்புக் கிடைத்திருக்குமா?

நாம் அனைத்து நாடுகளுடனும் நல்லுறவைப் பேணி வருகிறோம். ஆனால், எம் விடயத்தில் தீர்மானம் எடுக்க வெளிநாடுகளை நாம் அனுமதிக்க மாட்டோம்; எமது விடயங்களை நாமே கையாள்வோம்.

சர்வதேச நாடுகளுடன் நாம் கொண்டிருக்கும் உறவின் பலனாக இலங்கைக்கு அந்நாடுகளின் பிரதிநிதிகளின் வருகை அதிகரித்துள்ளது.

அடுத்த வாரமளவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வகட்சிப் பிரதிநிதிகளும் இங்கு வரவுள்ளனர். இவை அனைத்தும் சர்வதேச நாடுகளுடன் இலங்கை கொண்டிருக்கும் நற்புறவின் ஆழத்தைக் காட்டுகின்றது.

நாம் சர்வதேச நாடுகளுடன் ஒருபோதும் பகைமை, பொறாமை ஆகியவற்றை வளர்க்கவில்லை. இந்த நற்புறவின் காரணமாக இலங்கை அடைந்துவரும் நன்மைகள் அதிகம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நாட்டின் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்த எம்முடன் இணைந்து செயலாற்ற வருமாறு நான் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

(சி)

## அனைத்துச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போகம்பரை, பதுளை, கொழும்பு, யாழ்ப்பாணம், புதிய மகசின் ஆகிய சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த காலங்களிலும் தாக்கப்பட்டிருந்தனர். எனவே தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்படமால் பாதுகாக்கப்படவேண்டும்.

கைதிகளின் பாதுகாப்பை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளதாகக் கைதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் இன்று இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இணையவுள்ளனர்.

(த-14)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட உரை மீதான விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய சஜித் பிரேமதாஸ மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரம் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

யுத்தம் முடிந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டன. முன்பு யுத்தத்திற்கு செலவிட்ட மூலவளங்களைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முடியும்தானே? ஏன் இன்றுவரை பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு சமுர்த்தி முத்திரை கூட வழங்காமல் இருக்கின்றீர்கள்?

வறுமைநிலை தொடர்பாக ஜனாதிபதி மாறுபட்ட விவரங்களை முன்வைத்துள்ளார். 2011 ஆம் ஆண்டு 13 சதவீதமாக இருந்த வறுமைநிலை 7.6 ஆகக் குறைக்கப்பட்டதாகக் கூறினார்.

அதேவேளை, 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட உரையில் 15 சதவீதமாக இருந்த வறுமைநிலை 8.9 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அப்படியானால், 2011 ஆம் ஆண்டைவிட 1.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்பதை ஜனாதிபதியே ஒப்புக் கொண்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதம் என்று ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால், மத்தியவங்கி 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என அறிக்கையிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் தனிநபர் கடன் 2 லட்சத்து 22 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது.

அடுத்த ஆண்டில் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு 60 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 6 ஆயிரம் வீடுகளை மட்டுமே கட்டமுடியும் என்றார். (உ-சி)

**தவறிவிட்டது**

கனகசபை கருணானந்தராஜா ஆகிய எனது அடையாள அட்டை இல(432191532V),மோட்டார் சைக்கிள் லைசென்ஸ், இன்சூரன்ஸ், றைக்ஸ் ஆகியன அடங்கிய அடையாள அட்டை பேர்ஸ் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள ''லிங்கவாசா'' கே.கே.எஸ் வீதி, இணுவில் (பழைய பேப்பர் கடைவளவு) என்னும் முகவரியில் தந்துதவுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P:0212241339

## வளலாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளலாய் மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மக்கள் தமது இருப்பிடங்களுக்கு நேற்றே திரும்பினர்.

கோயிலில் நடந்த நேற்றைய கூட்டத்தில் மீளக்குடியமரும் மக்கள் மிதிவெடிகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர். இதனால், மீளக்குடியமரும் ஆவலுடன் தமது வீடுகளையும் காணிகளையும் துப்புரவு செய்யும் ஆவலுடன் வந்திருந்த மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

''இது மீள்குடியமர்வா அல்லது காடு காட்டுதலா?'' என்று அவர்கள் முணுமுணுத்துக் கொண்டனர். மக்களின் நீண்ட வலியுறுத்தலுக்குப் பின்னரே அவர்களின் வீடுகள் காணிகளைப் பார்ப்பதற்குக்கூடப் படையினர் அனுமதி வழங்கினர். அதுவும் வளலாய் - விமான நிலைய வீதியில் வளலாய் சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் வரை நடந்து சென்ற மக்கள் அதன் இருமருங்கிலும் இருந்த வீடுகள், காணிகளைக் கண்களால் விழுங்கிக் கொண்டனர், அதற்கு மட்டுமே அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

மீள்குடியேற இன்னமும் அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சிலர் தொடர்ந்து வலியுறுத்தியதை அடுத்து, அவர்கள் வந்திருந்த மினி பஸ் தொண்டமானாறு - பலாலி வீதி வழியே செல்ல அனுமதிக்கப்பட்டது. ''இடையில் எங்கும் இறங்கக்கூடாது'' என்ற நிபந்தனையுடனேயே அந்த அனுமதி வழங்கப்பட்டது.

''வீதியில் இருந்து பார்த்தபோது காட்டையும் மரங்களையும் தவிர இராணுவத்தினரும் தெரிந்தனர். எனது வீட்டைப் பார்க்க முடியவில்லை'' என்று தெரிவித்தார் வளலாய் வாசி ஒருவர்.

இதேவேளை-

''மக்கள் மீள் குடியேறுவதற்காக இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை எம்மிடம் கையளித்துள்ளனர். அங்கு வெடிபொருள்கள் அகற்றப்பட்டுவிட்டதாக கூறப்பட்டபோதும் இன்னமும் சில இடங்களில் வெடி பொருள்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. எனவே மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் வெடி பொருள் அபாயம் முற்றாக இல்லை என்ற சான்றிதழை மாவட்ட செயலக கண்ணிவெடி அகற்றும் பிரிவிடம் கோரியுள்ளோம். குறித்த சான்றிதழ் கிடைக்க முன்னர் மக்கள் அப்பகுதிக்குச் செல்வது அவ்வளவு பாதுகாப்பானது அல்ல'' என கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் உதயனுக்குத் தெரிவித்தார்.

(உ-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர் யுவதிகள் மற்றும், A/L எழுதிய மாணவர்கான

வார , மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்

01.12.2011 வியாழன் : பிரிவு 1 : 9-11 பிரிவு 2 : 4.30-5.30
03.12.2011 சனி : பிரிவு 3 : மதியம் 12.30-2.00

முதல் வகுப்பு அனுமதி. புத்தகம். மற்றும் சான்றிதழ் இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

# காணாமற்போதல் சம்பவங்கள் ;இலங்கைக்கு 2 ஆம் இடம்!

ஆட்கள் காணாமல்போதல் சம்பவங்கள் அதிகளவில் தீர்க்கப்படாத நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாம் இடத்தை வகிக்கிறது - என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான நிபுணர் யோலண்டா பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

ஆயிரக் கணக்கான காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை எனவும், இதனால் பல குடும்பங்கள் தொடர்ந்தும் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் தமிழர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற சர்வதேச நியதிக்கு மதிப்பளிக்க வேண்டுமாயின் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். இலங்கை விவகாரங்களை ஏனைய நாடுகள் பிழையான முன்னுதாரணமாகக் கொள்ளாமல் இருப்பதற்காக விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட சகல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் விசாரணை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார் அவர்.

# பன்னாலை,இளவாலை பகுதிகளில் கிராம செயலகங்கள் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.30

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வலி. வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு கிராம செயலகங்கள் நேற்று திறந்துவைக்கப்பட்டன.

மிக நீண்டகாலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து மக்கள் அண்மையில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பன்னாலை, இளவாலை ஆகிய பகுதிகளிலேயே இந்தக் கிராம செயலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிராமசேவையாளர் அலுவலகம், சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம், குடும்ப நல உத்தியோகத்தர் அலுவலகம், விவசாய அதிகாரி அலுவலகம் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்தக் கிராம செயலகங்கள் அமைந்துள்ளன.

இந்த இரு செயலகங்களும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் 1.6 மில்லியன் ரூபா நிதியிலேயே அமைக்கப்பட்டுள்ளன. குறித்த இரண்டு கிராம செயலகங்களையும் யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் நேற்றுத் திறந்து வைத்தார். இந்த செயலகங்கள் மூலம் மக்களின் அலைச்சல் பெருமளவு குறையும் என எதிர்பாரக்கப்படுகிறது.

(ந-15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிசிலியா மெற்றலின் கிறிஸ்தோப்பர் (மாமி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிசிலியா மெற்றலின் கிறிஸ்தோப்பர் கடந்த (28.11.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு - மேரிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், C.S.கிறிஸ்தோப்பர் (U.K), C.F சேவியர் (இளைப்பாறிய ஆசிரியர்), C.P லோறன்ஸ்பிள்ளை (முன்னாள் லிகிதர் யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி), R.J சூரி கிறிஸ்தோப்பர் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயும், யோகமணி (U.K), மரினாறாஜி, சசி (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்திக் (U.K), மேர்சி (U.K) கிறேசி (U.K), ஜோன் கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30, முதலாம் லேன்*
*பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

### திருமதி தையல்நாயகம் தியாகராசா

சரசாலை தெற்கு, சரசாலையைச் சேர்ந்த திருமதி தையல்நாயகம் தியாகராசா நேற்று (29.11.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற த.வே.தியாகராசவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அன்பு மனைவியும் புனிதவதி, காலஞ்சென்ற பத்மாவதி, வேலாயுதபிள்ளை (சாயிராம் மருந்தகம், கண்டிவீதி, சாவகச்சேரி), திருஞானவதி, செல்வநாயகி, சிவகுமாரன் (மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கமலாவதி, மங்களம்மா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் (அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி), சிவஞானம், தியாகேஸ்வரி, பரராஜசேகரம் (YSO) மற்றும் விஜயரத்தினம் (இளைப்பாறிய மின்சாரசபை உத்தியோகத்தர்), வாசுகி, பரமசாமி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும், இரவிக்குமார் (ஆசிரியர், சாவ.இந்துக் கல்லூரி), சிவபாலன் (அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி), சிவகௌரி, குருபரன், சிவசீலன், சேயோன், விஜிதா, சசிதா (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவி), கார்த்திகன், குமரன் (வர்த்தக வங்கி, கிளிநொச்சி), பிரணவன் (CDB) பிரசாந்தன், கஜானன், மகிமா, அம்பிகா, கௌசிகன் (இங்கிலாந்து), ஔவை (யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவி), கமலாபரன் (இலங்கை வங்கி, சாவகச்சேரி), பாஸ்கர், பிரகாஸ், வினோத், சந்திரமோகன் (அம்பிகா மருந்தகம், இணுவில்), செவ்வேள் (ஆசிரியர், கிளி/ இயக்கச்சி அ.த.க.பாடசாலை), சத்தியவதி (ஆசிரியை, யா/சந்திர மௌலசி வித்தியாலயம், மட்டுவில்), காலஞ்சென்ற நாமகள், பாலகி, அருந்தினி (யா/மட்டுவில்.ம.வி), செல்வராணி ஆகியோரின் அன்புப் பாட்டியும், பைரவி, அருண், மாறன், சாம்பவி, சங்கவி, கனாதீபன், பிறையொளி, தாரகி, யாழினி, சிவமிதுனன், மிதுசன், ஆதிபன், நாவலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணிக்கு சரசாலை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மணிமங்கலம்"
சரசாலை,
சாவகச்சேரி.

*தகவல்:*
தி.வேலாயுதபிள்ளை (மகன்)

**மலிவு விற்பனை**

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் Sony 21", 25", 29", TV கள், DVD அம்பிளிபயர் Box, குளிர்சாதனப் பெட்டி, ரேடியோ என்பன பெருந் தொகையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: சொனி ரேட்ற் சென்ரர், (கொமர்ஷல் வங்கி அருகில்) , இல. 56 KKS வீதி, சுன்னாகம்.
0770440570, 0771393670

**வேலை தேடுவோருக்கு**

கணினி ரைப்செற்றிங் தெரிந்தோர் உடன் தேவை.
ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்றர்
பரமேஸ்வராச் சந்தி, கம்பஸ் வீதி, திருநெல்வேலி.
TP 0212220231,0776176794
(10936)(6,8,9)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

இலங்கை திறந்த பல்கலைக்கழக
சட்டமாணி நுழைவுப் பரீட்சை
ஆரம்பம்:- 01.12.2011 வியாழன் (9.00-2.00pm)
P.உமாசங்கர்
இலங்கை நிர்வாக சேவை (SLAS)
P.கமல்தாசன்
ஒவ்வொரு சனியும் காலை 9.00 - 2.30 மணிவரை
நாவலர் கல்வி நிலையம்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
03.12.2011
05.12.2011
காலை 10.00மணி

அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்கமான புதிய பிரிவுகள் எதிர்வரும் 03.12.2011,05.12.2011 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகவுள்ளது.
மாணவர்கள் பதிவினை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road,Jaffna
T.P :021 222 2831 Fax : 021 222 6933
E-Mail : iis@iis.edu.lk

**NALRAVI**
**SPOKEN ENGLISH**

பயிற்சி நெறியைப் பற்றி:
- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:
- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:
- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்

NALBON INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond
Head Office: 527 2nd Floor, Galle Road Colombo 6, Tel 0112 363656 Fax 2360004
Jaffna Branch: 62/20 3rd Floor, Stanley Road Jaffna, Tel 021 221 9 221
Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

யாழ்.நகரில்...!
வெளிநாட்டு நாணய மாற்றும் சேவை நியாயமான பெறுமதிக்கு வெளிநாட்டு கரன்ஸிகள் மற்றும் ரவலேர்ஸ் செக் ஆகியவற்றை மாற்றும் சேவை
இன்று முதல் ஆரம்பம்
(சி-6419)(1,6,9)

**சாரங்கா நாணயமாற்று சேவை**
Sharanga Money Exchange (Pvt) LTD
(Permit No: Ecd/ In/Aut/ Mc/164)
157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6972

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பில் நம்பிக்கை வை. அது துயரில் கொண்டு போய் விட்டாலும் பரவாயில்லை. இதயக் கதவுகளை மட்டும் மூடி விடாதே.
-தாகூர்.

# புதன் பொய்கை A

உதயன் 30 நவம்பர் 2011 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு ·

# இளம் விதவைகளுக்கு மறுவாழ்வு தேவை

இடம்பெற்று முடிந்த யுத்த அனர்த்தங்களால் பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொண்டு இருக்கிறார்கள். வீடுகளை இழந்திருக்கிறார்கள், உறவுகளை இழந்திருக்கிறார்கள், அவயவங்களை இழந்திருக்கிறார்கள் இவை வெளியே சுட்டிக்காட்டக் கூடிய விடயங்கள்தான்.

யுத்தம் ஓய்ந்துவிட்டதுதான். ஆனால் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் மனங்களில் உள்ள காயங்கள் இன்றும் ஆறவில்லை. ஆறப்போவதும் இல்லை. எத்தனையோ குடும்பங்கள் வாழ்வதற்குப் போதிய வசதிகள் அற்ற நிலையில் குடிசைகளுக்குள் முடங்கிப்போய் விட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்றனதான். இதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அதாவது விதவைகளாக்கப்பட்டோருக்கு எந்த வகையிலான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்பது கேள்விக் குறியான ஒரு விடயமே.

இன்று தனித்து வாழும் பெண்களுக்கு பாதுகாப்பு என்பது கிடையாது. எத்தனையோ பேர் அல்லற்படுகிறார்கள். இவர்கள் பற்றிச் சிந்திப்பவர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?

எத்தனையோ விதவைகள் வாய் விட்டுச் சொல்ல முடியாத துன்ப துயரங்களை எதிர்கொண்டு வெளியே சொல்ல முடியாமலும் உள்ளே விழுங்க முடியாமலும் அவலப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக இளம் வயதினர் விதவைகளாக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களின் துன்பங்கள் தேவைகள் சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எண்ணிலடங்கா.

இதுவரை காலமும் விதவைகள் இல்லையா? ஏன் இப்போது மட்டும் இப்படிப் பேசுகிறார்கள் என்று ஒரு சிலர் எண்ணலாம். முன்னர் விதவைகள் இருந்தார்கள். அவர்கள் வாழ்ந்து முடித்தவர்களாகவே காணப்பட்டார்கள். எங்காவது ஒரு சிலரே இளம் வயதினர் விதவைகளாகக் காணப்பட்டார்கள்.

ஆனால் இன்று அவ்வாறு இல்லை. இளம் வயதினர் அதிகமானோர் விதவைகளாக காணப்படுகின்றனர். இந்த இளம் வயது விதவைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை? வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினையை மட்டுமா எதிர்கொள்கிறார்கள்?

இளவயதில் கணவனை இழந்து சிலர் பிள்ளைகளுடன் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது அல்லற்படுகிறார்கள். இவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் போதியளவில் கிடைப்பதில்லை. இன்று நாளுக்கு நாள் ஏற்படும் விலை ஏற்றத்துக்குச் சாதாரண ஒரு குடும்பத்தினரே அதனை எதிர்கொள்ளச் சிரமமடைகின்றனர். இவ்வாறு இருக்கும் போது இவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் எவ்வாறு போதுமானதாக காணப்படும் என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இந்த பெண்களுக்கு என்ன அநீதி நடந்தாலும் அதனைத் தட்டிக் கேட்க யாருமில்லை என்ற ஒரு நிலைதான் இப்போது காணப்படுகிறது. இந்த மனநிலையில் உள்ளவர்களால்தான் பெண்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். பாலியல் ரீதியான துன்பங்களையும் கொடுக்கிறார்கள். இப்படி என்ன நடந்தாலும் தமது பிள்ளைக்காக வாழ வேண்டும் என்ற நிலையில்தான் பாதிக்கப்பட்ட பெண்கள் உள்ளனர்.

இன்று பெண்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இதை ஆராய முற்படும்போது இவற்றுக்கு முக்கிய காரணம் இளம் விதவைப் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாததும்தான் என்பது தெட்டத் தெளிவாகின்றது.

இங்கு மறுமணம் பற்றிச் சிந்திக்கும் போது பெண்களுக்கு மட்டும்தான் மறுமணம் செய்து வைக்கவேண்டும் என்ற நிலைமை இல்லை. ஆண்களுக்கும் இது அவசியமான ஒன்றாகவே காணப்படுகின்றது.

சில பெண்கள் கணவனை இழந்து தவிக்கிறார்கள். சில ஆண்கள் மனைவியை இழந்து தவிக்கிறார்கள். இவர்களின் எண்ணம் எல்லாம் அன்பும் ஆதரவுமாகத்தான் இருக்குமே தவிர வேறு எந்த விதமான நோக்காகவும் இருப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

இவ்வாறு துணையிழந்துள்ளோர் , சமூகத்தில் சேர்ந்து வாழ முற்படும்போது சமூகம் அதனை ஏற்றுக் கொள்ளுமா என்பதுதான் அவர்களின் ஏக்கமாக உள்ளது.

சமூகத்தை பார்த்துப் பயந்து தமது பிரச்சினைகளையும் துன்பங்களையும் வெளியே சொல்ல முடியாத நிலையில் உளவியல் ரீதியான பாதிப்புகளை இவர்கள் எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு சேர்ந்து வாழ முற்படும் உறவுகளுக்குச் சமூகம் உரிய வகையில் வழியமைத்துக் கொடுக்குமானால் எமது சமுதாயம் கலாசாரச் சீரழிவுகளை எதிர்கொள்ளும் நிலைமையையும் ஓரளவாவது குறைத்துக் கொள்ள முடியும்.

எத்தனையோ பேர் மனைவியை இழந்து தமக்கு ஒரு துணை தேவை என்றும் தன் பிள்ளையை வளர்க்க ஒரு பெண் தேவை என்றும் ஏக்கமடைகின்றனர். தம் உணர்வுகளை புரிந்து கொள்வார் எவரும் இல்லை என்ற கவலை ஒரு பக்கம். சமூகம் என்ன சொல்லுமோ என்ற எண்ணம் ஒரு பக்கம்.

இளம் விதவைகள் மறுமணம் செய்வதை இந்தச் சமூகம் ஏற்குமா? இது பலரது கேள்வி. எதனையும் வாயால் சொல்வது சுலபம். செயற்படுத்துவது கடினம். பாதிக்கப்பட்ட ஒருவருக்கு தெரியும் அதன் இழப்பும் வலியும். அவ்வாறு பாதிக்கப்பட்டவர் மறுவாழ்வு கொடுக்க முன்வரும்போது சமூகம் ஏன் ஏற்க மறுக்கிறது. அல்லது ஏனோ தானோ என்று பொறுப்பற்ற விதமாக இருக்கிறது.

மறுவாழ்வுக்கு அவர்கள் பிள்ளைகள் ஒரு தடையா? இது சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயம். பெண்களுக்குரிய பாதுகாப்பையும் வாழ்வாதாரத் தேவையும் பூர்த்தி செய்ய மறுவாழ்வு என்பது இளம் விதவைகளுக்கு தேவையானதொன்று.

இம்மண்ணில் மற்றவர்கள் போல் வாழ முடியாதா? என்று ஏங்குவோருக்கு நிச்சயம் மறுவாழ்வு தேவை. சட்ட ரீதியாக மறுவாழ்வை வழங்க வேண்டும்.

இது நிச்சயமாக சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். பெண்கள் தொடர்பாக அக்கறையுள்ள [illegible] அமைப்புகளும் இவ்வாறான விடயங்களில் அக்கறை எடுத்துச் செயற்படவேண்டியது காலத்தின் தேவை.

ஊர்க்குருவி

# கண்டு கொள்வீர்களா?

அன்றொரு நாள் காலை ஒரு பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்றனர் சுன்னாகம் றோட்டறக் கழகத்தினர். ஏன் அந்த பாடசாலைக்கு என்ற எண்ணம் என் மனதைக் குடைந்து கொண்டு இருந்தது.அங்கு சென்ற பின்னர்தான் எனக்கு அது புரிந்தது.அந்தப் பாடசாலை மாணவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யும்படி கேட்டிருக்கின்றனர் அவர்களுக்கான உதவி வழங்குவதற்கான பயணமாகவே எமது பயணம் அமைந்தது.

ஏ-9 வீதியில் செல்கிறோம் பளை பெயர்ப் பலகை தெரிகிறது. அடுத்து புதுக்காட்டுச் சந்தி. அதிலிருந்து திரும்பி நேரே செல்கிறோம். பாதுகாப்புப் படையினரின் தடுப்புகாவல் இருக்கிறது. அவர்களிடம் அனுமதி பெற்று உள்ளே நுழைகிறோம். உடுத்துறை மகாவித்தியாலயம் என்ற பெயர்ப் பலகை தெரிகிறது. அதிபர் அறைக்குச் சென்று விவரங்களை அறிந்து கொண்டு மாணவர்களைப் பார்க்க சென்றோம். அவர்களுடன் கதைத்தபோது எமது கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

ஒவ்வொரு மாணவரிடமும் ஒவ்வொரு சோகம். நாம் அவர்களின் கதையைக் கேட்கும்போது இயற்கை அன்னை கண்ணீர் விடுகிறாள். அந்த பாடசாலையின் நிலையை இயற்கை அன்னையின் கண்ணீரில் இருந்து அறிய முடிந்தது. இந்தப் பாடசாலையின் நிலையை உங்களுக்கு புரிய வைக்கிறேன் என்று வேகம் கொண்டு வந்த இயற்கை அன்னையின் கண்ணீர் பாடசாலைக்குள் மாணவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த எம்மையும் நனைக்கத் தவறவில்லை.

இதுவரை யாரும் வந்ததில்லை இந்தப் பாடசாலைக்கு வந்த நீங்களாவது பாருங்கள் இந்தப் பாடசாலையின் நிலையை என்று ஆவேசமாகக் காட்டியது. இயற்கை அன்னையின் கண்ணீரில் அர்த்தம் இருக்கத்தான் செய்தது. உண்மை நிலையை நாம் புரிந்து கொள்ளவைத்தது. அதிபரின் அறைக்கு மீண்டும் வந்தோம் அங்கே இருக்க முடியவில்லை. மேசையில் இருந்த பொருள்கள் எல்லாம் நனைந்து காணப்பட்டன. பாடசாலைக் கட்டடங்களுக்குள் வெள்ளம் வடியத் தொடங்கியது.

இந்நிலையில் இங்கு பரீட்சை ஒன்றும் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. தாம் நனையாது இருப்பதா அல்லது வினாத்தாள்களை நனையாது பாதுகாப்பதா என்று தடுமாறியவாறு பரீட்சை மண்டபத்தினுள் மாணவர்கள் பட்ட அவலம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. புத்தகங்கள் மழை நீரில் மிதந்தன. ஓடி ஓடி புத்தகங்களை எடுக்கிறார்கள். குடைகளைத் தேடுகிறார்கள். பரீட்சை எழுதுபவர்களை அடுத்த மண்டபத்துக்கு மாற்றுகிறார்கள். மழை நீர் வழிகிறது ஓடு மேலிருந்து கீழே விழுகிறது. வேறு ஓடு மாற்றிப் பரீட்சை எழுத விடப்படுகிறது. வகுப்புக்கள் முழுவதும் ஒரே மழை நீர்.

இது மட்டுமா இவர்களுக்குப் பிரச்சினை. ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஒவ்வொரு பிரச்சினை. பெற்றோரை இழந்தவர்கள் இருக்கிறார்கள். சகோதரர்களை இழந்தவர்கள் இருக்கிறார்கள். அனைத்து உறவுகளை இழந்தவர்களும் இருக்கிறார்கள்.

ஒரு பிள்ளை ஓர் இடத்திலாவது சந்தோசமாக, நிம்மதியாக இருக்க வேண்டும். வீட்டில் உறவுகளை இழந்து உடைமைகளை இழந்து சந்தோசம் இல்லை. அது மட்டுமன்றி 6 தடவை இடப்பெயர்வைச் சந்தித்து இருக்கிறார்கள். சரி அங்கேதான் நிம்மதி இல்லையென்றால் இங்கே படிக்க வந்தாலாவது நிம்மதி கிடைக்கும் என்றால் இங்கும் அவலம்தான் என்று கவலையுடன் கூறுகிறார் அந்த பாடசாலை அதிபர். மாணவர்கள் செருப்பு இல்லாது கூட வந்திருக்கிறார்கள். உண்மையிலே கூறப்போனால் அங்கு கல்வி கற்கும் 251 மாணவர்களும் உதவி தேவைப்படும் நிலையில்தான் இருக்கிறார்கள். எத்தனையோ பேர் வேறு இடங்களுக்குச் சென்ற போதும்கூட இவர்கள் இந்த ஊரிலே இத்தனை வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் இந்த வேதனை யாருக்குப் புரியும்.

இவர்கள் செய்த பாவம் என்ன? வறுமை நிலையில் பிறந்தது பாவமா? வறுமையிலும் கல்வி நிலையில் பிரகாசிக்க வேண்டும் என்று துடிப்பது பாவமா? உயர்ந்தவர்கள் உயர்த்தப்படுகிறார்கள். தாழ்ந்தவர்கள் தாழ்த்தப்படுகிறார்கள். பின்தங்கிய பாடசாலை என்கிறார்கள். எது பின்தங்கிய பாடசாலை ? ஆசிரியர்களை நியமிக்காமல் கல்விக்காக ஏங்கும் மாணவர்கள் இருக்கும் பாடசாலை பின்தங்கிய பாடசாலையா? வறுமையில் இருப்பவர்கள் பின்தங்கியவர்கள். வசதியுடன் வாழ்பவர்கள் அபிவிருத்தி அடைந்தவர்கள் என்று வரைவிலக்கணம் வகுத்தது யார்? பின் தங்கிய பாடசாலை என்று எதுவும் இல்லை. அந்த பாடசாலையில் 3 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்திருக்கிறார்கள்.

நாங்கள் செய்யும் ஒவ்வொரு விழாக்களுக்கும் ஒவ்வொரு கொப்பி என்று வாங்கிக் கொடுத்தாலே எத்தனையோ மாணவர்களுக்கு கல்வி என்ற ஒளியை ஏற்றி விடலாம். எம் உறவுகள் எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வியில் பிரகாசிக்கத் துடிக்கிறார்கள். அவர்கள் வாழ்வில் பிரகாசிக்க நாமும் கை கொடுப்போம்.

சுபா,
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மனதைக் கவரும் வாகனங்கள்







விந்தையான உலகில் விசித்திரங்களுக்குப் பஞ்சம் இல்லை. இயற்கை பல விந்தைகளைக் கொடுக்கின்றது. இயற்கையில் அதிக மாற்றங்களை நிகழ்த்த முடியாத மனிதன் தன்னுடைய ரசனைக்கு ஏற்ப பல படைப்புகளைப் படைக்கின்றான். படைப்பாளிகளின் ரசனைக்கு ஏற்ப படைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மனிதனின் வித்தியாசமான கற்பனைத் திறனால் உருவாக்கப்பட்ட சில வாகனங்களைக் காணலாம்.

# வித்தியாசமான கட்டடங்கள்





மனிதர்கள் வாழ்வதற்கும், பல்வேறு தேவைகளுக்கும் கட்டடங்களைக் கட்டுகிறார்கள். இவ்வாறான கட்டடங்களை வடிவமைக்கும் துறையே' கட்டடக்கலை எனப்படுகிறது. கட்டடங்களை வடிவமைப்பவரைக் கட்டடக் கலைஞர் என்று அழைப்பர். கட்டடக் கலை ஒரு மிகப்பழைய துறை ஆகும்.

உண்மையில் மனிதன் தனக்கென்று குடிசைகளை அமைக்கத் தொடங்கிய காலத்திலேயே கட்டடக் கலை உருவாகிவிட்டது எனலாம். கட்டடங்கள் ஒரு நாட்டின் வரலாற்றைப் பறைசாற்றும் விதமாகவும், அந்த நாட்டின் புகழ்பாடும் விதமாகவும் அமையும்.

இந்தக் கட்டடக் கலைகள் தற்போதுள்ள நவீன உலகத்தில் எவ்வளவு மாற்றம் அடைந்துள்ளன.

# தங்கத்தால் செய்யப்பட்ட கமெரா



தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போனாலும் அதன் தேவை மட்டும் ஒருபோதும் குறைவதில்லை. கழுத்துக்கு நகையாக அணியும் தங்கத்தால் படம் எடுக்கும் கமெராவாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. சீனாவின் 60ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தங்கத்தால் செய்யப்பட்ட கமெரா வடிவமைக்கப்பட்டது. இந்தக் கமெரா 24 கரட் தங்கத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கமெராவின் விலை 30,000 அமெரிக்க டொலர்களாகும்



# வித்தியாசமான இறக்கை கொண்ட பறவைகள்

வித்தியாசமான இறக்கைகள் மற்றும் வால்கள் கொண்ட அபூர்வ பறவைகள் எத்தனையோ உள்ள போதும் எமது கண்களுக்கு அவை தென்படுவதில்லை. இவற்றைப் பாருங்களேன்



# மியன்மாரின் சிறப்பம்சங்கள்



பல்வேறு நிலவளங்களை உள்ளடக்கிய தங்கநாடு என்று அழைக்கப்படும் மியான்மாரில் பகோடாஸ் புத்த கோயில்கள் அதிகம் இருக்கின்றன. 1948 ஆம் ஆண்டிலிருந்து தனிநாடு என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள மியன்மார் (பர்மா) 1937 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (5)

**பிறப்பு எண் 1 விதி எண் 2**

சுமாரான உயரத்துடன் அழகாகக் காட்சியளிக்கும் இவர்கள் பிறரிடம் அன்பாகப் பேசுவார்கள். எடுத்த காரியத்தை செவ்வனே செய்து முடிப்பார்கள். திறமைசாலிகள்.உடல் பலம் மிகுந்த இவர்கள், மனபலம் குறைந்தவர்கள்.

பாதி நாள்கள் குழப்பத்துடனும், பாதி நாள்கள் தெளிவுடனும் செயற்படுவார்கள். நல்ல வாழ்க்கைத் துணையை அடைவார்கள். அனைத்துத் துறைகளி லும் தேர்ச்சி பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றுவார்கள்.

எந்தத்தொழிலில் ஈடுபட்டாலும் தனக்குத்தானே குழம் பிப்போவார்கள். பணத்தைத் தேடி அலையும் விருப் பம் இருக்காது. இவர்களுக்குப் பணம் தானாகவே தேடி வரும்.

அனைவரோடும் அன்பாகப் பேசும் குணமுடைய இவர்கள் ஒரு சிலரை மட்டுமே தம்முடைய நண்பர்களாக்கிக்கொள்கின்றனர்.தெய்வ நம்பிக்கை அதிகமி ருக்கும். மிகவும் கடினமான உழைப்பாளிகள். நன்னடத் தையுள்ளவர்கள். குறிக்கோள் கொண்டு செயற்பட்டு வெற்றிபெறுவார்கள்.நல்ல வாழ்க்கைத் துணையுடன் வளமான வாழ்க்கையை வாழ்வார்கள்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,6,15,24,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், செஞ்சிவப்பு, பொன்னிறம், பச்சை, வெளிர் பச்சை

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், முத்து, கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஓபல், சந்திரகாந்தக் கல், சூரியகாந்தக் கல், டைகர்ஸ்ஐ


**பிறப்பு எண் 1 விதி எண்3**

சூரியன், குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் உலக அறிவு நிரம்பியவர்கள். அனுபவசாலிகள். எந்தவொரு காரியத்தையும் திறம்படச் செய்வார்கள். அமைதியானவர்கள். ஆன்மிக நாட்டமுடையவர்கள்.

சட்டம், கணிதம், சங்கீதம், இசை போன்ற துறைகளில் சிறப்படைவார்கள். எதையும் முன்கூட்டியே கணிக்கும் ஆற்றல் நிறைந்தவர்கள்.

பிறரை வேலை வாங்கும் திறமையும், ஒரு காரியத்தைச் சிறப்பாக ஆற்றும் வல்லமையும் இருக்கும். வாழ்க்கையில் உன்னத நிலையைக் கட்டாயம் அடைந்தே தீருவார்கள். ஆளுமைக் குணம் படைத்த இவர்கள் அரசாங்கத்தில் மிகப்பெரிய பொறுப்புமிக்க பதவியில் இருப்பார்கள்.

தோல்வியைக் கண்டு பயப்படமாட்டார்கள். நவநாகரிகப் பொருள்களில் ஆவல் அதிகம் உடையவர்கள். பிறருடைய உண்மையான மனநிலையை அறிந்து ஆழ்ந்த நட்புக் கொள்வார்கள். இறையுணர்வு மிக்கவர்கள். அனைத்துக்கலைகளிலும் தேர்ச்சியடைவார்



கள். நல்ல வாழ்க்கைத் துணையை அடைவார்கள்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,3,12,21,30,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், செஞ்சிவப்பு, பொன்னிறம், ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஓபல், சூரியகாந்தக் கல்.

**பிறப்பு எண் 1 விதி எண்4**

கம்பீரமான தோற்றமுடையவர்கள். நேர்மை தவறாதவர்கள். நேர்மைக்குப் புறம்பான எந்த விடயத்தையும் உதறித்தள்ளி விடுவார்கள். பேச்சில் இனிமையும், கண்டிப்பும் மிக்கவர்கள்.

தமக்குப் பிடிக்காத காரியத்தில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவார்கள். பிறருக்குத் தீங்கு செய்யமாட்டார்கள். உலக அறிவு நிரம்பியவர்கள். பெண்கள், அலங்காரப் பிரியர்களாக இருப்பார்கள். நறுமணப் பொருட்கள் மீது நாட்டமிருக்கும்.

சென்ற இடமெல்லாம் சிறப்புக்கள் இருக்கும்.நல்ல பேச்சுத்திறன் படைத்த இவர்கள் செயல்திறனும் மிக்கவர்கள். மிகுந்த புத்திசாலிகள். நலிந்த வர்களுக்குத் தாராளமாக உதவிகள் செய்வார்கள். தவறுகளை மன்னிக்கும் மனோபக்குவம் மிக்கவர்கள். புகழ்ச்சிக்கு மயங்க மாட்டார்கள். நேர்மைக்கும் பாசத்திற் கும் கட்டுப்பட்டவர்கள். தன்னை நம்பியவருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வார்கள். தெளிவான சுயசிந்தனை மிக்கவர்கள். பொது வாழ்க்கையில் பிரகாசிப்பார்கள்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,6,15,24,

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பொன்னிறம்,

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஓபல், சூரியகாந்தக் கல்.கோமேதகம்.

**பிறப்பு எண் 1 விதி எண் 5**

யாராலும் புரிந்து கொள்ள முடியாதவாறு இவர்களின் செய்கைகள் இருக்கும். சுறுசுறுப்பாகவே இயங்கக் கூடியவர்கள். பெரியவர்களிடமும், சான்றோர்களிடமும் மரியாதையுடன் நடந்து கொள்வார்கள். உணவு, உறக்கமில்லாமல் உழைப்பார்கள்.

மின்னல் வேகத்தில் செயற்பட்டு, விரைவில் எதையும் முடிக்குமள வுக்கு திறமையுடன் செயற்படுவார்கள். புதுமையை விரும்புவார்கள். கலைகளில் பற்று இருக்கும். வரவுக்குத் தகுந்த செலவு செய்வார்கள்.

பிறர் தவறுகளைத் தண்டிக்கும் மனமும், மன்னிக் கும் மனமும் இவர்களிடம் இருக்கும். பிறருடைய துயரத்தைப் போக்குவார்கள். கடவுள் பக்தி மிகுந்த வர்கள். எளிமையையும் கடைப்பிடிப்பார்கள்.

எப்போதும் சுறுசுறுப்புடன் இருப்பார்கள். தன்னிச் சையாகச் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். கண வன் மனைவிக்குள் பாசமிருக்கும். சுய முயற்சியி லேயே முன்னேறும் எண்ணமுடையவர்கள்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,5,14,23,

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பொன்னிறம், பச்சை, வெளிர் பச்சை, சாம்பல்

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஓபல், சூரியகாந்தக் கல்.வைரம்.

*(தொடரும்)*

## மாடு தின்ற தலைவர் மரம்!

தன் வினை தன்னைச் சுடும் எண்டு முந்தின ஆக்கள் சும்மாவே சொன்னவை. செய்ததுக்கு அனுபவிச்சுத்தானே ஆக வேணும்.

உந்தக் கச்சேரிக்கு முன்னாலை இருக்கிற ஓல்ட் பார்கின்ர மதில அவசர அவசரமாய் உடைச்சவைதானே. ஏதோ அதை கலராக்குறம் எண்டு சொல்லி ஐயாவும், திலகமுமாச் சேர்ந்து இடிச்சவை. அது இடிச்சு இப்ப கனநாளா போச்சு. பழைய கதையாயிட்டுது, அதை விடுங்கோவன்.

தலைவரின்ர பிறந்தநாள் கிட்டடியில வந்ததுதானே. தேசியத் தலைவர் எண்டு நினைச்சுப் போடாதேங்கோ. இது அவையளின்ர தலைவரின்ட பிறந்தநாள். அப்ப அந்த ஓல்ட் பார்க்கில தடல் புடலான ஏற்பாடு நடந்தது. என்னெண்டா மரம் நடப் போயினையாம். நட்டவை வடக்கின்ட நாட்டாமையும் அமைச்சரும். உந்த ஐயா இங்க தளபதியாய் இருக்கேக்க எத்தனை 'மரத்தை' வேரோட சரிச்சவர்.

அப்ப அவரின்ர பிறந்த நாளில ஐயாவும், ''எங்கட நலனுக் காவே'' பாடுபடுற (?) தியேட்டர் ஐயாவும் சேர்ந்து அந்த விழாவுக்குப் போச்சினம். ஆனா காணிக்குள்ள இருக்கிறவ போகேல்ல. அந்தக் காணிக்காரியை காய் வெட்டிட்டு விழா எடுக்கிறதிலதான் இவை எப்பவும் மும்மரமாய் நிக்கின. இதில்ல பிரச்சினை.

இவை சுபநேரம் பாத்து மரத்தை நட்டுப் போட்டு வந்திட்டின. சரி மரத்தை வைச்சாச்சு, எங்கட வேலை முடிஞ்சிட்டுது எண்டு அவை போயிட்டின. அவைக்கென்ன படத்தை எடுத்து தலைவருக்காண்டி தாங்கள் மரம் நட்டதைக் காட்டினாச் சரிதானே.

**ஏன்... எதற்கு... எப்படி?**

ஓல் பார்கின்ர மதில உடைச்சிட்டு அதுக்குள்ள மரத்தை நட்டுட்டு வந்தா அது வளர்ந்து கிடக்குமே. அதை அடுத்த நாள் வந்து மாடு பிரிச்சு மேஞ்சிட்டுப் போட்டுதாம். என்ன செய்யிறது. மதில இடிக்கேக்க தெரியேல்ல அந்த இடத்தின்ர பாதுகாப்பு. இப்ப மாடு திண்டாப் பிறகு விளங்கியிருக்கும். தன் வினை தன்னைச் சுடும் கண்டியளோ.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

நீ மேலும் மேலும் சிறந்து, வளர்ந்து பல்லாண்டுகள் வீறுநடைபோட மனமார்ந்த வாழ்த்துக்கள், உயர்தரத்தை நிரந்தரமாக்கிக் கொள்ள இடையறாது முயல். விமர்சனத்தை அனுமதிப்பதுடன் நின்றுவிடாதே, கூறப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதுதான் அத்தியாவசியம். இவைதான் உன் முன்னேற்றத்தின் படிக்கற்கள்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய்.**

* * *

அதிகாரவர்க்கத்தின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பல்வேறுபட்ட தடங்கல்களுக்கிடையேயும் பக்கச்சார்பற்று தமிழ் மக்களுக்காக வெளிவரும் உதயனின் வாசகியாக இருப்பதில் மிக மிக பெருமையடைகின்றேன். விளம்பரங்கள் அதிகம் என்ற குற்றச்சாட்டு வாசகர் மத்தியில் முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் செய்திகளுக்கான பக்கங்களை அதிகரித்து வாசகர்களின் எதிர்பார்பை உதயன் நிறைவேற்றுவான் என நம்புகின்றேன்.

**வந்தனா, கரவெட்டி.**

* * *

மக்கள் மனங்களில் நிறைந்து நின்று மக்கள் தேவைகளை நிறைவு செய்துவரும் உதயன் தனது 27 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளமை எமக்கு மிக்க மகிழ்ச்சியே. உதயன் நிறைவான சேவைகளை வழங்கி வருகின்ற போதும் சில சமயங்களில் மக்களிடையே விமர்சனங்களையும் சந்தித்து வருகின்றது. உதயன் கவனிக்க வேண்டியது [illegible] மட்டும்தான். வாசகர்களின் மனம் கோணாதபடி உதயன் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் எனது அவா.

**மு. மங்கையக்கரசி, முல்லைத்தீவு.**

* * *

தமிழ் மக்களின் சேவகனாக இருக்கும் உதயன் சில சமயங்களில் தமிழைக் கொலை செய்யுமளவுக்கு நடந்து விடுகின்றமை வேதனை தருகின்றது. வளர்ந்து வரும் சூழலுக்கு ஏற்ப உதயனும் தன்னை வளர்த்துக் கொண்டாலும் தமிழ்க் கொலைகளுக்குப் பஞ்சமே இல்லை. இதைக் கவனிக்க மாட்டீர்களா?

**என். நிஷாந்தன், சங்கானை.**

* * *

உதயனின் வாசகர் என்ற வகையில் முதற்கண் உதயனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். வாசகர் நெஞ்சங்களைக் குளிர்விக்கும் உதயன் பலதரப்பட்ட விடயங்களையும் தெளிவாகத் துணிவாக மக்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றது. எத்தனையோ துன்பங்களுக்கு மத்தியில் மக்களின் தகவலறியும் பசி போக்கும் உதயன் கோடி கோடி ஆண்டுகள் வாழ வாழ்த்துகின்றோம்.

**எம். குமரகுரு, மல்லாகம்.**

* * *

There is nothing to comment on the long, leading and outstanding media service of Uthayan to the Tamil speaking people. But the only minus point on the part of Uthayan is that the issues are overloaded with advertisements. Therefore, as suggested by many readers, it is better for Uthayan to cut short the number of advertisements eventhough they are an important source of income to the press, so that it could win the hearts of more and more readers in future.

Long live Uthayan- The morning star of the Tamil speaking people.

-Vathiri Vasan-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை தீபங்களாய் எப்போதும் எரிந்திடுவீர்

இருளின் ஒளியைக் காண்கின்ற போது பகலில் உனது அருமை தெரியவில்லை. அறியாதவர்களுக்கு மட்டும் சுட்டுக் கொண்ட விரலில் மீண்டும் சுடும். தெரியப்படுத்த மட்டும் நீ தீயானதால் விடுதலைப்பாதை எமக்கு வழிவிட்டது. அதனால் உன்னைப்போற்றினோம். அதுவரையில் தீபத்தின் அர்த்தம் எமக்கு புரியாமல் இருந்தது. எமக்கான நிலம். இது. இந்த நிலத்தில் வாழும் நாம் சுதந் திரமாக வாழ்வோம் என்ற நம்பிக்கை யில் உன்னை ஒளியேற்றினோம். புயல் காற்றிலும், அடைமழையிலும் அணையாது எரிந்தபோது மட்டும் எமது மண்ணில் இன்றும் தீபமாய் எரிகின்றாய். வரிசையாக நீ நிற்கின்றாய் ஆனாலும். ஒளிர்கின்ற உன்னை வேறுபடுத்த முடி யாதபோது எவற்றுக்கும் இல்லாத துணிவு உன்னிடம் உள்ளதால் எல்லோரும் ஏற்றுகிறோம். உனக்கானதுதான் கார்த்திகை மாதம் ஆனால். எமக்கான என்ற போதுதான் கூடுதலாகப் பிரகாசிக்கின்றாய். ஆயிரம் ஆயிரம் கண்ணீர்துளிகளில் நனைந்ததால் தான் மழையில் கூட எரிகின்றாய்.

எனது வீட்டின் வெளிச்சம் பெருமையறியாதபோது, பக்கத்து வீட்டில் இருந்து பிரகாசிக்கும் ஒளியானது எனது வீட்டின் யன்னலூடே உள் வந்து என்னைத் தட்டிப் பார்க்கும்போது தான் என்னை அறிகிறேன். தீபமாய் உணர்கிறேன். எத்தனை காலங்கள் வீட்டின் வாச லுக்கும் சுவாமி அறைக்கும், கிணற்றடிக்கும் கார்த்திகை தீபமானாய் இருண்டுபோன, நாலாபுறமும் அடைக்கப்பட்ட சூழலில் பற்றி எரிந்தபோது தான் உண்மையான கார்த்திகை தீபத்தின் முகம் தெரிந்தது. இதற்குள் வரி சைப்படி நின்ற ஆயிரம் ஆயிரம் பேரின் முகம் தெரிகிறது. பாதை காட்டிச் சென்றவர்களுக்காக மட்டும் ஒளிரட்டும். நிஜத் தூரிகை விரிந்து, உணர்வுகள் கோடிட வெளிச்சம் போல அடையாளப்பட்டுக் கிடக்கின்றவர்கள் நினைவுச் சுடரை அணைத்துவிடமுடியாது. இடங்களை அழித்து மறைத்துவிடமுடியாது.

உலகம் அறியப்படுகின்ற விருட்சத் தில் நிழல் தந்தவர்களின் வாழ்வும், மரணமும் எமது மண்ணில் வரலாறு. எல்லோரும் அறியப்படுகின்ற பண்பியல் நூலகத்தில் புத்தகமாக வாசிக்க விட்டுச் சென்றிருக்கிறார்கள். இலக்கியத்தின் கர்த்தாவாகவும், சிம்மாசனத்தின் அங்கீகாரமாகவும் படைப்புலத்தின் அத்திவாரமாகவும், அதில் குடியிருந்த இளம் எழுத்தாளர்களாகவும், குருவாகவும் வாழ்ந்தவர்கள் அறிவுக்கடலில் நீந்திச் சென்றவர்களாகவும், அதன் ஆழத்தினையும், நீளத்தினையும், முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கூடிய தகவல் களஞ்சியமாகவும், பொக்கிஷமா கவும் வாழ்ந்தார்கள். இன்று எமது மண்ணில் கார்த்திகைத் தீபமாய் ஒளிர்கின்றார்கள்.

வேர் வரை பெய்யும் சாரல் மழையில் பூத்துக்கிடக்கும் மல்லிகைச் செடியின் மகரந்தப் பரப்பை மொத்த பூமரங்களும் முத்தமிட்டதே இந்த நாளில் கலங்கி நிற்கின்ற தேடலும் அடங்கி, உடைந்து நிற்கின்றன. ஆங்காங்கே சிதைவுகளாகத் தூர்ந்து கொண்டு, உடல் முழுவதும் தூசி படர்ந்து தமிழ் அடையாளத்தினையே மாற்றிக்கொண்டிருக்கின்றன. எமது நிலத்தில் பறிபோகின்ற சந்தர்ப்பத்தில் தான் எமக்கான வரவானார்கள். ஈர முள்ள இதயங்களுக்கு பிறர் உடலில் காயம் ஏற்பட்டாலும் வலிக்கின்றது. ஈழம் என்ற அமைப்பில் ஒரு வளைவும் பிசகாமல் நடந்து சென்றும் வலிக்கவில்லை அவர்களுக்கு. முடியாமல் களைப்பில் மூழ்கியும் தன்னை முழுமையாக நினைக்கும் இந்த மென்மையான மனங்களுக்குத்தான் புரிகின்றது. அழுத்தமும் அதன் விளைவும் என் பிள்ளை இப்படித்தான் வருவான் என்று ஒரு பிள்ளையைப் பெற்றதாயின் கற்பனையில் ஒரு தீபம் எரியும். ஆனால் எல்லாத் தாய்மார்களும் உரிமைகொண்ட தமிழ்ப் பிள்ளையானபோது அந்தத் தாயின் மனதில் எத்தனை தீபங்கள் எரியும்.

தீபங்கள் மழையிலும் பிரகாசமாக எரியும். இது கார்த்திகை மாதம். இரத்த நிலம் கசியும் மனங்களில் குற்றுயிராய்த் துடிக்கும் தாக்கங்கள் உள்ள தமிழர் சமூகத்தில் வாழ்வு ஒடுங்கிய பட்சத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது. வெளி உலகத்துக்கே தெரியாமல் விழுந்த அடிகள் தொடர்ந்தும் இருளுக்குள் தள்ளப்பட்டு கிழக்குத்திசை தெரியாமல் மறைந்துகொண்டிருக்கின்றோம். வானத்தில் இருந்து இறங்கி வந்து நட்சத்திரங்களையும், நிலவினையும் பறித்துச் செல்கின்ற காலம் ஒரு நாள் வரும் அந்த நாளில் எமது ஊரில் தீபங்கள் ஏற்றுவோம். கருக்கொண்ட வானம் மீண்டும் தெளிவு கொண்டு கிழக்குப் பக்கமாக சிவப்புக் கொண்டு மெதுவாக வெளிக்கத் தொடங்கும். வெண்மைக் கூரைகள் முகம் கழுவாமல் அழகாக அழுக்குப் பிடிக்காமல் தூய்மையாக இருக்கின்ற வாழ்வில் தொடர்ந்தும் பச்சிக்காரன்களால் துயரங்கள் சூனியமாக ஒன்றுமேயில்லாத வெற்றிடமாக, பக்கத்தில் கேட்ட, நேரில் பார்த்து உணர்ந்த அதிர்வில் இடை விட்டு மீண்டும் இயக்கம் தடைப்பட்டிருக்கின்றது.

அதிகாலை வேளை பச்சை நிறம் கண்ட சூரியன் பயத்துடன் விடிகிறது. அடைமழையில் கரு இருளில் வீட் டுக்குள் விளக்கேற்றி வைப்போம். அணையாது விடிய விடிய ஏற்றி வைப் போம். கோயில் மணி ஓசையில் மனத் தீபங்களில் உணர்ந்து கொள்வோம். எங்கள் நினைவுகளில் அழியாத இருப்பிடமாக உட்கார்ந்தவர்களை என்றும் நினைத்துக்கொண்டிருக்கும் போது இந்த நாளில் கூடுதலான உணர்வுகளில் உடல் ரணப்படுகிறது. இருப்பிடங்கள் எங்கே? அழிக்கப்படவில்லை எங்கள் மனங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உலகப் பரப்பில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வேண்டும் எமக்குத் தீபம் ஏற்ற ஒருநாள் அந்த நாளில் எல்லோரையும் பார்க்க வேண்டும். நினைவுச் சுவடுகள் அழிக்கப்பட லாம் எமது மனங்களில் இருந்து அழிக்க முடியாது. கொட்டும் மழையில் தீபத்தின் முன்னே நின்று குழறி அழுத நாள்களில் தீபங்கள் இன்னும் பிரகாசமாக எரிந்தது இன்றைய நாளில் மழையில் நின்றும் அழுவது தெரியவில்லையா?.

எங்கள் முகங்களைப்பாருங்கள். ஒரு கணம் இங்கே நாங்கள் சொல்லுவதைக் கேளுங்கள். பாதுகாப்பு இல்லாதபோது மீண்டும் மீண்டும் எமது நெஞ்சைத் தட்டுகிறோம். எங்கள் மனங்களில் இருக்கும் நினைவுகளின் ஆழத்தில் கேட்கிறதா. எம்மால் முடியவில்லை. கைகோர்த்து நில்லுங்கள், விழாமல் பிடியுங்கள். விழுந்தவர்கள் தூக்குகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே எழுந்து நில்லுங்கள். எங்கள் குரல் ஒன்றாக இருக்கட்டும். எங்கள் [illegible] ஒன்றாக இருக்கட்டும் இந்தத் தீபக் கார்த்திகை நாளில் மீண்டும் எழுவோம்.

**பித்தன்**

# பாஸ் பண்ணினாலும் கவலை

## கோணல் கோலங்கள்

நீண்ட நாளைக்குப் பின்னர் ஒரு ஓய்வு நாள் கிடைத்திருந்தது.நண்பர் ஒருவரின் மகன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக ஒரு பையில் நிறைய ''சொக்லேட்டுக்களை'' தந்துவிட்டுப் போய் ஒரு மாதம் ஆகியிருந்தது. அவனை வீட்டுக்குச் சென்று வாழ்த்த வேண்டும் என்ற நினைப்பு பல முறை எழுந்த போதும், வேலைப்பழு அதனைப் பிற்போட வைத்துக் கொண்டே இருந்தது. இன்றைக்கு எப்படியாவது அங்கு சென்று விடவேண்டும் என்ற நினைப்பைக் கஷ்டப்பட்டு நடைமுறைப் படுத்தினேன்.

மழை வெள்ளத்தைக் கிழித்துக் கொண்டு, வீதியில் புதிதாகத் தோன்றியிருந்த பள்ளங்களில் எல்லாம் விழுந்தெழும்பி நண்பரின் வீட்டை அடைந்தேன். ஆனால், நண்பர் வீட்டின் முன்னால் ஒரு கதிரையில் நாங்கள் வந்ததையும் அறியாதவராய் உட்கார்ந்திருந்தார். வழமையான கலகலப்பு அவர் முகத்தில் காணாமல் போயிருந்தது. எதையோ பறி கொடுத்தவர் போல அவரது முகம் களையிழந்திருந்தது.

மகனும் அவருடைய நினைப்புக்கு கேடு வைக்காமல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து விட்டான். பிறகென்ன கவலை? உண்மையில் அவர் சந்தோஷத்தின் உச்சியில் அல்லவா இருக்க வேண்டும். ஆனால் அதற்கு' நேர்மாறாக இருக்கிறாரே. இப்படி பலவாறாக எண்ணிக் கொண்டு மெதுவாகச் செருமினேன். அந்தச் சத்தம் கேட்டதும் நனவுலகுக்கு அவர் வந்தார்.

''எந்தக் கப்பல் கவிண்டு போச்சுது? நான் வந்ததையும் கவனிக்காமல் அப்பிடி என்ன யோசினை?'' எனது கேள்விக்கு நண்பர் பதில் சொல்ல கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்டார்.

''இல்லாதவனுக்கு ஒரு கவலை. இருக்கிறவனுக்கு ஆயிரத்தெட்டுக் கவலையெண்டு சொல்லுவினம் அது சரிபோலதான் கிடக்குது. என்ர பெடியன் ஏனடா 'கொலசிப்' பாஸ் பண்ணினான் எண்டு இப்ப கவலை யாய் கிடக்கு'' நண்பரின் பதிலைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'என்னடா இவனுக்குப் பைத்தியம் ஏதாவது பிடிச்சிட்டுதோ? மற்றவங்கள் தங்கடை பிள்ளையள் பாஸ் பண்ணேல்ல எண்டு கவலைப்பட, இவன் மட்டும் தன்ர பிள்ளை பாஸ் பண்ணினதை நினைச்சு கவலைப் படுறானே?' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டேன். அதை எப்படியோ நண்பன் மோப்பம் பிடித்து விட்டான்.

''எனக்கு விசர் எண்டு நினைக்கிறியோ? என்ர நிலையில நீ இருந்தாலும் இப்பிடித்தான் சொல்லியிருப்பாய்.'' என்று சொல்லிவிட்டு என்னையே கூர்ந்து பார்த்தான்.

''பின்ன, பிள்ளையள் கொலசிப் பாஸ் பண்ணினால் ஆரும் கவலைப்படுவாங்களோ?''- இது நான்.

''கவலைப்படுற காலம்தான் இப்ப. பிள்ளை கொலசிப் பாஸ்பண்ணின உடன ஊர்முழுக்கக் கண்டோஸ் குடுக்க வேணும். பிறகு பள்ளிக் கூடத்தில ரீச்சர்மாருக்கு ஒரு சின்னப் பார்ட்டி வைக்க வேணும். அதோட ஸ்கூல்லையும், ரீயூசனிலையும் படிப்பிச்ச மாஸ்ரர்மாருக்கு புது உடுப்பு எடுத்துக் குடுக்க வேணும். பள்ளிக் கூடத்துக்கு பாஸ் பண்ணினத்துக்காக ஏதாவது அன்பளிப்பு பொருள் வாங்கிக் குடுக்க வேணும். புதுசா வேற பெரிய பள்ளிக்கூடத்தில சேர்க்கிறதுக்கு டொனேசன் கட்ட வேணும்..... '' மூச்சு விடாமல் தன்னுடைய செலவினங்களைப் பற்றி நண்பன் அடுக்கிக் கொண்டே போகையில் தான் அவனுடைய கவலைக்கான காரணம் தெரிந்தது. அவனது பொருளாதாரம் நடுத்தரமானது. அரச வேலையில் அவன் ஈட்டுகின்ற சம்பளத்தை வைத்துத்தான் மூன்று பிள்ளைகள் கொண்ட அவனது குடும்ப வண்டி ஒரு மாதத்துக்கு ஓடவேண்டும். இந்த நிலையில் எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற பெரிய செலவினங்கள், பட்ஜெட்டில் துண்டுவிழும் தொகையை உயர்த்தி விடுகிறது. அதை ஈடு செய்வதற்கு யாரிடமாவது கடன் வாங்கினால் தான் ஓரளவுக்கு 'தாக்காட்ட' முடியும்.

''இதோட முடிஞ்சாப் பரவாயில்லை. பள்ளிக்கூடக்காரரும் ரியூசன்காரரும் தங்கட புகழைப் பரப்புறதுக்கான பரிசளிப்புவிழாக்களை வைக்கினம். அதுக்குப் பிள்ளையள் பட்டதாரிகள் மாதிரி தொப்பி, கோட் போடவேணும். அது தைக்கவே ஐயாயிரத்துக்கு மேல முடியுது. பள்ளிக் கூடத்துக்கு ஒரு கலர், ரியூசனுக்கு இன்னொரு கலர் எண்டு ரெண்டு கோட் தைக்க வேணும். அதை விட மற்றப் பிள்ளையளின்ரை குடும்பங்கள் செய்யிறமாதிரி பேப்பரில எங்கடை பிள்ளையை நாங்களே பாராட்டி வாழ்த்தி ஒரு விளம்பரம் போட வேணும். இல்லாட்டி பிள்ளை முகத்தைத் தூக்கி வைச்சுக் கொண்டிருக்கும்.'' திரௌபதையின் துகில் போல நீண்டு கொண்டே செல்கின்ற தன்னுடைய செலவீனங்களை நண்பர் சொல் லிக் கொண்டே போனார்.

அவரைப் போலவே நிறையப் பெற்றோரை யாழ்ப்பாணத்தில் காணமுடிகிறது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் மாதாந்த உதவிப் பணம் வறிய மாணவர்களுக்குக் கிடைக்கும். ஆனால் அதைவிட அதிக தொகையை அவர்கள் நண்பர் சொல்வது போல ''கொலசிப் பாரம்பரிய நடவடிக்கைகளுக்காக'' செலவிட வேண்டியுள்ளது. விரும்பியோ, விரும்பாமலோ மற்றவர்கள் செய்வதைப் போலத் தாமும் செய்ய பெற்றோர் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இல்லாவிட்டால் பிள்ளையின் கௌரவம் பாதிப்படைந்துவிடும் என்றும் பெற்றோர் எண்ணுகின்றனர்.

வசதி குறைந்த பிள்ளைகளுக்காவது மாதாந்த உதவிப் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எங்காவது கடன்பட்டு மேற்சொன்ன செலவுகளைச் செய்யமுடியும். ஆனால் அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு மாதாந்த உதவிப் பணமும் கிடைக்காது. விலைவாசி உயர்வுக்கேற்ற வேதனம் கிடைக்காமல் இப்போதே பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமல் தத்தளிக்கையில், புதிதாக உருவாகி இருக்கும் 'கொலசிப் பாரம்பரியம்' அவர்களின் சுமையை இன்னும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன தமது மாணவர்களின் பெறுபேற்றைத் தம்பட்டம் அடித்துக் கொள்வதற்காக தரம் ஐந்து மாணவர்களுக்கு தலையில் பட்டதாரித் தொப்பியும், நீள அங்கியும் அணிவித்துத் தமது தரத்தை உயர்த்துவதாக நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் அது எத்தனை பெற்றோரின் வயிற்றில் அடிக்கிறது என்பது அவர்களுக்குத் தெரிவதேயில்லை.

**ஓடுகாலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










அதிவேகத்துக்கு முறையாக
பிரவேசிக்கும் வெளிச்செல்லும் இடங்கள்

கொழும்பு - இரத்தினபுரி பாதையில் 22ஆவது கிலோ மீற்றரிலுள்ள மாக்கும்புரவிலிருந்து காலிக்கு அண்மையிலுள்ள பின்னதூவ வரையில் இவ் அதிவேகப் பாதை நிறுவப்பட்டுள்ளது.

- கொழும்பு - இரத்தினபுரி பாதையில் : (A004) கொட்டாவை
- கொழும்பு - ஹொரானை பாதையில் : (B084) கஹத்துடுவை
- பானதுரை - ஹொரானை பாதையில் : (A008) கெலனிகம
- நாகொடை - மத்துகமை பாதையில் : (B304) தொடங்கொடை
- மத்துகமை - அளுத்கமை பாதையில் : (B157) வெலிப்பென்ன
- அம்பலங்கொடை - எல்பிட்டிய பாதையில் : (B014) குருன்துகஹஹெத்தெக்ம
- ஹிக்கடுவை - பத்தேகம நில்ஹேன பாதையில் : (B153) பத்தேகமை
- காலி - உடுகமை பாதையில் : (B129) பின்னதூவ

மேலுள்ள இடங்களினூடாக அதிவேகப் பாதைக்கு பிரவேசிக்கவும் அதிவேகப் பாதையிலிருந்து வெளிச்செல்லவும் முடியும்.

- அதிவேகப் பாதையில் பாதசாரிகளுக்கு பயணிக்க முடியாது அத்துடன், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ட்ரெக்டர்கள், சைக்கிள்கள் ஆகிய மணிக்கு 100 கி.மீ வேகத்தில் பாதுகாப்பாக செலுத்த முடியாத வாகனங்களை அதிவேகப் பாதையில் செலுத்த முடியாது.
- மேலும், குறித்த அளவை விட அதிக பயணிகளை ஏந்திய / பொருட்களை தாங்கிய (Over Loaded) வாகனங்கள், மோட்டார் வாகன சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலும் கூடிய உயரத்தைக்கொண்ட அல்லது நீளத்தைக்கொண்ட வாகனங்கள் தரக்குறைவான டயர்களையுடைய, அதிக புகையினை வெளித்தல்லும், ஒளி விளக்குகள் மற்றும் சமிக்ஞை விளக்குகள் செயற்படாத, மணிக்கு 100 கி. மீ வேகத்தில் பாதுகாப்பாக செலுத்த இயலாத வாகனங்கள் அதிவேகப் பாதையில் செலுத்துவதற்கு தகுதியற்றவையாகும்.
- அத்துடன் டயர்களின் அமுக்கம் குறித்த அளவில் இருத்தல் வேண்டும்.

பாதுகாப்புடன்கூடிய அதிவேகப் பயணத்திற்காக விதிமுறைகளை முறைப்படி பின்பற்றுங்கள்.
(முறையாக சட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்த விஷேட பொலிஸ் சேவையொன்று அதிவேகப் பாதையினுள் நிறுவப்பட்டுள்ளது.)

அவசர அழைப்பிலக்கம்
அதிவேகப் பாதையை உபயோகிக்கும்போதுள்ள பிரச்சினைகளுக்காக
1969

MOTOR PLUS
யதார்த்தத்திற்கோர் காப்புறுதி
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
Mindfor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நாளில் கைதிகள் மீது தாக்குதல்: எத்தகைய வெளிப்பாட்டைக் காட்டுகிறது?

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். மாவீரர் தினத்தன்று இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை உலகளா விய ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக அரசியல்வாதிகளிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரியிடமும் நாம் வினவினோம்.

## இனவாதத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு

**சிறிதுங்க ஜயசூரிய**



சிங்கள இனவாதத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடே இந்தத் தாக்குதல் சம்பவம்.

1983ஆம் ஆண்டு சிறைச்சாலைக்குள் வைத்து குட்டிமணி உட்படச் சிலர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அவ்வாறானதொரு சம்பவத்தை மீண்டும் நினைவு கூர்ந்துள்ளது தற்போதைய அரசு. கைதியொருவர் சிறைச்சாலைக்குள் குற்றமிழைத்தால், அவர்களைத் தண்டிப்பதற்கான அதிகாரம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இல்லை.

நாடு இந்தப் பாதையில் செல்லுமானால், இனங்களுக்கிடையில் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படப்போகிறது. தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றார் ஐக்கிய சோஷலிஸ கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய.

## சர்வாதிகாரத்தின் அராஜகம்!

**ஜயலத் ஜயவர்த்தன**



இந்த ஆட்சிபீடத்தின் தமிழருக்கெதிரான உச்சக்கட்ட எதிர்ப்புச் செயற்பாடே இது.

தமிழ் அரசியல் கைதிகளை மட்டும் தாக்கவில்லை. அவர்கள் வணங்கும் ஆலயத்தையும் அதிகாரிகள் அடித்து உடைத்துள்ளனர்.


இந்தச் சம்பவத்தை நாடாளுமன்றில் வைத்தே நான் கண்டித்துள்ளேன். எந்தவகையிலும் இந்தச் சம்பவத்தை நியாயப்படுத்த முடியாது.

இவை எல்லாம் சர்வாதிகாரத்தின் வெளிப்பாடுகளே.

குறித்த சம்பவம் தொடர்பாக அரசு உடன் விசாரணைகளை ஆரம்பித்து உண்மைச் சம்பவத்தை நாட்டுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி.

## நவ.27 தமிழர் அச்சுறுத்தல் தினம்

**மனோ கணேசன்**



நவம்பர் 27ஆம் திகதியை தமிழர் அச்சுறுத்தல் தினமாக மாற்றியமைக்க அரசு முயற்சிக்கின்றது. இதன் ஓர் அங்கமே அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்பட்ட சம்பவமாகும்.

நவம்பர் 27இல் இருந்த பயம் தற்போது இல்லை என்று தென்னிலங்கையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெருமிதம் அடைகின்றார்.

ஆனால், அதே 27ஆம் திகதி அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஒருபுறம் அச்சம் இல்லை என்று கூற அநுராதபுரத்தில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளதானது தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக நவம்பர் 27 தமிழர் அச்சுறுத்தல் தினமாக மாற்றப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து அமைச்சரவை அந்தஸ்துள்ள தமிழ் அமைச்சர்கள் என்ற வகையில் ஆறுமுகன் தொண்டமானும், டக்ளஸும் இந்த விடயத்தில் தலையிடவேண்டும். அதுவும் அரசியல் விவகாரத்தை மறந்து - என்றார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

## இது சோடிக்கப்பட்ட கதை- அசோக்க ஹப்பு ஆரச்சி

இல்லை. இல்லை... இது அப்பட்டமான பொய்; இது வொரு சோடிக்கப்பட்ட கதை.

அதிகாரிகள் வழமையான பாணியில் சோதனை நடத்தினரே தவிர, தாக்குதல் நடத்தவில்லை.

கைதிகளை அதிகாரிகள் கடுமையாகத் தாக்கியிருந்தால், அதுவும் கொட்டும் மழைக்கு மத்தியில் மைதானத்தில் நிற்க வைத்துத் தாக்கியிருந்தால் சிறிய காயமேனும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால், இங்கு ஒரு கைதியேனும் காயப்படவுமில்லை, வைத்தியசாலையில் சேர்க்கப்படவுமில்லை.

அப்படியானால், எப்படி இந்தக் கதையை நம்புவது. அப்பட்டமான பொய். அதிகாரிகளுக்கு சேறு பூசும் நடவடிக்கையை கைதிகள் முன்னெடுத்துள்ளனர்.

மாவீரர் தினத்தன்று இவ்வாறானதொரு கட்டுக்கதையை கட்டவிழ்த்துவிட்டதால் உலகம் அதனை ஏற்கும் என நம்பியே கைதிகள் இவ்வாறு செய்துள்ளனர்.

இதில் எதுவித உண்மையும் இல்லை என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

வழமைபோல் சோதனை நடவடிக்கையே முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கணிசமான அளவு கைத்தொலைபேசிகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

சிலவேளை இந்தக் கோபமாகவும் இருக்கலாம் - என்றார் மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் அசோக்க ஹப்பு ஆரச்சி.

## கூட்டுறவு வங்கியில் பட்டதாரிகளுக்கு பயிற்சி

குருநாகல், நவ.30

வடமேல் மாகாண கூட்டுறவு வங்கியில் 15 பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது எனக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான முகாமைத்துவப் பணிப்பாளர் எல்.பீ. அமரக்கோன் தெரிவித்தார்.

அவர்களுக்குக் கூட்டுறவுத் துறை, நீதி, வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் நிதி விவகாரம் தொடர்பாகப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் ஊதியமும் வழங்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கீழ் குருநாகல், குளியாப்பிட்டிய மற்றும் சிலாபம் உதவி ஆணையாளர் அலுவலகங்களின் கீழ் 33 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

இவ்வாறான பயிற்சிகள் மூலம் அவர்களது ஆளுமையை விருத்திசெய்வதுடன் தேவைக்கு ஏற்ற வகையில் பயிற்சியை முடித்தவர்களைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-சி)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப திட்டமில்லை

### சபையில் ஐ.தே.கட்சி எம்.பி. விஜயகலா

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை. மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை.

வீடு வாசல்களை இழந்த நிலையில் அல்லல்படும் இந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

வீடு, வாசல்களை அமைக்காது மீளக்குடிமயர்ந்த மக்கள் எங்கு வாழ்வது? என்பது குறித்து அரசு சிந்திக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சபையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவோ அந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பவோ இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எத்தகைய திட்டங்களும் அமுல் படுத்தப்படவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். வாழ்க்கையை வெறுத்த நிலையில் வாழ்ந்து வரும் இந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்தத்தால் உறவுகள், உடைமைகளை இழந்த தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றனர். அனைத்தையும் இழந்து துன்பத்தின் எல்லைவரை சென்ற மக்களுக்கு இனியாவது விடிவு பிறக்க வேண்டும். அந்த விடிவை நோக்கியதாக அரசின் செயற்பாடுகள் அமைய வேண்டியது இன்றைய கால கட்டத்தில் அவசியமான தாகும்.

யுத்தத்தால் ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகவும் சித்த சுவாதீனமற்றவர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள விதவைகள் மற்றும் அங்கவீனர்களுக்கு இந்த வரவு- செலவுத் திட்டத்தில் [illegible] நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவ தற்கோ அல்லது அவர்களுக்குச் சுய தொழில்களை வழங்குவதற்கோ அந்த வரவு- செலவுத் திட்டத்தில் எத்தகைய திட்டங்களும் இல்லை.

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்ந்தும் வாழ்க்கையைப் வெறுத்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்குச் சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் வகையில் திட்டங்களை அரசு அமுல்படுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தின் பின்னர் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேலை வாய்ப்பு என்பது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் அவசியமாக உள்ளது.

இத்தகைய வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு எத்தகைய திட்டங்களும் அரசின் வரவு- செலவுத் திட்டத்தில் இல்லை. இந்த விடயங்களில் அரசு கவனம் எடுக்க வேண்டும்.- என்றார். (ம)

## இப்படியும் மறதி

இன்றைய அவரச உல கில் நாமெல்லாம் நாளாந்தம் எதையெதையோ மறந்து தான் போகிறோம். சிலர் "ஐயோ! எனது மண்டை மங்கிப் போய்விட்டது. எதையுமே ஞாபகத்தில் வைத்திக் கொள்ள முடியவில்லையே" என்று கூடப் புலம்புவார்கள். ஆனாலும் யாராவது தனது தாயை மறந்ததுண்டா? கீழே செய்தியை வாசியுங்கள்!

விண்ணப்பப்பத்திரமொன்றை நிரப்பிக் கொண்டிருந்த 41 வயது நபரொருவர் தனது தாயின் பெயரை மறந்துபோய் தடுமாறிய சம்பவமொன்று கம்பஹா பிரதேசத்தில் நடந்துள்ளது.

மேற்படி நபரின் காணியில் ஏற்பட்ட பிரச்சினையொன்றுக்குத் தீர்வுகாண பிறப்புச் சான்றிதழ் தேவைப்பட்டது. கைவசம் அது இல்லாததால் கிராம ஆசிரிய ஒருவரிடம் சென்று அதற்கான விண்ணப்பப் பத்திர மொன்றை நிரப்பச் சொன்னார். தனது பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம், தந்தையின் பெயர் ஆகியவற்றை மளமளவென கூறியவர் அப்படிவத்தில் தாயின் பெயரை எழுதவேண்டிய இடம் வந்ததும் தடுமாறிப் போனார்.

தாயின் பெயரைக் கட்டாயம் எழுதித்தான் ஆக வேண்டுமா என ஆசிரியரிடம் கேட்டார். அது கட்டாயம் தேவை என ஆசிரியர் கூறியதும், "சரி சேர், அம்மாவின் பெயரை மறந்து போனேன். அதை நாளைக்கு எழுதிக் கொள்வோம்.

அம்மா இறந்து போய் வெகு காலமாகிறது. அவரது பெயரை கொப்பியொன்றில் எழுதி வைத்திருக்கிறேன். நாளைக்கு அதை எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டு நடையைக் கட்டினாராம் அவர். ஆசிரியரோ திகைத்துப் போய்விட்டாராம். அம்மாவின் பெயரையே மறந்தபோன இந்த ஆசாமி பற்றி யாரிடம் போய்ச் சொல்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org